
பாரதம்தந்தபரிசு
கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

சிவநெறிக் கழகம் -- கீரிமலை

நாவன்மைப் போட்டி 1984

பெயர் நடராஜா - தமிழரசி

பாடசாலை வட்டு இந்துக்கல்லூரி

பிரிவு ஜே மேற்பிரிவு

பரிசு இரண்டாம் பரிசு

1984-02-29 சிவநெறிக் கழகச் செயலர்

சிவநெறிக் கழகம்

நகுலேஸ்வர தேவஸ்தானம்

கீரிமலை

காங்கேசன்துறை

பாரதம் தந்த பரிசு

கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான நாடகப் போட்டிகளில் 1965 முதல் 1969 வரை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முதற்பரிசு பெற்ற தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியினரின் நாடகங்கள்.

பழைய மாணவர் சங்கம்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

முதற் பதிப்பு : 1980 ஒக்ரோபர்
உரிமைகள் ஆசிரியர்க்கு

அச்சுப்பதிவு : ஆசீர்வாதம் அச்சகம்
50, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

விலை ரூபா 10/=

PĀRATHAM THANTHA PARISU

— A Collection of Five Playlets
which won First Places
in the All Island Drama
Contest for Schools Organised
by the Drama Panel of the
Ceylon Arts Council for
Five Consequtive years from 1965

By Kavignar S. Cathirasarpillai
Play wright, Director & Poet.

First Edition : October 1980
Copyright Reserved
Price : Rs. 10/=

Printed by : Aseervatham Press
50, Kandy Road
Jaffna.

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

வாழ்த்துரை

கலைஞர், கவிஞர், பண்டிதர், பௌராணிகர், இயற்றமிழாசிரியர், நாடகாசிரியர் என்றின்னோரன்ன சிறப்புப் பெயர்களுக்குப் பாத்திரமாய் விளங்குபவர், ஆசிரியர் திரு. செ. கதிரேசர்பிள்ளை.

பிள்ளை, வேதரிஷிகளின் வழிவந்த சநாதன பாரத தர்மத்திற் பெரிதும் ஈடுபாடுள்ளவர்.

மகா பாரதத்தைப் பாரத தர்மம் என்றே கூறலாம். 'பாரதம் படிக்கப் பழவினை தீரும்' என்பது பழமொழி.

பாரதத்தில் ஒருசில பகுதிகளைத் தெரிந்தெடுத்து,

1. காங்கேயன் சபதம்
2. ஜீவமணி
3. அம்பையின் வஞ்சினம்
4. கோமகளும் குருமகளும்
5. குரு தட்சிணை

என்ற தலையங்கங்களில், பிள்ளையவர்கள் வகுத்த நாடகங்கள்,

இலங்கைக் கலைக் கழகத்தினர் நடத்திய பாடசாலைகளின் நாடகப் போட்டியில், முதற்பரிசு பெற்றுப் புகழ் பூத்தவை.

குறிப்பிட்ட நாடகங்கள் என்றும் நின்று பயன்தரும் வகையில் புத்தக உருவில் 'பாரதம் தந்த பரிசு' என்ற பெயரில் வருவது போற்றத்தக்கது. வெளியீட்டை, மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் செய்து வைப்பதற்கு நன்றி தெரிவிப்போமாக.

மாணவர் சங்கம் தமிழ் மக்களுக்கு அளித்ததொரு சிறந்த பரிசு,

'பாரதம் தந்த
பரிசு'

நாடக வித்தகர்
கலையரசு
க. சொர்ணலிங்கம்

வாழ்த்துரை

கவிஞர் கதிரேசர்பிள்ளையின் நாடகங்களை நூல் வடிவாக்கும்முயற்சியில், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பழையமாணவர்கள் முனைந்து செயலாற்றுவதை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். இலங்கைக் கலைக்கழகம் பாடசாலைகளுக்கிடையில் நடத்திய நாடகப் போட்டிக்காக அவர் எழுதித் தயாரித்த நாடகங்கள் அவை. அவற்றுள் முதல்நாடகம் அமோக வெற்றியீட்டியது. இன்று நூல் வடிவாகும் அவரது ஐந்து நாடகங்களும் மேடையேற்றப் பட்டவை. அவை ஐந்தையும் நான் பார்த்திருக்கின்றேன். அவரது நாடகங்களில் உள்ள சிறப்பு என்னவென்றால் அவற்றில் உள்ள வசனங்கள் யாவும் நடிக்கக் கூடியவையாக அமைந்துள்ளமையாகும். அவை இனிய செந்தமிழிற் பாத்திரப் பண்புக்கேற்றவாறு எழுதப்பட்டவையாகும்.

கவிஞர் கதிரேசர்பிள்ளையினது நாடகங்கள் நூல்வடிவு பெறவேண்டுமென நான் நீண்டநாளாக எதிர்பார்த்தேன். என் எதிர்பார்ப்பு இப்பொழுதுதான் கைகூடுகிறது. பாடசாலைகளில் நல்ல நாடகங்களை மேடையேற்ற விரும்பு வோருக்கு இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

நாடகங்கள் சிறப்படைவதற்கு ஒழுங்கான ஒத்திகைகள் வேண்டும். இவரது நாடகங்களின் வெற்றிக்கு முறையான ஒத்திகைகளே காரணமாகும். இந்த நாடகங்கள் ஐந்தும் என்றும் யாவராலும் போற்றப்படக்கூடிய கதையும் கருவும் உடையவை. மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்கள் இந்நாடகங்களை நூல்வடிவு செய்வதன் மூலம் நாடக உலகிற்குப் பேருதவி செய்கிறார்களென யான் உறுதியாக நம்புகிறேன். இவர்களது இந்தமுயற்சி வெற்றிபெற நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்
துணைவேந்தர்
பேராசிரியர்
சு. வித்தியானந்தன்

அணிந்துரை

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. செ. கதிரேசர்பிள்ளை எழுதித் தயாரித்து, மேடையேற்றி, பரிசுபெற்ற ஐந்து நாடகங்கள் பாரதம் தந்த பரிசு என்னும் தொகுதியாக வெளிவருகின்றன. 1965 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து ஐந்தாண்டுகளாக இலங்கைக் கலைக் கழகத்தின் தமிழ் நாடகக் குழு நடத்திய நாடகப் போட்டியிலே, ஐந்து தடவையும் முதற் பரிசிலைப் பெற்றனர் மகாஜனக் கல்லூரியினர். அம்மாணவர்கள் நடிப்பதற்காக நாடகப் பிரதிகளை எழுதியவர் திரு. செ. கதிரேசர்பிள்ளை. ஐந்து நாடகங்களும் மகாபாரத இதிகாசத்தின் பல்வேறு கட்டங்களைத் தழுவி எழுதப்பட்ட கதைகளைக் கொண்டன. அதனால், இந் நாடகங்களைக் கொண்ட தொகுதி பாரதம் தந்த பரிசு எனப் பொருத்தமான பெயர் கொண்டமை கின்றது. பாரதக் கதையை மையமாகக்கொண்ட நாடகங்கள் தொடர்ந்து ஐந்து தடவையாக மகாஜனவுக்குப் பரிசு தேடிக் கொடுத்தன என்றும், பாரதம் தமிழ் மக்களுக்கு அளித்த பரிசு இந்நாடகத் தொகுதி என்றும் இருபொருள் படும் படியாகத் தொகுதித் தலைப்பு அமைகிறது.

எனக்கும் இந்நாடகத் தொகுதிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்நாடகப் பிரதிகளைப் பரிசீலித்தும், மேடையேற்றுதற்குரிய போட்டி ஒழுங்குகளை மேற்கொண்டும் வந்த கலைக் கழக நாடகக் குழுவின் தலைவராக நான்

அப்பொழுது கடமையாற்றினேன். இந்நாடகங்கள் மேடையிலே நடிக்கப்பட்ட வகையும், அந்நாடகத்திலே தோன்றிய பாத்திரங்களின் சிறப்பான நடிப்பும் இன்றும் என்மனத்திலே பசுமையாக உள்ளன. பூர்வ ஜன்ம பந்தம் போல, அந்நாடகங்கள் அடங்கிய தொகுதிக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த ஓர் இரு ஆண்டுகளாக ஈழத்துத் தமிழ் நாடக உலகிலே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. புதிய உத்திகளிலே நாடகங்கள் பல மேடையேறுகின்றன. நாடக வளர்சிக்குத் தரமான தேவையான பிரதிகள் அவசியம். அத்தேவையினையும் பூர்த்திசெய்யும் வண்ணம் பல நாடகத் தொகுதிகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்த வரிசையிலே, இந்நாடகத் தொகுதியும் ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சிக்குத் தன்னாலான பணியினைச் செய்யும் என்பது என் நம்பிக்கை.

சமூகத்தின் அன்றாட வாழ்வினைப் பிரதிபலிக்குஞ் சமூக நாடகங்களின் மொழி அச் சமூகத்தின் அன்றைய காலகட்டப் பேச்சு மொழியாக அமைவதே பொருத்தம். ஆனால், வரலாற்று இலக்கிய நாடகங்களுக்குப் பேச்சு மொழியினைக் கையாளுவது கஷ்டமான காரியமாகும். இத்தகைய நாடகங்கள் எழுதுவோருக்குச் செழுமையான இலக்கியத் தமிழ் உரைநடை கைவர வேண்டும். இத் தொகுதியிலடங்கும் நாடகங்கள் யாவும் வரலாற்றுப் பண்பு கொண்ட இலக்கியத் தன்மை பெற்றன. அதற்கேற்றபடி அழகிய, செழுமையான தமிழ் உரைநடையை ஆசிரியர் கையாண்டுள்ளமை பாராட்டுதற்குரியதாகும். எதுகை, மோனை மலிந்த கவிதைப் பண்பும் உணர்ச்சிப் புலப்பாடும் மிக்க அவரது நடைக்குக் ''காங்கேயன் சபதம்'' என்னும் நாடகத்திலிருந்து பின்வரும் பகுதியினை உதாரணமாகக் காட்டலாம்:

''சந்தனு : என்ன, நான் கேட்பவை எல்லாம் உண்மையா? காங்கேயா, (மகனை வாஞ்சை யோடு நோக்கி) இஃதென்ன? மைந்தனே, உன் கோலம் என்ன? இளவரசுக்கென உரிமை நல்கி நான் உனக்களித்த சிறு மணிமுடி எங்கே? மார்பிடையே துலங்கிய மதாணியும் மணி ஆரமும் எங்கே? இடையிற் செருகிய உடைவாள் எங்கே? கங்காபுத்திரனே, எனதரிய செல்வமே, அவையெல்லாம் எங்கே?''

இத்தகைய ஆற்றொழுக்குப் போன்ற நடை அவர் நாடகங்கள் முழுவதிலும் செறிந்துள்ளது.

நாடக உலகுக்கும் தமிழ் உலகுக்கும் இத்தொகுதி நல்ல பயனளிக்க வேண்டுமென வாழ்த்துவதுடன், இத் தொகுதி ஆசிரியரின் நல்ல முயற்சியைப் பாராட்டுவதிலும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி'
ஆசிரியர்
வித்துவான்
முதுகலைமாணி
க. சொக்கலிங்கம்

புனைந்துரை

அன்பர் செ. கதிரேசர்பிள்ளை அவர்கள் 'நல்லதோர் வீணை' அந்த நல்ல வீணையின் நரம்புகள் மீட்டிய இன்னிசைப் பண்களே 'காங்கேசன் சபதம்' முதலிய ஐந்து நாடகங்களும். இலங்கைக் கலைக் கழகத் தமிழ் நாடகக் குழுவினர் 1965 ஆம் ஆண்டிலிருந்து 1969 ஆம் ஆண்டு வரை அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடத்திய நாடகப் போட்டியில் ஒவ்வோராண்டும் முதற் பரிசு பெற்ற நாடகங்களைச் சேர்த்து இங்கு நூல் வடிவில் தந்துள்ளனர். இவை மகாஜனக் கல்லூரி மாணவரால் நடிக்கப்பெற்று அந்த மாணவருக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் நாடகாசிரியருக்கும் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தமை, இவ்விடத்தில் நினைவு கூர்தற்குரியது.

சூழவரப் புதுமைப் புயல்கள் வீசிப் பழைமையை மெல்ல மெல்லப் பொய்யாக்கிப் பழங்கதையாக்கிவரும் ஒரு காலகட்டத்தில் இந்நாடக நூல் வெளியாகின்றது. தொன்று நிகழ்ந்த தனைத்திலும் தூய்மையும் மகிமையும் காணும் அமைதியும் ஆழமும் நிறைந்த பேனாமுனை ஒன்றிலிருந்து இந் நாடகங்கள் உருவாகியுள்ளன. காலத்தின் தாக்கிற்கு இவை ஈடுகொடுக்குமா என்ற கேள்விக்கு நான் அளிக்கும் பதில் இதுதான் 'புயல்கள் அடிக்கடி அடிப்பதில்லை. அவை அடித்த பின் சில சுவடுகளே எஞ்சிநிற்க மீண்டும் பழைய அமைதியே நீண்டகாலத்திற்கு நிலவும். இதுதான் இயற்கையின் நியதி. கதிரேசர்பிள்ளை போன்ற கலைஞர்கள் காலத்தின் ஏலத்தால் மலிவாக்கப்பட முடியாதவர்கள்; காலத்தை வென்று நிற்பவர்கள். அவர்களின் படைப்புக்களாலே அவர்கள் என்றும் நினைவு கூரப்படுவார்கள்.'

கவிஞர் அவர்களின் இந்த ஐந்து நாடகங்களும் பேரிதிகாசமான மகாபாரதத்திலிருந்து தம் கருக்களைப் பெற்றுள்ளன. மரபு வழியாக வரும் வைதிக நெறிகளுக்கு அரண் சமைப்பனவான அருமையான கருக்கள் அவை. கருக்களின் தரத்திற்கு எவ்வகையிலும் குறைவு நேரா வகையில் உகந்த வசன நடையைக் கவிஞர் கையாண்டுள்ளமையை நாடகங்களை வாசிப்போர் உணர்ந்து கொள்வர்.

நாடகம் மேடைக்கே உரியது. வாசிக்கும் பொழுது தரமான நாடகப் பிரதியாகத் தோற்றும் ஒன்று நடிக்கும் போது படுதோல்வியடைவதும், வாசிக்கும் பொழுது தரமற்றதாகத் தோற்றும் நாடகப்பிரதி நடிக்கும் பொழுது தரமாய் அமைந்துவிடுவதும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் அல்ல. ஆனால், கதிரேசர்பிள்ளையின் நாடகங்கள் மேடையில் வெற்றிபெற்றமைக்கு அவை பெற்ற முதற் பரிசில்களே சான்றுகள். வாசிப்போருக்கும் அவை தரமான சிறந்த நாடகங்களாய்த் தோற்றி உள்ளத்தைக் கவரும் என்பதே என் நம்பிக்கை. ஏனெனில் நான் இவற்றைச் சுவைத்து வாசித்தேன். 'உண்மை' வெறும் புகழ்ச்சி இல்லை

பாடசாலைகளில் நிகழும் வைபவங்களின்போது மாணவர் நடிப்பதற்குகந்த நாடகங்களைத் தெரிவது மிகவும் கடினமாய் இருந்துவரும் இந்நாள்களில் நம்பி மேடையேற்றத் தகுந்த ஐந்து இதிகாச நாடகங்கள் கிடைத்துள்ளமை பெரும் பேறேயாகும். இப்பேற்றினை வழங்கிய கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை தமிழ் கூறும் நல்லுலகின் பாராட்டிற்கு உரியவர் ஆகின்றார். நண்பன் என்ற வகையில் என் இதயம் கனிந்த வாழ்த்துக்களை அன்னருக்கு வழங்குவதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கலைமாணி
த. சண்முகசுந்தரம்

புனைந்துரை

இலங்கைக் கலைக் கழகத்தின் தமிழ் நாடகக் குழு அனைத்து இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியைத் திறம்பட நடாத்தியது. இதன் தலைவராய் இருந்து நாடக வளர்ச்சிக்கு அரும் பணி புரிந்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். இப் போட்டியில் ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக முதலிடம் பெற்றது தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரி. இந்த நாடகக் குழுவிலே பேராசிரியர் வித்தியானந்தனின் அன்புக் கட்டளைப்படி பணி புரிகின்ற பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்துடன் தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியில் அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினத்தின் கீழ்ப் பணிபுரிகின்ற பெரும் பேறும் கிட்டியது. ஆகவே என் இனிய நண்பர் கவிஞர். செ. கதிரேசர்பிள்ளை இந்த நாடகங்களை எழுதி, நெறிப்படுத்திக் களரி ஏற்றிய பின்னணி எனக்கு நன்கு தெரியும். இக் காரணங்களைக்கொண்டு என்னையும் ''நாலுவரி'' எழுதும்படி இந்த நூல் வெளியீட்டு மன்றத்தினர் கேட்டுக்கொண்டனர். இந்தஅழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றேன். இந்த நூலுக்கு ஆசியுரை வழங்க முழுத் தகைமையும் உடையவர் அமரர் தெ. து. ஜயரத்தினம். ஆகவே அவரை உள்ளத்தில் வைத்து எழுதுவது மிகவும் பொருத்தம். அமரர், நவ மகாஜனாவின் சிற்பி மட்டும் அல்லர்; எத்தனையோ கலைஞர் மகாஜனாவில் உருவாவதற்குத் தூண்டுகோலாய் இருந்தவர்.

இந்த நூலின் பெருமையை நன்கு உணரவேண்டுமானால் நூலாசிரியர் கதிரேசர்பிள்ளையின் வாழ்க்கைப் பின்னணியை உணரவேண்டும். அதனை ஐந்து படிகளாகப் பிரித்து ஆராய்தல் பொருத்தம். முதலாவதாகக் கதிரேசர்பிள்ளையின் இளமைக் காலத்தை நோக்கலாம். இவரின் உறவினர் பலர் பண்ணிசை, புராண படனம், இசைச் சொற்பொழிவு,

உடுக்குப் பாட்டு, கூத்து ஆகியவற்றிலே கைதேர்ந்த வல்லாளராய்த் திகழ்ந்தனர். இந்தச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த கதிரேசரின் உடலில் தாய்ப்பாலுடன் சைவப்பற்று, முத்தமிழ்ப்பற்று என்பனவும் சேர்ந்துவிட்டன. 'கலைகளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல்' என்ற பண்பு இவரிடம் குடிகொண்டமை இயல்பே. இவர் பாட்டெழுதுவார்; புராணபடனஞ் செய்வார்; மேடையில் அழகாகப் பேசுவார்; தமிழ்ப்பாடல்களை நன்கு பாடுவார். இவரின் தமிழ்த் தொண்டு பெரியது; தமிழ்த் தொண்டையும் இனியது.

இரண்டாவதாகக் கதிரேசர்பிள்ளை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கற்ருர். அப்போது அதிபராக இருந்தவர் அமரர் துரையப்பாபிள்ளையின் அடி வழிச் சென்ற கலைஞர் க. சின்னப்பாபிள்ளை இவர் அமரரின் சகலரும் கூட.ஆசிரியராக இருந்தவருள் ஒருவர் இளம் ஜெயரத்தினம். ஆகவே மகாஜனக் கல்லூரியின் பாரம்பரியத்தில் ஊறியவர் கதிரேசர்.

மூன்ருவதாகக் கதிரேசர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரியிலே பயிற்சி பெற்ருர். அங்கு குருகவி வே. மகாலிங்கசிவம் என்னும் 'மலையருவி' ஊற்றெடுத்துப் பாய்ந்தது. இந்த அருவியின் இன்பத்தைக் கதிரேசர் சில காலம் பெற்ருர். பின்னர் நல்லாசிரியர் வி. செல்வ நாயகத்திடமும் இவர் கற்ருர். இந்த நல்லாசிரியர் செல்வ நாயகந்தான் பின்னை நாளில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராய் வீறுடன் இருந்தவர்.

நான்காவதாகக் கதிரேசர் மலை நாடு, கொழும்பு போன்ற இடங்களில் ஆசிரியப் பணி புரிந்தார்; புரிந்த பின்னர் தன் அன்னையாம் மகாஜனுவின் மடியிலே இருக்க வந்தார். தாயும் வளர்ந்தார். குழந்தையும் வளர்ந்தது. இது பெரிய வளர்ச்சி. கவிதையில் ஈடுபட்ட கதிரேசரை நாடகத்துறைக்கு வரும்படி அழைத்தார் அமரர் ஜயரத் தினம். கருத்து நிறைந்த அழைப்பு இது. இந்த அழைப்பின் படியே இங்கு இடம்பெறும் ஐந்து நாடகங்களும் உருவாகின. இது பயன் நிரம்பிய பணி.

ஐந்தாவதாகக் கதிரேசர்பிள்ளை அம்பாளின் அடியவர். தாய்மைக் கடவுளை நெஞ்சுருகி வழிபடுபவர். தாய்மையைப் போற்றும் இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களைப் படிப்பவர். ஆகவே அறத்தை அடிப் படையாக வைத்த நாடகங்களில் அவரின் நாட்டம் சென்றமை இயல்பே.

இந்த ஐந்து இயல்புகளையும் வைத்துக் கலைஞர் கதிரேசர்பிள்ளையின் நாடகங்களை நோக்குதல் சாலவும் பொருந்தும். ஒவ்வொரு யுகத்திற்கும், ஒவ்வொரு தருமம் உண்டென்பர். இது இலக்கியத்திற்கும் பொருந்தும். இப் பொழுது எமது நாட்டில் "வார்ப்பு நாடகம்" உருவாகும் யுகம் தொடங்கியுள்ளது. உள்ள முறிவு, வாழ்க்கை நெறிப் பிறழ்வு, சமுதாய முறிவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட வர்களை நாடக நாயகராக்குவது இக்காலப் போக்கு. இந்த நாடகங்களின் உரையாடல் யாவும் பேச்சுத் தமிழிலே நிகழும் இப்படியான கால கட்டத்தில் நல்ல நாடகங்களைத் தமிழில் எழுதும் முயற்சியும் வரவேற்கப்படவேண்டியது.

இறுதியாக ஒரு வார்த்தை மகாஜனக் கல்லூரி கலை உலகிற்குப் பல குருளைகளையும் ஈந்துள்ளது. அதில் ஒன்று தான் நாடகக் குருளை கதிரேசர்பிள்ளை. அமரர் ஜெயரத் தினத்திற்குக் குருளைகளை வளர்ப்பது பெரும் இன்பம். "இன்ன குருளையை இப்படி வளர்க்கவேண்டும். இதற்கு வேண்டிய உணவு இது; வேண்டிய 'மருந்து' இது" என் பவையெல்லாம் அவருக்கு நன்கு தெரியும். அவரின்று இல்லை. அவர் வானிலே நின்று மகாஜனாவை வழி நடத் துவார். மகாஜனாவில் குருளை பலவும் மேலும் உருவாக வேண்டும். அதனை அமரர் ஜயரத்தினம் வானில் நின்று பார்த்து வாழ்த்த வேண்டும். மகாஜனா நாடக முதல்வர். பல்லாண்டு காலமாக அளவெட்டியில் இருந்து பார்த்து மகிழவேண்டும். இதற்கு ஆடல் வல்லானின் அருள் கிடைப் பதாக.

மகாஜனக் கல்லூரி
முன்னாள் அதிபர்
சிறப்பு அறிவியல் மாணி
பொ. கனகசபாபதி

அணிந்துரை

சாதனை ! சாதனை !! சாதனை !!!

மகாஜனாவின் இதயகீதம் இதுதான்.

கல்வியிலும் இசை, பேச்சு, நடனம், நாடகம், விளையாட்டுக்கள், உதைபந்தாட்டம் முதலிய வகுப்புக் கல்விக்குப் புறம்பான துறைகளிலும் மகாஜன மாணவர் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாகச் சாதனைகள் புரிந்து முன்னணியில் திகழ்கின்றனர்.

இவ்வாறு அவையத்தும் உலகத்தும் முந்தியிருக்கச் செய்தவர்களுக்கு நன்றிக் கடன் செய்வதிலும் மகாஜனா சாதனை புரிந்துள்ளது.

கல்விக் கழகமமைத்து தெல்லிநகர் மக்களையும் தமிழ் கூறும் ஈழ மக்களையும் வாழவைத்த நாடகாசிரியரும் நெறியாளரும் பாவலருமான மகான் துரையப்பாபிள்ளைக்கு மகாஜனா மணிமண்டபம் அமைத்தது; சிலை எடுத்தது; 'சிந்தனைச் சோலை' என்ற நூல் வெளியிடப்பட்டது.

தந்தை தந்த சிறு குடிலை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து விந்தை புரிந்த பேராளனும் ஐயரத்தினத்திற்குச் சிலையமைத்து மணிமண்டபமும் உருவாக்கியது மகாஜனா.

> "தெல்லிக் கழகமிதை வெல்லக் கழகம்
> வையத்தில் உண்டோ?"

என இலக்கணம் வகுத்த பாவலரின் நெறியில் நின்று கலைத்துறையில் இலக்கியம் படைத்தவர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை. அவர்களுக்கு ஒரு நினைவுப் பரிசிலாக இந் நூல் அமைகின்றது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் பல பாடசாலைகள் முனைந்து நின்றன. ஆனால் மகாஜனா அனைவரையும் தனது திறமையால், உழைப்பால், ஊக்கத்தால் வென்று தொடர்ந்து ஐந்து ஆண்டுகள்

முதலிடம் பெற்றது. இவ்வாறு இடையீடின்றி வெற்றி பெற மகாஜனு பெற்றிருந்த ஆற்றல் என்ன? மகாஜனு கதிரேசர்பிள்ளை என்ற திறனுடைய ஓர் இரசிகரைப் பெற்றிருந்தது. ஆம். கதிரேசர் ஓர் இரசிகர். அவர் பாரதத்தை அணுவணுவாகச் சுவைத்தார். எனவேதான் அங்கு காணும் ஒவ்வொரு சிறு கருவையும் இதிகாச நாடகமாக்க அவரால் முடிந்தது.

நல்ல நடிகராக, சிறந்த கதாசிரியராக, திறன் மிக்க இயக்குநராக, உயர்ந்த கவிஞராக, உள்ள முருக்கும், பேச்சாளராக, உயர்ந்த ஆசிரியராக, ஆற்றல் மிக்க புராண படன காரராக, நல்ல இரசிகராக, மென்மையான இதய முள்ள மனிதராக அவர் இருந்ததால் தமது நாடகங்களை முழுமை பெற்ற மேடை நாடகங்களாக உருவாக்கிப் பாத்திரங்களை உயிருள்ளனவாக மேடையில் உலாவரவிட அவரால் முடிந்தது.

'காங்கேயன் சபதம்' இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் என் மனத்திரையில் ஓடிச்செல்கிறது. 'கோமகளும் குருமகளும்' நாடகத்தில் அமைந்த ஒவ்வொரு திருப்பமும் இன்றும் என் நினைவில் வருகிறது. இதுதான் அவரது நாடகங்களின் வெற்றிக்குக் காரணம். எடுத்து முகரும் போது மட்டும் மணக்கும் மலர்களைப் போலல்லாது கவிஞரின் நாடக மலர்கள் நினைக்கும் தோறும் 'பரிமள கந்தம்' வீசுகின்றன.

இத்தனை சிறப்புக்கள் நிறைந்த நாடக ஆசிரியர் இன்னும் பல நாடகங்களை எழுத வேண்டும். அவற்றைத் தாம் மட்டும் படித்துப் படித்துச் சுவைக்காது தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் படித்துச் சுவைக்கத் தந்திருக்க வேண்டும். ஆனல் தாம் மட்டுமே படித்துச் சுவைக்கும் சுயநல நோக்கால் அவர் தரவில்லை.

எனினும், மகாஜனுவின் பழைய மணவர்கள் நன்றி கொன்ருர்க்கு உய்வில்லை என்பதை உணர்ந்து கவிஞரின் நாடகங்களை நூல்வடிவில் தந்திருக்கிருர்கள். பேச்சு, நாடகம், கவிதை ஆகிய துறைகளில் கால் நூற்ருண்டு மகாஜனு சாதனை புரியத் தம்மை அர்ப்பணித்து, தமது திறமைகள் அனைத்தையும் ஒரு வழிப்படுத்திச் சேவை புரிந்த கவிஞருக்கு இந்நூல் ஒரு சிறு பரிசு தான். இன்னும் பல பரிசுகளைப் பழைய மாணவர் தர முன்வர வேண்டும்.

மகாஜனக் கல்லூரி
அதிபர்
கலைமாணி
பொன். சோமசுந்தரம்

முகவுரை

கவிஞர் கதிரேசர்பிள்ளையவர்கள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்த் துறைகளிலும் நிரம்பிய அறிவு உடையவர். பத்தி இலக்கியத்தினைப் பரப்புவதில் பரவச முறுபவர். கவிதை புனைவதில் சிறப்பாற்றல் மிக்கவர். சைவ நெறிகொண்ட வாழ்வு, நிதானமான போக்கு, பண்பான பழக்க வழக்கங்கள், கனிவான பேச்சு ஆகிய அருங் குணங்கள் படைத்த பொற்புடைய புண்ணியர். அமரர் திரு தெ து. ஜயரத்தினம் அவர்களின் காலந்தொட்டே மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக அரும் பணியாற்றி, வெள்ளி விழாக் கண்ட ஆசிரியர். கலைத்துறை, கவிதைத் துறை, இலக்கிய ஆய்வுத்துறை, இசைத்துறை, நாடகத் துறை ஆகிய பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு, சிறப்பாகப் பணி செய்து, பல்லோராலும் பாராட்டப்பட்டவர். அவ ரிடம் பயிலும் வாய்ப்புப் பெற்ற மாணவ உலகம் அவ்ரை என்றும் மறவாது. அதற்குச் சான்று ''பாரதம் தந்த பரிசு'' என்ற இந்த நாடக நூல்.

பிள்ளையவர்கள், ''பாரதம்'' என்ற காவியக் கடலிலே மூழ்கி, முக்குளித்து, அக் காவியக் கடலிலே செறிந்து பரந்திருக்கும், கருத்தாழம் மிக்க உபகதைகளிலே ஐந்தினைப் பொறுக்கி எடுத்து அவற்றிற்கு நாடக வடிவம் கொடுத்து, வசனம் அமைத்து, தமது மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, மேடையேற்றி 1965 ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டுவரை, கலைக் கழகத்தினரால் நடத்தப்பட்ட அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டிகளில் முதலாம் பரிசைப் பெறக்கூடிய வாய்ப்பினை அளித்து எமது கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள். அவர் சேவையைப் பாராட்டுவதில் பெருமை அடைகிறேன்.

''குருதட்சிணை'' என்ற மகுடத்திலே இந்நூலில் இடம் பெறும் நாடகமே, இந்நூல் வெளியீட்டிற்கு ஆதார சுருதியாக இருந்திருக்கிறது என்பதில் எனக்கு ஐயமே இல்லை. பயிலவமுனிவரிடம் மாணுக்கனுகப் பயின்ற உதங்கன், பல்வேறு அநுபவங்கள் பெற்று, ''குருபத்தியின் உயர்வை உலகறிய உணர்த்திய உத்தமனுக, மகாத்மா உங்கதனுக...''ப் புடம் போடுவதை இச் சிறு நாடகம் சித்திரித்திருக்கின்றது. பொருள் பொதிந்த உணர்ச்சி மிகு வசனங்களால் பாத்திரங்களைப் பேசவைத்து, இந்நாடகத்தைப் படிப்போர் உள்ளங்களை நெகிழ வைத்திருக்கிருர் கவிஞர் அவர்கள்.

மாணவர்கள் அதிக செலவின்றி, மேடையேற்றக் கூடிய ஐந்து நாடகங்கள் கொண்ட இந்நூலை எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர், தமது ஆசிரியருக்குக் ''குருதட்சிணை''யாகச் சமர்ப்பணம் செய்து வைக்கிருர்கள். தமது ஆசிரியரிடம், தாம் பெற்ற அநுபவத்தை வருங்கால மாணவ சமுதாயத்திற்கும் அளித்து அவர்களும் பயன் பெறக் கூடிய வகையில் இச் சிறப்புப் பணியை ஆற்றி வைக்கும் பழைய மாணவருக்கு எனது பாராட்டுக்கள்.

ஆற்றல் மிகு கவிஞர் கதிரேசர்பிள்ளை அவர்களின் ஏனைய நூல்களையும் கவிதைகளையும் உரைகளையும் நூல் வடிவு கொடுத்து 'தமிழ் கூறும் நல்லுலகம்' பயன் பெற வைக்க வேண்டும் என்று தமிழ் அன்பர்களைப் பணிவோடு வேண்டுகின்றேன்.

வாழ்க பிள்ளையவர்கள்.

வளர்க அவர்தம் தமிழ்ப்பணி.

கவிஞர்
செ. கதிரேசர்பிள்ளை

முன்னுரை

உலகிலே செயற்பாலன, தவிர்த்தற்பாலன எவை என்பதை மனுக்குலம் உணரச் செய்து அதனைத் தரும நெறியில் வாழத் தூண்டி நிற்பன மகாபாரதக் கதைகள். அக்கதைகள் எங்கள் வீட்டின் முதுசொத்து. என் தந்தையார் கதை சொல்வதிலே வல்லவர். அவர் கூறும் பாரதக் கதைகளை நாம் மிக்க ஆவலோடு சூழ்ந்திருந்து மெய்ம் மறந்து கேட்போம். இவ்வாருக மகாபாரதக் கதைகள் என் நெஞ்சில் இடம் பெறலாயின. அக் கதைகளிலே வரும் மகா புருடர்களின் அறநெறி வழுவா வாழ்வும், அதனைக் காக்க அவர் பெற்ற இன்னல்களும், அவர் ண்ட வெற்றி மேன்மையும் ஆகிய எல்லாம் என் உள்ளத்தை மிகுதியும் கவர்ந்து இனிமை செய்து நிலைத்தன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியஞகப் பணிபூண்டிருந்த என்னைக் கல்லூரியின் சிற்பியும் முதல் அதிபரும் என் அன்புக்குரிய ஆசிரியருமாகிய அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்கள் அழைத்து, இலங்கைக் கலைக் கழகம் நடத்தும் நாடகப் போட்டிக்கு மாணவர்களைப் பயிற்றிப் பங்குபற்றச் செய்தல் வேண்டும் என்று தமது மனக் கருத்தை உரைத்தார்கள். அப் பெரியாரது கலை ஆர்வத்தில் பெரிதும் ஈடுபட்ட யான் அவர் கருத்தை நிறைவேற்றுவதாகத் தெரிவித்து அதற்கான முயற்சியில் ஈடுபடலாயினேன்.

மாணவர் நடித்தற்கேற்ற சிறந்த கதையொன்றினை நாடகமாக்க நினைத்தபோது மகாபாரதக் கதைகளிலே நாயகர்களாக விளங்கிய மகாபுருடர்கள் என் முயற்சிக்குத் துணையாயினர். அப்புருடருள்ளே பீஷ்மாச்சாரியர் எனப் புகழ் பெற்ற காங்கேயன் என் மனத்தில் மிகுதியும் இடம் பெற்று நின்ற காரணத்தால் அவரது இளமை வாழ்வை

நாடகமாக்கத் துணிந்தேன். அத்துணிவு 'காங்கேயன் சபதம்' என்ற நாடகம் தோன்ற வைத்தது. அந்த நாடகத்தை ஓரிரவில் எந்த விதமான 'அடித்தல் திருத்தல்' களுமின்றி எழுதி முடித்தேன். அந்த அளவுக்கு, காங்கேயன் என் உள்ளத்தை முழுமையாகக் கவர்ந்து நின்முன்.

காங்கேயன் சபத நாடகம் மாணவர்க்குப் பயிற்றப் பட்டது. இலங்கைக் கலைக்கழக நாடகப் போட்டியிலே நாம் பங்குபற்றினோம்; நடிப்புத் திறமை மிகுதியும் நிறைந்த மாணவர்களின் ஊக்கமும், உற்சாகமும் நாடகப் போட்டியிலே நாம் முதலிடம் பெற உதவின. 'காங்கேயன் சபதம்' யாவரதும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது: எம் கல்லூரியின் புகழ் இலங்கை முழுவதும் பரவுதற்கு ஒரு சாதனமுமாயிற்று.

இதன் பின் மற்றைய ஆண்டுகளில் நிகழ்ந்த போட்டி களிலும் நாம் கலந்து கொண்டோம். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் எமது மகாஜனக் கல்லூரி மாணவர் நடித்த நாடகங்களே முதல் இடத்தைப் பெற்றன. மகாஜனாவின் நாடகக் கலைப் பெருமையை உணர்த்தும் புகழ்க் கொடி வானளாவிப் பறந்தது. இந் நாடகங்கள் எல்லாம் பாரதக் கதைகளாலேயே உருப் பெற்றன. மக்கள் பலரும் தெரிந் திராத கதைப் புதுமையும், மேடையேற்றப்பட்ட ஒழுங்கு முறையும், நடித்த மாணவரின் நடிப்புத் திறமையும், அவ்வப்போது நாடக மேடையேற்றத்துக்கு வேண்டிய பெருந்தொகைப் பணத்தை. மனங்கூசாது உதவிநின்ற அதிபர் அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்களினது தணியாத கலையார்வமும் ஆசீர்வாதமும் இந் நாடகங்களின் முதன்மைக்குக் காரணமாயின. இவ்வளவும் நாடகங்கள் அரங்கேற்றப் பெற்ற வரலாறு உரைக்கப்பட்டன.

நாடகங்கள் அரங்கேற்றப் பெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகளின் பின் அவை ஐந்தும் 'பாரதம் தந்த பரிசு' என்ற பெயரிலே இன்று நூல் வடிவு பெறுகின்றன. தூய கலைகள் காலத்தால் அழிவு பெறுதவை, காலங் கடந்து நிலைப்பவை என்பதற்கு இந்நூல் தக்க சான்முக அமைகின்றது. காங்கேயன் சபதம், ஜீவமணி, அம்பையின்

வஞ்சினம், கோமகளும் குருமகளும், குருதட்சிணை ஆகிய ஐந்து நாடகங்களும், மக்களுக்குப் பாரதம் தந்த பரிசுகள் ஆதலினாலும், மகாஜனக் கல்லூரிக்கும் பரிசு கிடைக்க வைத்த சிறப்பினவாதலாலும் இந்நூல் 'பாரதம் தந்த பரிசு' என நாமம் பெற்று நிற்பது பொருத்தமேயாகும். இப்பெயரை, நூலாக்க ஆலோசனைக்குழுவின்முன் எடுத்துரைத்து ஏகோபித்த அங்கீகாரம் பெற வைத்த அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களுக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்கள், இந்த ஐந்து நாடகங்களும் நூல் வடிவு பெறல் வேண்டுமென்ற ஆர்வம் கொண்டனர். மகாஜனாவைக் கலைத் துறையிலே புகழ் ஏணியில் ஏற்றி வைத்த சான்றுச் சின்னமாக, இந் நூல் விளங்கவேண்டுமென்பது அவர்கள் எண்ணம் போலும். அவர்கள் தமது கலைமாதா மகாஜனாவின் மீது கொண்ட அழியாத பற்று என்றும் வளர்க.

நாடகம் நூல் வடிவு பெறற்காம் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு அதற்கென நியமிக்கப்பட்ட பழைய மாணவர் குழு விரைந்து செயற்பட ஆரம்பித்தது.

நாடகங்கள் நூலுருவாகும் செய்தியை எனக்கு அறிவித்து அவர்கள் என் கைவசமிருந்த நாடகப் பிரதிகளையும் பெற்றுச் சென்றனர். நாடகங்கள் அச்சகத்திற் சமர்ப்பிக்கப்பட்ட செய்தியும், கிரமமாக அவை அச்சுப் பதிவு பெறும் செய்தியும் எனக்கு அறிவிக்கப்பட்டன. ஒழுங்கு படுத்தல், திருத்தம் செய்தல் ஆகிய எல்லாக் கருமங்களையும் அவர்களே செய்தனர். இக் கருமத்தில் எனக்குச் சிறிதளவு பங்கேனுமில்லை.

ஐந்து நாடகங்களும் நூல் வடிவு பெற்றபின் நூலுக்குரிய மற்றைய உறுப்புக்களாகிய ஆசியுரை, புனைந்துரை முதலாயினவற்றை யாரிடம் பெறுதல் வேண்டுமென என்னை உசாவினர். யான் அத்தகுதியாளரின் பெயர்களைக் குறிப்பிட்டேன். அவர்களும் மனமுவந்து நல்லுரைகள் வழங்கினர். அவர்கள் பெயர்கள் நூலில் இடம் பெற்றுள்ளன. அவர்கள் நாடகக் கலை கைவந்த மகா பேரறிஞர்கள். இந்

நாடகங்கள் மேடையேற்றப்பட்ட காலத்தில் அவற்றைக் கண்டு களித்துப் போற்றியவர்கள். எனது மதிப்புக்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள். அவர்களுக்கு நான் என்றும் நன்றியுடையேன்.

இந்நாடகம் நூல் வடிவுபெற உழைத்த என் அன்புக்குரிய மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் அனைவருக்கும் நான் நன்றிக்கடனுடையேன். அவர்கள் பலராதலால், அவர்கள் பெயரை ஈண்டு யான் எடுத்துரைக் இயலாதவனாகின்றேன்.

இந் நாடக நூலின் பொருட்டு நிதி உதவிசெய்தோர் அனைவருக்கும் நான் நன்றியுடையேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாய்த் தம் உடன்பாட்டையும் ஒத்துழைப்பையும் நல்கிய முன்னை அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் கலையார்வத்தையும் செய்யத்தக்க செய்யப்படவேண்டும் என்ற சிந்தையையும் நான் போற்றுகிறேன்.

ஆசியுரை வேண்டி அணுகிய போது தமது உடற் சுகவீனத்தையும் பொருள் செய்யாது நாடகங்களை நான் வாசிக்கக் கேட்டு மகிழ்ந்து என் வேண்டுகோளை நிறைவேற்றிய பண்டிதமணி அவர்களுக்கு என்பணிவும் வணக்கமும் என்றும் உண்டு.

இந் நாடகங்கள் அரங்கேறுங் காலத்தில் தமது கலை வண்ணக் கருத்துக்களை உணர்த்தியும், மேடையில் அவற்றைக் கண்டுகளித்தும் முதற் பரிசு பெற்று விட்ட செய்தி கேட்டபோது உள்ளம் பூரித்தும் பல விதங்களில் எனக்கு உறுணையாய் இருந்த மகாஜனக் கல்லூரி முதல் அதிபர் அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்களுக்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

இறுதியாக இந்நூலாக்கத்துக்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூறி என்னுரையை முடிவு செய்கிறேன்.

வெளியீட்டுரை

மாணவர் போட்டிகளிற் பரிசு என்றதும் இலங்கை மக்களுக்கு முதலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிதான் நினைவுக்கு வரும். மாணவர்களின் திறமை, ஆசிரியர்களின் உழைப்பு, அதிபரின் வழிகாட்டல், பழைய மாணவர்களின் ஆர்வம், பெற்றோரின் ஈடுபாடு ஆகிய இவற்றின் பிளவுபடா முழுமையின் விளைவே மகாஜனு ஈட்டிய வெற்றிகளின் இரகசியம்.

தொடர்ந்து எட்டு ஆண்டுகள் மகாஜனக் கல்லூரி மாணவர்கள் உதைபந்தாட்டத்தில் முறியடிக்கப்படாத வெற்றி வீரர்களாகத் திகழ்ந்தனர். கலைக் கழகம், நாடகப் போட்டி நடத்துவதை நிறுத்தும் வரை மகாஜனு அகில இலங்கைப் பாடசாலை நாடகத் துறையில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முன்னணியில் நின்றது. இவ்விரு சாதனை களும் வேறு எப்பாடசாலை வரலாற்றிலும் காணமுடியாத அபூர்வ சாதனைகள்.

நாடக உலகில் கல்லூரி புகழ் மணம் வீசக் காரணமா யிருந்தவர் கவிஞர் கதிரேசர்பிள்ளை அவர்கள். ஒவ்வொரு மாணவரும் பிறப்பாற் கலைஞர். அவரது கலைத்திறமை உள்ளத்துள் மறைந்து கிடக்கிறது. அது மலர்ந்து மணம் வீச வைப்பது ஆசிரியர் கடமை இந்தக் கடமையை இலங்கைப் பாடசாலைகளில் வேறெவரையும்விடக் கவிஞர் கதிரேசர்பிள்ளை திறம்பட நிறைவேற்றினர். எனவேதான் மகாஜனு தொடர்ந்து ஐந்து முறையும் பரிசுபெற முடிந்தது.

அவர்களது உழைப்புக்கு நன்றிக் கடனுக இலங்கைக் கலைக்கழகத்தினுல் நடத்தப்பட்ட பாடசாலை மாணவருக் கான நாடகப் போட்டியில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முதற் பரிசு பெற்ற அவரது நாடகங்களைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட வேண்டுமெனப் பழைய மாணவர் சங்கம்

தீர்மானித்தது. அத்தீர்மானம் செயல் வடிவம் பெற்று இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது. எம் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்த ஆசிரியர் கதிரேசர்பிள்ளை அவர்களுக்கு இந்நூல் எமது "குருதட்சிணை"; உங்களுக்குப் "பாரதம் தந்த பரிசு"

பரிசு நாடகங்கள் ஐந்தும் நூல் வடிவில் வெளிவர வேண்டும் என ஆர்வம் காட்டி விநாயகர் சுழி வைத்தவர் எமது முன்னாள் அதிபர், திரு. பொ. கனகசபாபதி அவர்கள். இப்பணி நிறைவு பெற ஒத்துழைப்புத் தந்தவர் எமது இன்றைய அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் அவர்கள். கலை உள்ளம் கொண்ட இவ்விரு பெரியார்களினதும் ஒத்துழைப் புக் கிடைத்தமை எமது பாக்கியமே என எண்ணுகிறோம்.

இந்நூலுக்கு அணிந்துரை, வாழ்த்துரை, புனைந்துரை வழங்கிய அறிஞர்களுக்கும் இந்நூல் வெளிவருவதற்கு உதவி புரிந்த சகலருக்கும் எமது நன்றியைக் கூறிக்கொள்ள விழைகிறோம்.

சு. ஏழூர்நாயகம்
சி. யோகநாதர்
இணைச் செயலர்
பழைய மாணவர் சங்கம்

மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை, 20-10-80

பாரதம் தந்த பரிசு

●

★ காங்கேயன் சபதம்

★ ஜீவமணி

★ அம்பையின் வஞ்சினம்

★ கோமகளும் குருமகளும்

★ குருதட்சிணை

படைப்பு

மகாஜனக் கல்லூரி மற்றெல்லாத்
துறைகளிலும் தலைசிறந்து விளங்
கியதுபோல் நாடகத்துறையிலும்
முன்னணியில் திகழ வழிகாட்டிய
பேராசான்

தெ. து. ஜயரத்தினம்

அவர்களுக்கு

காங்கேயன்
சபதம்

[தெல்லிப்பழையில் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற நாடகம்.] **1965**

பாத்திரங்கள்

சந்தனு	— அத்தினபுர வேந்தன்
காங்கேயன்	— சந்தனுவின் மூத்த புதல்வன்
தாசராஜன்	— யமுனைத் துறைத் தலைவன்
சாரதிகள்	
சேவகன்	
அமைச்சர்கள்	
சேனாதிபதி	
காவலாளிகள்	
பரிமளகந்தி	— தாசராஜன் மகள்
கஞ்சுகி	— அந்தப்புரத்தாதி
தருமதேவதை *(குரல்)*	
அசரீரி	

காட்சி 1

இடம் : யமுனைக்கரை.

பாத்திரம் : சந்தனு, சாரதி, பரிமளகந்தி, தாசராஜன், பணியாள்.

நிகழ்ச்சி : வேட்டை மேற்கொண்டு வந்த சந்தனு மன்னன் சாரதியோடு யமுனை தீரத்தில் தாக சாந்தி செய்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கின்றான்.

சந்தனு : ஆஹா, வசந்தகாலம் மரம், செடி, கொடிகளின் மணவினைக் காலம் என்பது எவ்வளவு பொருத்தம். அதோ மலர்ந்து குலுங்கும் மல்லிகைச் செடியைத் தனது பச்சிளந் தளிர்களாகிய கரங்களால் தழுவி அணைத்து நிற்கும் மாமரம் ஒன்றே இதற்குச் சாட்சி. மரம், செடிகள் என்ன? மனித குலத்துக்குக் கூட மறைந்து கிடக்கும் காதலுணர்ச்சியைக் கிளறி விடுவதற்கும் இவ் வசந்தமன்றோ காரணமாகின்றது.

ஈதென்ன? எண்டிசைப் பரப்பும் மண்டிச் செறிந்து வருகின்றதே ஒரு நறுமணம்.

ஆமாம். அவனித் தலத்திலே அரசர்களாகிய நாம் கூட அநுபவித்தறியாத புதுமணம். சாரதி...

சாரதி : (ஓடிவந்து) அரசே,

சந்தனு : நீ இதை உணரவில்லையா? உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒப்பில்லாத இந்தப் பரிமளம் உனது நாசிகளை உறுத்தவில்லையா?

சாரதி : நானுந்தான் அநுபவித்து அதிசயம் அடைகிறேன் பிரபு.

சந்தனு : வா, அது எங்கிருந்து கிளர்ந்து வருகிறதென்பதை அறிவோம்.

சாரதி : இதோ, இத்திசையாகத்தான் வருகிறது. இவ்வழியே வாருங்கள் வேந்தே, இவ்வழியே வாருங்கள். மகாராஜா, அதோ அந்த மர நிழலிலே தேவரம்பை போல ஒரு பெண்.

சந்தனு : ஆமாம், சாரதி. அவளிடத்தில் இருந்துதான் இந்த நறுமணத்தின் ஊற்றுக் கிளம்புகின்றதென நீ எண்ணுகிறாயா?

சாரதி : ஆம் பிரபு. அடியேன் அவ்வாறுதான் எண்ணுகிறேன்.

சந்தனு : நல்லது. நீ அப்பாற் சென்று நில் நான் அப்பெண்ணை அணுகித் தெரிந்து வருகிறேன்.

[அரசன் தன்னை நோக்கி வருதலை உணர்ந்த பரிமளகந்தி நாணமுற்று எழுந்து ஒதுங்கி நிற்கிறாள்.]

சந்தனு : (கிட்டப்போய்) அகன்ற யமுனைப் பரப்பிலே சுகந்த நறுமணத்தைப் பரப்பிக் கொண்டு சுடரொளி வீசும் மலராக நிற்கும் மங்கையே நீ யார்?

பரிமள : (அரசனை நோக்கி) மன்னர் என்னையா விசாரிக்கின்றீர்கள் ?

சந்தனு : ஆமாம். விசாரிப்பதற்கு என்னையும் உன்னையும் தவிர இங்கு வேறு யார்? உன்னைத்தான் கேட்கிறேன்.

பரிமள : அடியேன் இந்த யமுனைத் துறைத் தலைவன் மகள். இங்கு ஓடம் விட்டுப் பொழுதைக் கழிப்பது என் தொழில்.

சந்தனு : தேவருலகிலும் கிடையாத பரிமளகந்தம் உன்னிடத்தில் எழுந்து என்னைக் கிறங்கச் செய்கிறதே. பெண்ணே, இதை எப்படிப் பெற்றுக் கொண்டாய்?

பரிமள : இஃது என் உடம்பின் இயற்கை. பராசர முனிவரின் அருளால் இந்நிலைமையை யான் அடைந்தேன்.

சந்தனு : நன்று நீ யார் மகளென்று கூறினாய்?

பரிமள : யமுனை நதிக்கரைப் பரதவகுல மன்னன் தாசராஜன் தான் என் தந்தை.

சந்தனு : ஓகோ. என்னை யாரென நீ அறிந்து கொண்டாயா?

பரிமள : (சிறிது உற்றுப் பார்த்துவிட்டு) ஆம். நீங்கள் ஒரு வேந்தர்.

சந்தனு : இல்லை வேந்தர்க்கு வேந்தன். அஸ்தின புரத்தின் அரசன் சந்தனு யான்தான்.

பரிமள : வேந்தர் பெருமானே, வணக்கம். அடியாள் தங்களுக்குத் தாங்கள் ஏவும் பணி செய்யக் காத்திருக்கிறேன்.

சந்தனு : பேரெழிலும் யௌவனமும் பேணி நிற்கும் பெண்ணணங்கே, நீ பணி செய்தற்குரியவளில்லை. பணிகளை ஏவிச் செய்விப்பதற்குரிய பெரும் பதவி உனக்குக் காத்திருக்கிறது. ஆமாம் நீ எனது

இதயத்தில் அமர்ந்து இன்பமளிக்கும் மண மலராகி விட்டாய். எனது அந்தப்புர வானத்திலே சுடரும் உதய தாரகையாக உன்னை அமர்த்த எண்ணிவிட்டேன்.

பரிமள : மன்னர் பெருமான் உரைக்கும் உரையின் பொருள் அடியாளுக்கு விளங்கவில்லை.

சந்தனு : பெண்ணே, யமுனைத் துறையும் படகோட்டுதலும் உனக்கு ஒவ்வாதவை. உன்னை என் மனைவியாகக் கொண்டு மாநகர் புகுதற் கெண்ணி விட்டேன்.

பரிமள : வேந்தர் அடியாளை விரும்புவது தகாது. ஒப்பில்லாத சந்திர வமிசத் தோன்றலாகிய நீங்கள் தாழ் குலத்தவளாகிய என்னை ஒரு பொருளாகக் கொண்டு உரையாடுகிறீர்கள். அதனையே யான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அதற்கு மேல்......

சந்தனு : அதற்கு மேல் என்ன ? உனது பண்பு நிறைந்த உரை, என்னை மன்னனெனக் கண்ட மதிநலம், உன் மேனியினின்றும் எழுந்து வீசும் பரிமளம், பேரெழில் இவை எல்லாம் நீ சந்திர குலத்தின் அரண்மனையில் ஒளிவிட்டுச் சுடரும் மணியாதற்கே கொண்டிருக்கிறாய் என உரைக்கின்றன. ஆதலின் என் பேச்சை மறுக்காதே.

பரிமள : வேந்தர் யாதும் அறியாதவரல்லர். யான் என் சுவாதீனம் உடையவள் அல்லள் எந்தையார் இருக்கின்றார். அவருடைய இசைவு வேண்டும். அதன்மேல் சொல்லத்தக்கது யாதுமில்லை.

சந்தனு : என்ன? உன் தந்தையின் இசைவுண்டேல் நீ இசைவாய் என உரைக்கின்றாயா? பெண்ணே, மிகவும் மகிழ்ந்தேன். உன் தந்தை தர உன்னைப் பெற்றுச் செல்கிறேன்.

பரிமள : மன்னர் மன்னவர் நீடு வாழ்க. யான் வருகிறேன். (செல்கிருள்).

சந்தனு : (சிறிது தாமதித்து) சாரதீ

சாரதி : அரசே.

சந்தனு : எம் வரவையும் நாம் நிற்கும் இடத்தையும் தாசராஜனுக்கு அறிவித்து அழைத்து வா.

சாரதி : அப்படியே.

(தாசராஜன் வருதல்)

தாசரா : வேந்தர் பெருமானே, அடிமை தாசராஜன் வணங்குகிறேன்.

சந்தனு : தாசராஜரே எழுந்திரும். உமது குடிகளும் நீரும் நலமுடையீரா?

தாசரா : சந்திர குல சிகாமணியாகிய தங்கள் ஆட்சியின் கீழ் வாழும் சிற்றரசஞகிய யானும் எனது குடிகளும் குறைவடைவோமா? வருண தேவனருளாலும் தங்கள் அன்பிஞலும் நாம் நலமுடையோம்.

சந்தனு : ஆமாம். யமுனையில் ஓடம் விடுகிற பெண் உம் மகளாமே.

தாசரா : யார்? பரிமளகந்தியைத்தான் வேந்தர் குறிப்பிடுகின்ளூர் போலும். ஆம். அவள் என் மகளே தான்.

சந்தனு : ஓகோ. அவள் பெயர் பரிமளகந்தியா? மிகப் பொருத்தம்.

தாசரா : ஆம். மகாராஜா முன்னே அவளுடைய மேனியில் இருந்து மற்சங்களின் வாசனை வீசிக் கொண்டிருந்தது. ஒரு நாள் மகான் பராசரர்

அவளுடைய ஓடத்தில் ஏறி ஆற்றைக் கடக்க வேண்டி வந்தார். அவருடைய அருளினால் அந்த மற்ச கந்தம் நீங்க இந்தப் பரிமள கந்தம் அவள் மேனியினின்றுந் தோன்றிற்று. அதனால்...

சந்தனு : நீங்கள் அவளைப் பரிமள கந்தி என அழைக்கிறீர்கள் போலும். தாசராஜரே அந்தத் தெய்வீக நறுமணம் இந்த யமுனைத் துறையிலே யாருக்கும் பயன் படாமல் வீணே கழிகிறது. அது எமது அரண்மனையிலே, அந்தப்புரத்திலே தங்கியிருந்து யாவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுதற்குரியது.

தாசரா : மன்னர் பெருமான் கூறும் பொருளை ஏழையாகிய எம்மாற் புரிந்து கொள்ள முடியவில்லை.

சாரதி : தாசராஜரே. உமது மகளை மன்னர் பிரான் தம்மோடு அழைத்துச் செல்ல விரும்புகிறார்.

தாசரா : என்ன ? என் மகளை எங்கள் மகாராஜா அழைத்துச் செல்ல விரும்புகிறாரா? மன்னர் மன்னவா, பரிமளகந்தி எனது ஆசைக்கொரு மகள். பிள்ளைக்கலி தீர்த்த பெண் தெய்வம். அவளை அவள் விரும்புமோர் ஆடவனுக்கு மணம் முடித்துக் கொடுத்து அந்த மணக்கோலத்தைக் காணும் ஆவல் எங்களுக்குப் பெரிது. வேந்தர் பெருமான் அவளை அவ்வாறு நல்வாழ்வு வாழ ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

சாரதி : தாசராஜரே, இன்னும் மன்னர்பிரானின் எண்ணத்தை நீர் புரிந்துகொண்டிலீர். வெளிப்படையாகக் கூறுகிறேன். மன்னர் பிரான் உமக்கு மருமகனாக விரும்புகிறார்.

தாசரா : என்ன ? சந்திரகுல முதல்வரா எனது குடியிற் சம்பந்தம் கொள்ள விரும்புகிறார் ? நான் காதாற் கேட்பன எவையும் பொய்யல்லவே.

சந்தனு : ஆமாம் ஆமாம். தாசராஜரே, உமது மகளை நாம் மனைவியாகப் பெறுதற்கு விரும்புகிறோம்.

தாசரா : மகாராஜா பொறுத்தருளல் வேண்டும். நானும் என் சுற்றமும் உடைமைகளும் எல்லாம் உங்களுடையனவே. உங்கள் பொருளை நீங்கள் எடுத்துச் செல்வதைத் தடுப்பவர் யார்? யான் பெறற்கரும் பேறு பெற்றேன். ஆம். சந்திரகுல முதல்வர் இந்தத் தாசராஜனின் மருமகன். இது யாருக்குக் கிடைக்கும் பேறு?

சாரதி : அப்படியா? மன்னரின் மனோ விருப்பம் நிறைவேற இனி என்ன தடை? தாசராஜரே உமது உறுதிமொழியைக் கூறுக.

தாசரா : வேந்தர் பிரான், என் மகளை விரும்பியவாறே அழைத்துச் செல்க. விவாகம் புரிந்து கொள்க. நான் யாதும் தடுத்துரையேன். ஆனால்...

சந்தனு : ஆனால்...

சாரதி : எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கூறி விடுவது நல்லது தாசரே.

தாசரா : வேந்தர் சமுகத்துக்கு ஏழையேனது தாழ்வான விண்ணப்பம்.

சந்தனு : என்ன அது? விரைந்து சொல்லுக.

தாசரா : மன்னர் பிரான் எனது விண்ணப்பத்தை ஏற்று, தகுதியற்றதாயின் ஏழையைப் பொறுத்தருளல் வேண்டும்.

சந்தனு : ஆமாம். பொறுப்போம். விரைவிற் சொல்லுக. அந்தரங்கமாக மறைக்கப்படும் எண்ணங்கள் தாம் எப்பொழுதும் ஆபத்தைத் தருவன.

சாரதி : தாசரே, மன்னர் மாண்பு நீர் அறியாததொன்றன்று. விரைவில் விண்ணப்பத்தைத் தெரிவியும்.

தாசரா : வேறொன்றுமல்ல. எனது மகள் வயிற்றிலே பிறக்கும் குழந்தைகளுக்கு மன்னர் அரசுரிமை வழங்கல் வேண்டும்.

சந்தனு : என்ன ?

சாரதி : தாசராஜரே, என்ன சொல்கிறீர்? எங்கள் வேந்தருக்கு முதல் மைந்தர் காங்கேயர் இருக்கிறார் என்பதும், அவர் இளவரசராக வர வேண்டும் என்பதும் நீர் அறியாதனவல்லவே.

தாசரா : பொறுத்தருளல் வேண்டும். வேந்தர் பிரானின் மூத்த திருமகனார் அரசராக வந்தால் அவர் பரம்பரையினரே என்றும் அரசராவார்கள். ஏழைச் சிறுகுடிலிலே தோன்றிய பரிமளகந்தி, உயர் குலத்திலே மணம் புரிந்தாள் என்ற பெருமை, அவள் பெறப்போகும் குழந்தைகள் உரிமையற்றவர்களாய் உலகத்தாரால் அறியப் படாதவர்களாய்ப் போகும் நிலையில் அழிந்து போகலாமா?

சாரதி : தாசராஜரே, மன்னர் மனோ விருப்பத்தை மீறி நடக்கும் மகா பாதகச் செயலைத் துணிந்து செய்கிறீரே.

சந்தனு : சாரதி பொறு. தாசராஜரும் எம்மைப்போல் நீதிநெறி உணர்ந்த ஓர் அரசர்தாம். அவர் சிற்றரசர் ஆயினும் அவர் பேச்சில் நியாயம் இருக்கிறது. பால் பெருமளவில் இருந்தாற்றான் இனிக்கும் என்பதல்ல. ஒரு துளி பாலும் இனிக்கவே செய்யும். இவை பற்றிச் சிறிதும் எண்ணாது எனது சிந்தையை அப் பெண் மீது ஓடவிட்டேன் யான். யானே தவறுடையேன். வா செல்வோம்.

தாசரா : மன்னர் பெருமான் ஏழையேங்களைப் பொறுத் தருளல் வேண்டும்.

(திரை)

காட்சி 2

இடம் : அரண்மனை அந்தப்புரம்.

பாத்திரம் : சந்தனு, கஞ்சுகி, மந்திரி.

நிகழ்ச்சி : சந்தனு ஒரு படுக்கையில் அமர்ந்து கொண்டு கஞ்சுகியை அழைக்கிறார்.

சந்தனு : யாரங்கே ?

கஞ்சுகி : அரசே.

சந்தனு : முதல் அமைச்சரை அழைத்து வா.

கஞ்சுகி : அப்படியே.

அமைச் : (அமைச்சர் வந்து) மதிக்குல மணியே, வாழ்க நின் கொற்றம்,

சந்தனு : அமைச்சரா? இப்படி அமர்க.

அமைச் : வேந்தர் உரைத்தவாறே அமர்ந்திருக்கிறேன். அடுத்த பணியை எதிர்பார்க்கிறேன்.

சந்தனு : ஆ. மறந்திட்டேன். அமைச்சரே, யாம் சிறிது அமைதியை விரும்புகிறோம். வேந்தவைக் கருமங்களில் ஈடுபட எம்மால் இயலாது.

அமைச் : வேந்தருக்குற்ற தளர்வின் காரணங்களை நாம் அறியலாகுமோ ?

சந்தனு : என்ன நாம் தளர்ந்திருக்கிறோமா ? யார் அப்படிக் கூறினார்கள். வேட்டைமேற் சென்று வந்ததினால் ஏற்பட்ட சிறிதளவு அயர்ச்சி. நாம் வரும் வரையும் வேந்தவைக் கருமங்களை நீரே பொறுப்பேற்று நடத்துக.

அமைச் : உத்தரவுப்படியே செய்கிறேன்.

(மந்திரி சென்றதும். அமளியிற் சாய்ந்தபடி)

சந்தனு : (சிறிது சிந்தனையோடு) ஆமாம். அவமானம். அந்தச் சிற்றரசன் அறிவிற் புலப்பட்ட நீதி பரம்பரைப் பேரரசனாகிய எனக்குத் தோன்றவில்லையே.

(அப்பொழுது சிரிப்பொலியுடன் ஒரு குரல்)

குரல் : உனக்கு எப்படித் தோன்றும்? உலகிலுள்ள அழகிகளெல்லாம் அரசனின் அந்தப்புரத்திற்கே உரியவர் என்ற பரம்பரையிற் றோன்றியவன் தானே நீ?

சந்தனு : யார் நீ? தூய சந்திர வமிசத்துக்கு, அதன் பரம்பரைச்கு மாசு கற்பிக்கும் நீ யார்?
(அப்பொழுது சிரிப்பொலியுடன் ஒரு குரல்)

குரல் : அதை ஏன்? நான் யாரென்பதை ஏன் வினவுகின்றாய்? தூய சந்திர குலமென்கிறாயா? சந்திரனிடத்துள்ள களங்கந்தான் உலகறிந்ததாயிற்றே.

சந்தனு : நீ யாராய் இருந்தாலும் சரி, இப்பொழுது என்ன சொல்கிறாய்?

குரல் : மகாராஜனே, 'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது ஒரு மகா வாக்கியம். ஆதலால் அந்தப் பெண்ணை மறந்துவிடு.

சந்தனு : மறந்துவிடவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். ஆனால்...

குரல் : மன்னனே, நீ மகா வேந்தன். நினைத்தவற்றை நினைத்தவாறே எய்தக்கூடிய நிலையிலுள்ள நிகரிலா வீரன். மனங்கவர்ந்த மங்கை ஒருத்தியை நினைந்து மாள்கிறாய். நீ நினைத்தால் அவளைக் கொண்டு வந்திருப்பாய். ஏன் அதைச் செய்ய வில்லை ?

சந்தனு : அவள் தந்தை எடுத்துக் காட்டிய நீதிக்கு, தர்மத்துக்கு அஞ்சினேன்.

குரல் : ஆமாம். நீதியைப் புரப்பதில் நிலை தடுமாறாத வேந்தனே, இங்கு உளந் தடுமாறுவதேன்? பேரெழில் மங்கையான கங்கையை மனைவியாகப் பெற்றுப் பேரின்ப வாழ்வில் திளைத்திருந்த நீயா மீண்டும் பெண் மயக்கத்தில் ஆழ்கின்றாய்? இளஞ் சிங்கமாகிய காங்கேயனுக்கு இணையற்ற வீரத் தந்தையாக விளங்கும் நீயா, இன்னும் மங்கையர் சுகம் வேண்டி, மையல் கொண்டு மாள்கின்றாய். அரசனே, மறந்துவிடு. அந்தப் பரிமளகந்தியை மறந்துவிடு.

சந்தனு : யாரை மறக்கச் சொல்லுகிறாயோ அவளை நான் மறக்கச் சித்தமாய் இருக்கிறேன் ஆனால், அந்த நறுமணம், அவள் பொன்மேனியில் இருந்து பொங்கி எழுந்த புதுமணம் எனக்கு மீண்டும் யௌவனத்தைத் தூண்டுகின்றதே, என்னை விட்டு நீங்காமற் சுற்றிச் சுழன்று கொண்டே நின்று இன்பப் போதை ஊட்டுகின்றதே. ஆ, ஐயோ, தெய்வமே, இந்தத் தருமசங்கட நிலை எனக்கேற்படலாகுமா?

குரல் : மறந்துவிடு, மறந்துவிடு என்று நான் கூறுவ தெல்லாம் கேட்டும் மனந் தடுமாறும் மன்னனே, விதியின் வலையிலே வீழ்ந்து மெலியப் போகிறாய். இந்த அடங்காத உன் மனோநிலை எத்தனை

விபரீதங்களை ஆக்குமோ அறியேன். வரும் விளைவுகளைத் தாங்கும் மனதை திடத்தைப் பெற்றுக்கொள்.

சந்தனு : நன்மையே யன்றித் தீமை விளையாத நெஞ்சம் என் நெஞ்சம். நடுநிலையன்றிக் கெடுதலையறியாதது என் சிந்தை. ஆதலின் என் நெஞ்சகத்தே எழுந்த காதல் பரிசுத்தமானதாக, சித்தி தருவதாகவே இருக்க வேண்டும். என்னை எச்சரிக்கும் நீ யாரோ அறியேன். என்றாலும் நீதி புகட்ட வந்த உனக்கு நன்றி.

குரல் : என்னை அறியாயா மன்னனே? நான்தான் தரும தேவதை. நான் வருகிறேன்.

சந்தனு : (ஆயாசத்துடன்) ஆ, எனது இந்த நிலைமையை உலகம் அறிந்தால் ? நானே நேரிற் சென்று பெண் கேட்டுந் தாசராஜன் தர மறுத்த செய்தி வெளியே தெரிந்தால்...? எனது நிலைமை என்னாகும்? அந்தோ ! பாழும் மனமே, என்னை நீ வஞ்சித்து மயக்கியது ஏன்? நானும் ஒரு மன்னனா? (மயங்கிச் சோர்கிறான்)

(திரை)

காட்சி 3

இடம் : கொலு மண்டபம்.

பாத்திரங் : அமைச்சர் மூவர், சேனாதிபதி, காவற்காரர் இருவர், காங்கேயன், சந்தனுவின் சாரதி.

நிகழ்ச்சி : சிம்மாசனம் வெறுமையாய் இருக்கிறது. மற்றையோர் தத்தம் ஆசனங்களில் அமர்ந்திருக்கிறார்கள். காங்கேயன் மிக்க ஆர்வத்தோடு தந்தையைத் தேடி ஓடி வருகிறான்.

காங்கே : அப்பா, அப்பா ...

அமைச் 1 : குரு குலத்தார் கோமைந்தர் வாழ்க.

அமைச் 2 : மதிக்குலத்து மாமதலை வாழ்க.

காங்கே : என்ன ? ... எந்தையாரைக் காணோம். அமைச்சரே, மன்னர் எங்கே ? மலர் நீங்கிய வெறுந் தடாகமாக, மதி நீங்கிய வானமாக விளங்குகின்றதே கொலு மண்டபம். எங்கே எந்தையார்?

(அமைச்சர் முதலியோர் பேச்சின்றித் தாழ்ந்து நிற்றல்)

அமைச்சரே, ஏன் வாயடைத்து நிற்கிறீர்கள் ? என்றுமில்லாத இந்தச் சூனிய நிலைமை இந்தப் பேரவையில் இன்று காண்பதேன் ? எங்கே எங்கள் வேந்தர் ?

அமைச் 1 : இளவரசே, வாழ்க. வேந்தர் பிரான் உள்ளே தான் தமது அந்தரங்க அறையிலே அமளி மீதில் அமர்ந்திருக்கிறார்.

காங்கே : என்ன? கொலுமண்டபத்தில் அமர்ந்து நீதி விசாரணை புரியுமிந்த வேளையில் எந்தையார் அமளியில் அமர்ந்திருக்கிறாரா? என்றுமில்லாத வழக்கம் இன்று நிகழ்கின்றதே. அமைச்சரே, ஏன் இந்த நிலை?

அமைச் 1 : மன்னர் பெருமானின் மனோ நிலையிற் சிறிது மாற்றம் ஏற்பட்டிருக்கிறது இளவரசே.

காங்கே : மலை குலுங்குகிறது; வானம் பிளந்து கிடக்கிற தென்று சொல்கிறீர் மந்திரியாரே. பகைவர் நடுவே படைக் கலங்களின் மத்தியிலே தனித்து நின்ற போதும் தளராத பார்த்திபரா மனோ நிலையில் மாறியிருக்கிறார்? இது விந்தை அமைச்சரே.

அமைச் 1 : ஆம் இளவரசே, யாம் உரைப்பவை உண்மையே. மலை பெயரினும் நிலை பெயராத மாமன்னர் இன்று குழைவுற்றுத் தளர்வுற்றுக் குமைந்திருக் கிறார்.

காங்கே : எந்தையாரா இத்நிலையை எய்தினார்?

அமைச் 1 : இந்நிலை என்ன? நன்றாக உண்பதுமில்லை என்று கூறுகிறார்கள் பாகசாலை அதிகாரிகள்.

அமைச் 2 : அரசர் நன்றாக உறங்குவதுமில்லை என்று கூறு கிறார்கள் அந்தப்புரத் தாதிகள்.

அமைச் 3 : யாரோடும் உரையாடுதல் கூட இல்லையென்ப தாகக் கூறுகிறார்கள்.

காங்கே : போதும், போதும். இவ்வளவெல்லாம் எந்தையார் எய்தி நிற்க ஏதொன்றும் அறியேனாக யானும் இங்கிருந்திருக்கிறேன். அமைச்சரே, மன்னர் நேற்றுச் சுமுகமாகத்தானே இருந்தார்கள் ?

அமைச் 1 : நேற்று? இந்நிலைமை தோன்றி இன்று மூன்று நாள்கள் இளவரசே.

காங்கே : மூன்று நாள்களாகத் தந்தையார் கொலுவுக்கு வரவில்லையா?

அமைச் 1 : ஆம் பிரபு அவ்விதமேதான்.

காங்கே : நன்று, எனது இளவரசுப் பதவி. ஆஹா. இளவரசராக இருந்தும் மூன்று நாள்களாக என் அரண்மனை நிகழ்ச்சிகளையே அறியாதவனாய் இருந்திருக்கிறேனே. நன்று என் அரசியற் பொறுப்பு. அமைச்சரே இந்நிகழ்ச்சியை இன்று வரையும் எனக்குத் தெரிவிக்காததேன்?

அமைச் 1 : வேந்தர் பெருமானின் ஆணையும் உள்ளமும் அதை ஏற்குமோ என அஞ்சினம் இளவரசே.

காங்கே : நல்ல ஆணையும் நல்ல உள்ளமும். அமைச்சர் பதவியில் அநுபவம் வாய்ந்த முதியவராகிய நீங்களா இவ்வாறு சொல்கிறீர்கள்? வேந்தர் இந்நிலை எய்துதற்குரிய காரணத்தையாவது அறிந்தீர்களா?

அமைச் 1 : இல்லை. வேட்டையாடி வந்ததினால் சிறிது அயர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று மட்டும் யான் சென்று உசாவியபோது கூறினார்கள்.

காங்கே : என்ன ? வேட்டையாடியதினால் ஏற்பட்ட அயர்ச்சியா? வேந்தர்களுக்கு வேட்டை விளையாட்டல்லவா? அது வினையாதல் இல்லையே.

அமைச் 1 : வேட்டைத் தலத்திலே மனதைப் பாதிக்கும் நிகழ்ச்சி ஏதும் நிகழ்ந்திருக்கலாம் இளவரசே.

காங்கே : அது இன்று மூன்று நாட்களின் பிறகுதான் அத்தினபுரத்து அனுபவம் மிக்க முதலமைச்சர் மதியிலே தோன்றுகிறது போலும். நன்று. (சிறிது யோசித்துவிட்டு) யாரங்கே ?

காவலா : இளவரசே, வாழ்க.

காங்கே : மன்னர் கடைசியாக வேட்டைக்குச் சென்ற போது தேரோட்டிச் சென்ற பாகனை அழைத்து வா. (சாரதி வருகிறான்)

சாரதி : வாழ்க இளவரசர்

காங்கே : சாரதி, நீதானே வேந்தர் வேட்டைக்குச் சென்ற போது தேரோட்டிச் சென்றாய்.

சாரதி : ஆம் இளவரசே.

காங்கே : போகும் போது மன்னர் மனோநிலை எவ்வா றிருந்தது ?

சாரதி : மட்டற்ற குதூகலத்தில் மலர்ந்திருந்தது.

காங்கே : ஆ ... வரும்போது ...

சாரதி : என்னோடு யாதோர் உரையுங் கூறாமல் சிந்தனை யோடு வந்தார்.

காங்கே ; என்ன ? வரும்போது மன்னர் அவ்வாறிருந்தது ஏன் ? பாகனே விரைந்து சொல்.

சாரதி : போதிய காரணம் இருந்தது இளவரசே. வேந் தர் தளரும் வகையிலே, மனம் மறுகும் விதத்திலே ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது பிரபு.

காங்கே : சந்திர குலத்து மன்னவருக்குத் தமது நாட்டிலேயே மன நலிவு தோன்றியதா? சந்தனு மன்னருக்கா இந்த நிலைமை? காங்கேயனாகிய என்னை ஈன்றெடுத்த எந்தையாருக்கா வனப் பிரதேசத்திலே மனம் மறுகும் நிகழ்ச்சி? நன்று நன்று. சாரதி, விரைவாக அந்நிகழ்ச்சியை விபரி

சாரதி : இளவரசே. வேட்டையாடிய மன்னர் தாகந் தீர்க்க யமுனை நதிக் கரையை அடைந்தார். அங்கே யமுனைத் துறையிலே ஓடம் விட்டுக் கொண்டிருந்த ஓர் அதிரூப சௌந்தரியாகிய பெண்ணை அரசர் பார்த்து விட்டார்.

காங்கே : ஆமாம் ... அதன் பின் ...

சாரதி : அவள் மீது சென்ற மனத்தை மீட்க முடியாத வேந்தர் அவள் தந்தையை அழைப்பித்தார்.

காங்கே : தந்தையா? அப்பெண்ணின் தகப்பன் யார்?

சாரதி : யமுனைத் துறைப் பரதவ குல மன்னன் தாசராஜன்.

காங்கே : அவர் வந்தாரா?

சாரதி : ஆம் பிரபு. எங்கள் வேந்தர் பெயரைக் கேட்டதுமே ஓடோடி வந்த மன்னன், வேந்தர் தம்மை மருகனாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டபோது ...

காங்கே : கேட்டபோது

சாரதி : மறுத்து விட்டார் இளவரசே.

காங்கே : என்ன? மறுத்து விட்டாரா? தாசராஜனா? அம் மன்னனுக்கும் அவ்வளவு துணிவா? எந்தையாரின் கீழ்ச் சிற்றரசன், எந்தையாரே நேரிற் சென்று கேட்கவும் மறுத்தானா? ஆம். அவனுக்கென்கே தெரியப்போகிறது காங்கேயன் என்னும் இளவரசன் செய்தி. காவலா.

காவலன் : இளவரசே,

காங்கே : உடனே செல். என் தேரைச் சித்தஞ் செய்து படைக்கலங்களுடன் கொண்டு வருமாறு சாரதியிடஞ் சொல்.

பாகனே, நீயும் என் தேரில் வா.

அமைச்சரே, எந்தையாரின் துன்பநிலை மாற்றி, அவரை இக் கொலுமண்டபத்தில் ஏற்றி வைத்தன்றி நான் இந்நகர்க்கு மீளேன். யான் வரும் வரை மன்னரின் பாதுகாப்பு உங்களுக்குரியது. வருகிறேன். தாசராஜனின் தருக்கையும் செருக்கையும் நொருக்கிவிட்டாலன்றி என் வெஞ்சினம் மாறாது.

(திரை)

காட்சி 4

இடம் : படகோட்டுந்துறை

பாத்திரம் : தாசராஜன், பரிமளகந்தி, சேவகன், காங்கேயன், சாரதிகள்.

நிகழ்ச்சி : பரிமளகந்தி அழுதுகொண்டிருத்தல். தாசராஜன் வருதல்.

தாசரா : அம்மா, பரிமளா... என்ன அழுகிருயா? யமுனைத் துறைத் தலைவனின் அன்புக்குரிய மகளுக்கு அழுகையும் தோன்றுமா? ஏனம்மா அழுகிருய்?

பரிமள : அப்பா, நான் ஏன் பெண்ணுய்ப் பிறந்தேன்? (விசும்புதல்).

தாசரா : என்னம்மா இது? உன் அழுகைக்குக் காரணம் என்ன? உனக்குத் துன்பம் செய்தவர் யார்? சொல்.

பரிமள : நானொருத்தி பெண்ணுகப் பிறந்ததால் மாநில வேந்தரின் மாபெரும் பகைக்குத் தாங்கள் ஆளாக நேர்ந்ததே அப்பா.

தாசரா : அட, இதுவா? அம்மா, மாநில வேந்தராஞல் என்ன, பத்துத் திசையும் பரிபாலிக்கும் பரமஞனல் என்ன? உனக்கு உரிமை தராமல் உன்னைப் பெற்றுப் போவதற்கு யான் அநுமதியேன்.

பரிமள : எந்தையே, சந்திரகுல வேந்தரின் சதுரங்க சேனைப் பலத்தின் முன் நாங்கள் எம் மாத்திரம்? எனக்காக என் ஒருத்திக்காக நீங்கள் அல்லலுறுவதா? வேண்டாம் அப்பா. அவர்கள் பகைமை முற்றமுன் என்னை அங்கே அனுப்பி விடுங்கள் அப்பா.

தாசரா : பெண் புத்தி பின்புத்தி என்பது சரிதான். பரிமளா, சந்திரகுல வேந்தர் சதுரங்க சேனைப் பலத்திலும் பார்க்க நீதியை மேலாக மதிப்பவர். ஆனபடியால் தான் அவரை யான் எதிர்த்து நிற்க முடிகிறது.

பரிமள : அப்பா, வீணுக எதிர்ப்புக்காட்டித் தாங்கள் துன்பமடைவதற்காகவா நான் தங்களுக்கு மகளாகத் தோன்றினேன். ஐயோ, தாங்கள் என்னைக் கொடுக்க மறுத்த செய்தி எந்தத் தீவினையில் தங்களை இழுத்து விடுமோ, என்ருல் நினைக்கவே முடியவில்லை அப்பா.

தாசரா : அம்மா, அஞ்சாதே. நீதியின் வரம்பு கடவாதவர் அந்தச் சந்தனு மன்னர். அவரால் ஏதும் விளையாது. அது குறித்து நீ கவலை அடைவது தான் வீண். நீ அந்த மன்னரை விரும்பியிருந்தாலும் எனது நிபந்தனையை அவர் ஏற்கவே வேண்டும்.

பரிமள : படைபலங் காட்டி என்னைக் கவர அவர் எண்ணிஞல்......?

தாசரா : எனது மகள் பரிமளகந்தியை யான் அறிவேன். வலிந்து கவரவரும் வேந்தரை நலிந்து பின்வாங்கச் செய்யும் கொடு நெருப்பாயல்லவா இருப்பாள் அவள்.

பரிமள : உங்கள் அருமந்த உயிரைப்போக்கிய பின் அது செய்வதால் என்ன பிரயோசனம் அப்பா.

தாசரா : மகளே, மானம் பெரிது. நாம் இழிகுலத்தார் தாம். அற்ப படைபலம் கொண்டவர்கள் தாம். ஆனால் எங்கள் உரிமையை, எங்களுடைமையை எம்மிடமிருந்து பறித்தெடுக்கவிட்டுப் பார்த்திருக்கும் கோழைகளல்ல நாம்.

(சேவகன் ஓடி வருகிறான்)

சேவகன் : அரசே, அத்தினபுரத்துப் பேரரசரின் மைந்தர் காங்கேயர் கடுங்கோபத்தோடு, கனல் கக்கும் கண்களோடு கணைபற்றிய கையோடு வந்து கொண்டிருக்கிறார்.

தாசரா : என்ன! இளவரசர் காங்கேயர் வருகிறாரா?

பரிமள : அப்பா வேண்டாம் இந்த விபரீதம். அப்பா, நிபந்தனையின்றி என்னை அவருக்குக் கொடுத்து விடுங்கள். உங்கள் இன்ப வாழ்வுக்கு என்னொருத்தியால் இடர் வேண்டாம் அப்பா...... அப்பா ... ...

தாசரா : அம்மா, கலங்காதே. இளவரசர் காங்கேயர் பல நூலறிவும், பண்புமுடைய மகாமேதை என்பதை நான் கேள்வியுற்றிருக்கிறேன். அவரை எதிர்கொண்டழைப்பது எமக்குப் பெரும் நன்மையேயன்றித் தீமையைத் தராது.

சேவகா, இளவரசரை வரவேற்றற்குரிய காணிக்கைப் பொருள் சித்தஞ் செய்து விரைந்து வா.

(சாரதி வருதல்)

சாரதி : தாசராஜரே, அத்தினபுரத்து இளவரசர் காங்கேயர் உமது சமுகத்துக்கு வரத் தருணம் கேட்டு நிற்கிறார்.

தாசரா : இளவரசர் என் சமுகத்துக்கு வரத் தருணம் கேட்டு நிற்கிறாரா? ஐயா. சாரதியாரே இதோ நானே வருகிறேன். இளவரசர் ஏழையேன் மீது கருணை வைத்து இங்கே வந்ததே பெரிது.

சாரதி : இல்லைத் தாசரே. அவர் இங்கு வருவதையே விரும்புகிறார். இதோ அழைத்து வருகிறேன்.

(காங்கேயன் வருதல்)

தாசரா : மன்னர் மன்னரின் மாமைந்தர் வருக. மாசிலாத கங்கையின் மாமகனார் வருக. அடிமை தாசன் வணங்குகிறேன். இப் பீடத்தில் அமர்தல் வேண்டும்.

காங்கே : பீடத்தில் அமர்வதா, யானா? வேண்டாம். ராஜனே. நான் நாடி வந்த கருமம் முதலில் முடிதல் வேண்டும்.

தாசரா : ஆம். அதை எதிர்நோக்கி அடிமை காத் திருக்கிறேன்.

காங்கே : உமது வாய் உபசாரம் மிகப் பெரிதாய் இருக் கிறதேயன்றிச் செயலில் நீர் ஏதுஞ் செய்பவ ரல்லீர் போலும்.

தாசரா : இளைய மகாராஜா கூறுவது எதுவும் அடியே னுக்குப் புரிந்திலது.

காங்கே : புரியாதுதான் தாசரே. வானில் வட்டமிடும் பருந்து தன் இரையாகிய பறவைக் குஞ்சைப் பற்றிச் செல்வதற்கு யாரிடமும் அநுமதி பெறுவதில்லை. தெரியுமா ?

தாசரா : ஆமாம். அறிவேன். ஆனால் இளைய மகாராஜா இதனையும் தெரிந்து கொள்ளல் வேண்டும் எனப் பணிவோடு சொல்கிறேன். தன் குஞ்சைப் பருந்தினிடமிருந்து காப்பாற்முமல் தாய்ப் பறவையும் வாளாவிருந்து விடாது.

காங்கே : என்ன ? காங்கேயன் முன்னின்ற இந்த வீரப் பேச்சு மன்னரே.

தாசரா : ஆமாம். மதிப்புக்குரிய சந்திரவம்சத்தார் உயிர் நீத்தும் நீதி காப்பவர்கள். தமக்கொரு நீதி, பிறர்க்கொரு நீதியெனப் பாகுபாடு காட்டாத பண்புடையவர்கள். அவர்களின் வழித் தோன்றலாகிய காங்கேயரும் அந்தத் தன்மையில் மாறுபடமாட்டார் என்ற துணிவுதான் எனக்கு.

காங்கே : என்ன நீதி பேசுகிறீர்? மன்னர், அதுவும் மகிதலம் புகழும் மாமண்டலேசுவரர், உம்மிடம் ஒன்றை வேண்டி வந்தும் அவரை உதாசீனம் செய்த நீர் சந்திரவம்சத்தைப் பாராட்டிப் பேசுவது விந்தையாகவல்லவா இருக்கிறது.

தாசரா : ஏழையேன் மன்னரை மறுத்து யாதும் சொற்றிலேன்.

காங்கே : யாதுஞ் சொல்லவில்லையா? அங்ஙனமாயின் உமது மகளை எந்தையார் பெற்றுச் செல்லாததற்கு உற்ற தடைதான் என்ன?

தாசரா : இளவரசே, உங்கள் தந்தையார் இதோ நிற்கும் என் மகளை மணம் புரிந்து கொள்ளட்டும். ஆனால் இவள் வயிற்றில் பிறக்குங் குழந்தைகள் அநாதைகள் ஆதல் கூடாது.

காங்கே : (சிரித்து) அரச குமாரர்கள் அநாதைகள் ஆவதா? ஆச்சரியமாய் இருக்கிறது மன்னரே உமது பேச்சு. சிங்கத்தின் குட்டிகள் சிறு நரிகளாதலும் உண்டா?

தாசரா : இளைய மகாராஜா, ஏழை சொல்வதை இன்னுங் கேளுங்கள். மாமன்னர்கள் வாழ்விலே பத்தினிமார் பலர். அவர்கள் பெறுங் குழந்தைகள் எல்லாம் அரசர்களாதல் இல்லையே.

காங்கே : ஆமாம். பட்டமகிஷியின் புதல்வனுக்கே பாராளும் உரிமை,

தாசரா : அங்ஙனமாயின், என் மகள் வயிற்றுப் பிள்ளைகள் உந்தையார் புதல்வர்களாயினும் அரசராதற்கு, உலகோர் ஏத்துதற்கு உகந்த தன்மை ஏதும் இல்லாதவர்களாவார் அல்லவா ?

காங்கே : ஏன்?

தாசரா : இளைய மகாராஜாவாகிய நீங்கள் இணையற்ற பெருந் திறலாளராய் அரசரின் மூத்த திருமகனாய் இருக்கும் போது......

சாரதி : தாசராஜரே, இந்தக் கொடுமையான உரைகூறி விபரீதம் உண்டாக்க வேண்டாம்

பரிமள : அப்பா. இந்த வீரத் திருமகனாரின் மனத்தைப் புண்படுத்த வேண்டாம்.

காங்கே : ஆம். நான் இருப்பது எந்தையாரின் திருமணத்துக்குத் தடையாய் இருக்கிறது

சாரதி : தாசரே, உமது நிபந்தனையின் கொடுமை எவ்வளவென்பதை நீர் உணர்கிறீரா?

காங்கே : சாரதீ, பொறு. மன்னரே நான் இளவரசனாக இருப்பதுதானே எந்தையாரின் மனோ விருப்பம் நிறைவேறத் தடையாய் இருக்கிறது. இதோ இன்றே நான் இளவரசுப் பட்டத்தைத் துறக்கிறேன்.

சாரதி : வேண்டாம், வேண்டாம். இது தகாது. இளவரசர் இவ்வாறு கூறுதலாகாது

காங்கே : யாவரும் அமைதியுறுக. தந்தை துயர் துடைக்கத் தயங்கி நிற்கும் மைந்தனால் யாதும் பயனில்லை. ஆமாம், வெறும் அரச போகத்தை விரும்பித் தந்தையாரின் மனோ விருப்பத்தை நிறைவேற்றாமல் இருந்தான் காங்கேயன் என்ற பழிச் சொல் எனக்கேன்?

நீங்கள் யாவருங் கேளுங்கள். ஆகாய வாணியும் நிலமகளும் அறிய, இமையா நாட்டத்து இறையவர் யாவருஞ் சான்றாக இதோ எனக்குரிய இளவரசுப் பதவியைத் துறக்கிறேன். இன்று களைந்த இவ்வணிகளை என்றுமே தீண்டேன்.

தாசரே மற்றொன்று, உங்கள் மகள் வயிற்றுப் பிள்ளைகளின் சந்ததியினருக்கே அஸ்தினபுரத்துச் சிம்மாசனம் என்றென்றும் உரிமையானது அதற்காக,

எல்லாரும்: அதற்காக,

காங்கே: அவர்கள் உரிமையை மறுத்துத் தமக்கும் உரிமை உண்டென்று வாதிடுவோர் இல்லாதிருக்கும் பொருட்டு யான் அரசுரிமையையேயன்றித் திருமண வாழ்வையுமே துறக்கிறேன்.

பெ. சாரதி: என்ன, வேண்டாம், வேண்டாம். இந்த விபரீதம் வேண்டாம். இது நிகழக் கூடாது.

சி. சாரதி: இளைய மகாராசா அரசுரிமை துறந்ததே அமையும். மற்றைச் சபதம் வேண்டாம்.

காங்கே: இல்லை. அதுவே வேண்டியது. ஆம், இன்று தொட்டு யான் எந்த மங்கையையும் தாயாகவும் சகோதரியாகவுமே காண்பேன். திருமணமும் இல்லறமும் என்பதைச் சிந்தையாலும் தீண்டேன். இது சத்தியம்.

அசரீரி: தந்தையின் பெருவாழ்வு வேண்டித் தன் இன்பந் துறந்த தநயனே, நீ, நீடு வாழ்க. உனது கொடிய சபதத்தை நீ இறுதிவரை காக்கும் பீஷ்மம் உடையவனாகின்றாய். ஆகையால் இன்று தொட்டு உன் நாமம் பீஷ்மன் என்றாகுக.

யாவரும்: சந்திர குல சிகாமணி பீஷ்மன் வாழ்க.

காங்கே : தாசரே, உமது மகளை எந்தையார் மணம் புரிதற்கு இன்னும் ஏதும் தடையுளதோ ?

தாசரா : ஏழையேனும் என்மகளும் என்பொருளும் தங்கள் உடைமை. உங்கள் தகவை அறியாது இந்நீண்ட சபத வார்த்தைகளைக் கூற வைத்த தமியேனை இளவரசே பொறுத்தருளல் வேண்டும். இதோ என் மகள். அழைத்துச் செல்க.

காங்கே : சின்னம்மா, மைந்தன் பணிகிறேன். தேர் மீது எழுந்தருளி எந்தையாரை மகிழ்வூட்ட வருக. சாரதி, தேரைக் கொண்டு வா.

(திரை)

காட்சி 5

இடம் : சந்தனு மன்னனின் தனியறை

பாத்திரம் : சந்தனு, பரிமளகந்தி பீஷ்மன், சாரதி, கஞ்சுகி.

சந்தனு : (தனது மயக்க நிலையிற் சிறிது தெளிந்து ஏதோ ஒன்றை உணர்பவன் போல எழுந்து) என்ன இது? அன்று நான் யமுனைத் துறையிலே அநுபவித்த நறுமணம் என்றுமில்லாதவாறு இன்று இவ்விடத்திலே கமழ்கிறதே. ஆம். சந்தேகமேயில்லை. அதே நறுமணந்தான். என் மனத்தகத்தே அழுந்திப் படிந்திருப்பதால் அந்த வாசனை என்னை மேலும் நலிவு செய்ய இத் தன்மையாக வெளிப்பட்டு வீசுகின்றதோ? இல்லை. இது அந்தப் பெண்ணிடத்துத் தோன்றிய வாசனையே தான். மனத்தின் தோற்றமன்று. நேரில் வந்து எனது நாசிகளைத் துளைத்து என்னை மயங்கச் செய்கிறதே.

(தாதி கஞ்சுகி வருதல்)

யாரது கஞ்சுகியா ?

கஞ்சுகி : மாமன்னர் வாழ்க. வேந்தர் சமுகத்தை விரும்பி வெளியே ஒரு பெண்.

சந்தனு : யார் ? ஒரு பெண்ணா ? அழைத்துவா. (பரிமளகந்தி வருதல்)

பரிமள : வேந்தர் வேந்தர் வாழ்க. அடியாள் பரிமளகந்தி வணங்குகிறேன்.

சந்தனு : ஆகா சுகந்த மணம் வீசி என் உள்ளங் குளிர் வித்த நறுமலரா? பரிமளகந்தியா?...... வா ...... ஆம். நீ ஏன் இங்கு வந்தாய். என் திருக்குமாரன் காங்கேயனின் உரிமையைப் பறித்தெடுக்கவா? வேண்டாம் போ......

(பீஷ்மன், சாரதி முதலியோர் வருதல்)

பீஷ்மன் : அப்பா. அப்பா.

சந்தனு : காங்கேயனு? என் செல்வமா? மதிக்குலத்தாரின் மணிவிளக்கே வா. உன் செல்வத் திருமுகத் தைப் பார்த்து இன்று எத்தனை நாட்களாகி விட்டன.

பீஷ்மன் : (காலில் விழுந்து எழுந்து) எந்தையாரின் இணை யடித் தாமரைகளை என் சிரசிலே சூடாமல் புன்னகை பொலியும் பொன் வதனத்தைப் பார்த்துப் புளகாங்கிதம் கொள்ளாமல் அடியே னுந்தான் நாட்களைக் கடத்திவிட்டேனே!

அப்பா, இதோ என் சிற்றன்னையார். எந்தை யார் அவரை மனமுவந்து ஏற்று அருள் புரிதல் வேண்டும்.

சந்தனு : யார்? உன் சிற்றன்னையா? யாரை அவ்விதம் கூறுகிருய்.

பீஷ்மன் : அப்பா, தாசராஜன் மகளார் எனது சிற்றன்னை யாக அமைதல் வேண்டுமென எந்தையார் வேட்டை மேற்சென்ற அன்று வனத்திலே தீர்மா னித்து விட்டீர்களாம். அடியேன் சென்று அவரை அழைத்து வந்திருக்கிறேன்.

சந்தனு : மகனே, இஃதென்ன? பெண்ணே, காங்கேயன் கூறுவதன் அர்த்தம் என்ன?

பரிமளா : வேந்தர் பெருமான் பொறுத்தருளல் வேண்டும். தங்கள் திருக்குமாரராகிய இவர் என் தந்தையாரை வந்து கண்டு என்னை இங்கு அழைத்து வந்திருக்கிறார்.

சந்தனு : என்ன, நான் கேட்பவை எல்லாம் உண்மையா? காங்கேயா, (மகனை வாஞ்சையோடு நோக்கி) இஃதென்ன? மைந்தனே, உன் கோலம் என்ன? இளவரசுக்கென உரிமை நல்கி நான் உனக்களித்த சிறு மணிமுடி எங்கே? மார்பிடையே துலங்கிய மதாணியும் மணி ஆரமும் எங்கே? இடையிற் செருகிய உடைவாள் எங்கே? கங்கா புத்திரனே, எனதரிய செல்வமே அவையெல்லாம் எங்கே?

பீஷ்மன் : அப்பா அவையெல்லாம் எனக்கு ஏன்? எந்தையாரின் மனோபீஷ்டமும் இன்பமும் நிறைவேறுவதற்குத் தடையாக விளங்கிய அப்பொருள்கள் எனக்கு வேண்டப்படாதவை. தந்தையே தாங்கள் தர வந்த இந்த உடம்பிலே தங்கள் இன்பத்தைத் தடைசெய்யும் பொருள்கள் இருத்தல் தகாதென யான் களைந்து விட்டேன். அவை யாருக்குரியனவோ அவர்களுக்கே ஆக அவற்றை அர்ப்பணித்து விட்டேன்.

சந்தனு : என்ன அவை யாருக்குரியன ? நீ ஏன் களைந்து விட்டாய் ?

பீஷ்மன் : அப்பா அந்த விருதுகள் இதோ எந்தையார் விரும்பிய எனது சிற்றன்னையாரின் திருவயிற்றினுதிக்கும் என் தம்பிமாருக் குரியவை அப்பா. அதனால், அப்பொருள்களை என் மேனியினின்றும் எடுத்து விட்டேன்.

சந்தனு : காங்கேயா, என்ன சொல்கிறாய் ?

சாரதி : மகாராஜா வாழ்க. கங்கா புத்திரர் தாசராஜ ரிடம் சென்று தமது இளவரசுப் பதவியைத் துறப்பதாகச் சபதம் கூறி எங்கள் அரசியராக விளங்கப்போகும் இந்த அம்மையாரை அழைத்து வந்திருக்கின்றார்.

சந்தனு : ஆ, மகனே, கங்கையின் கண்மணியே நீ அங்ஙனமா செய்தாய்? உன் தந்தையென யாரொருவன் தோன்றி உனக்கு வழி வழி வந்த அரசுரிமையைப் பறித்தெடுக்கும் மாபாதகத் தைப் புரிந்தேனே. அந்தோ நான் கொடியவன். மைந்தனொருவன் இருக்க மாற்றாளை விரும்பி, மைந்தனின் பெரு வாழ்வை அழிக்கத் தோன்றிய மாபாவி நான். உலகம் என்னை உதாசீனம் செய்யப் போகிறது. வேண்டாம் இந்த வாழ்வு. பெண்ணே நீ அப்பாற் சென்றுவிடு. உன்னை மணப்பதென்பது முடியாது. என் மைந்தன் பெரு வாழ்வு அதனால் அவலமாதல் கூடாது. செல், சென்றுவிடு. நான் உன்னை வேண்டேன்.

சாரதி : வேந்தர் பெருமான் சபதம் ஏதும் செய்துவிடாது பொறுமை மேற்கொள்ள வேண்டுகிறோம். இங்ஙனம் வேந்தர் பெருமான் இவ்வம்மையாரை ஏற்றுக்கொள்ளாதிருத்தலும் நேரும் என் றெண்ணிப் போலும் கங்காபுத்திரர் மற்றொரு சபதமும் எடுத்துக் கொண்டார்.

சந்தனு : என்ன மற்றொரு சபதமா? இதனிலும் கொடி தாகவும் வேறொன்றிருக்குமா? அஃதென்ன? விரைந்து சொல். மகனே விரைந்து சொல்.

சாரதி : கங்கா புத்திரர் அரசுரிமை துறந்ததோடமை யாது தமக்குப் பிறக்கும் பிள்ளைகள் அந்த உரிமையிற் பங்கு கோரும் நிலைமை ஏற்படாத வாறு...

சந்தனு : ஏற்படாதவாறு...

சாரதி : தாம் திருமணமின்றிப் பிரமசாரியாகவே நாளைக் கழிப்பதெனவும் சபதம் செய்து விட்டார் அரசே.

சந்தனு : என்ன? என் முதன் மைந்தன் இனி அரசனாகப் போவதில்லை. இனிமேல் அவனை யாரும் அரசன் என்று அழைக்கமாட்டார்கள். அந்திய காலத்திலே என் அருகிருந்து மழலை மொழி கூறி மனத்தை மகிழ்விக்கும் பேரக் குழந்தைகள் என் வாழ்வில் இனி இல்லை. மைந்தன் பெரு வாழ்வும் மருமகளின் பணியும் கண்டு களித்து நிற்கும் கவலையற்ற வாழ்வு எனக்கு இனி இல்லை. அந்தோ. இத்தனை கொடிய பீஷ்மஞ் செய்தாயே மகனே, இவ்வளவும் எனக்காக என் ஒரு தகாத ஆசையின் நிறைவேற்றத்துக்காக.

(ஓடித் தழுவிக் கொண்டு)

காங்கேயா, என் கண்மணியே, என் பீஷ்மச் செல்வமே, நீ என்ன விரும்புகிறாயோ கேள். நீ விரும்பும் வரம் எதுவாயினும் நான் தருவேன். கேள் மகனே கேள்.

பீஷ்மர் : எந்தையே, இதோ கண்ணீர்த் துளி சொட்டக் கலங்கி நிற்கும் என் சிற்றன்னையாரை உங்கள் உரிமை மனைவியாராக ஏற்று என்னை உய்விக்க வேண்டும். அதுவே நான் தங்களிடம் கோரும் வரம்.

சந்தனு : ஆ... இதிலும் கூடத் தன்னலமில்லையா? என் தியாகச் செல்வமே, நீ கோரிய வரந் தந்தேன். பரிமளகந்தியே, தேவரும் மூவரும் யாவரும் அறிய இன்றுமுதல் நீயே என் பட்டமகிஷி. நீயே என் தர்மபத்தினி.

பரிமள : வேந்தர் வேந்தரின் திருவடித் தொழும்பன்றி வேறு பணி இனி எனக்கில்லை. பிராணநாதரே, அடியாள் வணங்குகிறேன்.

(சந்தனு தூக்கி நிறுத்துகிறுன்)

பீஷ்மர் : எந்தையே, சிற்றன்னையே, தமியேனை ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

பரிமள : என் மூத்த திருப்புதல்வா, நீ நீடூழி வாழ்க.

சந்தனு : கங்கையாம் மங்கை தந்த கணிப்பிலா மாணிக்கமே, தந்தையின் வாழ்வுக்காகத் தன் இன்பந் துறந்த தனிப்பெரு மைந்தனே கேள்.

'இப் பூவுலகிலே நீ என்று இறக்க விரும்புகிருயோ அன்றுதான் உன்னை மரண தேவதை அணுக வேண்டும். உன் விருப்பின்றி உன்னை மரணம் எய்தாதிருக்கக் கடவது. இது செம்மை நெறி பூண்ட சந்திரகுல வேந்தனின் தனிப் பெரும் ஆணை...'

பாரதமா காவியஞ்சொல் பண்புகளின் நிலைக்களனே
மாரதனே சிலைவலவா மகன்தந்தைக் காற்றுவன
பேருலகி லேபிறங்கப் பெயருரைத்துப் போற்றுகின்ற
வீரர்குல சிகாமணியே வீட்டுமனே வாழியநீ ★

(திரை)

ജീവമണി

[திருநெல்வேலியில் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற நாடகம்.] 1966

பாத்திரங்கள்

அருச்சுனன் — அத்தினபுர வேந்தன்

பப்பிரவாகன் — சித்திராங்கதை - அருச்சுனன் புதல்வன்

சாரதி

பாண்டிய அமைச்சர்

பாண்டிய வீரர்

சித்திராங்கதை — பாண்டிய அரசி

உலூகி — நாகலோக அரசி

செங்கமலம் — தாதி

காட்சி 1

இடம் : மதுரை அரண்மனை அந்தப்புரம்.

பாத்திரம் : சித்திராங்கதை, செங்கமலம், பப்பிரவாகன்.

நிகழ்ச்சி : சித்திராங்கதை கடவுள் வணக்கம் செய்து கொண்டு நிற்றல். தாதி வருதல்.

சித்திரா : (வணக்கம் முடித்துத் திரும்பி வருதல்)

தாதி : மகாராணியார் வாழ்க.

சித்திரா : யார் செங்கமலமா, என்ன செய்தி? விரைவாகச் சொல்.

தாதி : தேவியார் அவர்கள் சிறிதும் எதிர்பாராத சுப செய்தியோடுதான் அடியாள் வந்திருக்கிறேன். எங்கள் மகாராசா அசுவமேதக் குதிரையொன்றினைக் காத்துப் பின்வரும் விறல் வீரராக எம் மதுரையின் புறத்தே வந்துகொண்டிருக்கிறாராம். ஒற்றர் கொண்டுவந்த செய்தியம்மா இது.

சித்திரா : என்ன? யாரை எங்கள் மகாராசா எனக் குறிப்பிடுகிறாய், செங்கமலம்? துடிக்கும் என் இதய தாபத்தை மிகுவிக்கும் இந்தச் செய்தியிற் கூறப்பட்ட மகாராசா யார்? விரைந்து சொல் செங்கமலம்.

தாதி : தேவியார் வாழ்க. பாரதப் பெரும் போரிலே பகைவரும் போற்ற வில்லாண்மை காட்டி வென்ற விஜயகாண்டீபர்தாம் வந்து கொண்டிருக்கிறார் அம்மா.

சித்திரா : என் நாதரா வந்துகொண்டிருக்கிறார்? சொக்கநாதப் பெருமானே, மீனாட்சி அன்னையே எனக்கு அருள் சுரந்து விட்டீர்கள். 18 ஆண்டுகளின் பின் அருமை நாதர் என்னைத் தேடி வந்து விட்டார் என் தவம் பலித்தது. செங்கமலம், இந்தா, இந்த மகிழ்ச்சி நிறைந்த சுப செய்தியை வந்து கூறிய உனக்கே இந்த முத்தாரம். ஓடு. ஓடிச்செல். நகரை அலங்காரஞ் செய்யும் படி எண் பேராயத்தாரிடம் உரைத்து விடு. செல்.

தாதி : உத்தரவு மகாராணி.

(பப்பிரவாகன் கொதிக்கும் கோபத்தோடு வருதல்.)

பப்பிர : அம்மா, அம்மா, யாரோ வடபுலத்தரசனுக்கு உரிமையான அசுவமேதக் குதிரை மதுரை மாநகரெல்லையில் வந்து கொண்டிருக்கிறதாம். அந்த அளவுக்கு இளைத்து விட்டார்கள் தென்னாட்டுப் படை வேந்தர்கள். அம்மா அநுமதி தாருங்கள். கொதிக்கும் என் வெஞ்சினத்தை - துடிக்கும் என் தோள்களின் தினவைத் தீர்க்க வழிபிறந்து விட்டதம்மா. வில்லாளிகளுக்கெல்லாம் வில்லாளியாகிய வெற்றிவேந்தர் அருச்சுன மகாராசனின் புதல்வன் பப்பிரவாகன் என்றொருவன் இருக்கிறான் என்ற எண்ணங்கூட அக்குதிரையைக் காத்து வரும் வடபுலத்தரசனுக்குத் தோன்ற வில்லைப்போலும். குதிரையைப் பிடித்துக் கட்டி அவன் கொற்றத்தை அடக்கி என் செற்றத்தைத் தீர்த்துக் கொள்கிறேன். என்னை வாழ்த்தி விடை தந்தனுப்புங்கள் அம்மா.

சித்திரா : என் இளஞ் சிங்கமே பொறு. பாண்டிய வேந்தரின் தூண்டாமணி விளக்கே பொறு. ஆறி அமர்ந்து சிந்தித்துச் செயலாற்றுவது தானப்பா வேந்தர் வெற்றியின் இரகசியம். வந்திருக்கும் குதிரை யாரால் அனுப்பப்பட்ட தென்பதை அறிந்தாயா? தொடர்ந்து பாதுகாத்து வரும் வீரரின் வெற்றி மேம்பாட்டைத் தெரிந்தாயா?

பப்பிர : அம்மா, இது உரிமையைப் பாதுகாக்க உந்தும் உணர்ச்சியின் கொதிப்பம்மா; இந்த நிலையில் ஒன்னூர் தகவினையறிந்து உபாயந்தேடி அமர் புரிய எண்ணுதல் உத்தம வீரத்துக்கிழுக்கம்மா. தானேதான் வீரன், தன்னொத்த வீரர் தரணியில் இல்லையென்ற ஒரு மன்னனது மமதையின் வடிவந்தான் குதிரையாக மாறி மதுரைவரை வந்துள்ளது. யாரோ விஜயகாண்டீபராம். அவர் விஜயத்தையும் காண்டீபத்தையும் ஒரு கை பார்க்கிறேன். ஏனம்மா திகைத்து நிற்கிறீர்கள். அனுமதி வழங்குங்களம்மா.

சித்திரா : சிவ, சிவ. மீனாட்சித் தாயே வந்திருப்பவர் தந்தையென அறியாது துடித்து நிற்கும் இந்த மைந்தன் புரிகின்ற நிந்தையை யான் கேட்க நேர்ந்ததே. மகனே, நானே தவறு செய்தேனடா? உன் பிதாவை இழித்துரைக்கும் வகையில் உன்னை வளர்த்தெடுத்தது என் குற்றமடா. மகனே, மேலும் மேலும் பிதா நிந்தை புரியாதே. குதிரையின் பின் வந்த கொற்றவீரர் விஜயகாண்டீபர் உன் தந்தையாகிய அருச்சுன மகாராஜாடா கண்ணே.

பப்பிர : அம்மா.........என்னம்மா இது. விஜயகாண்டீபர் என் தந்தையாரா? ஆ, இந்நேரம் வரையும் எந்தையாரின் வீரத்தைப் பழித்துரைத்தலாகிய நிந்தனையையா நான் செய்துகொண்டிருந்தேன்? அம்மா, இந்நிலையிலே — தந்தையை அறிந்து கொள்ளாத வகையிலே ஏனம்மா என்னை

வளர்த்தீர்கள்? எந்தையாரின் குலத்தினர் முழுவதுமே கலந்து கொண்ட, ஏன் பாரத நாடு முழுவதுமே பங்கெடுத்துக் கொண்ட, பாரத யுத்தம் பற்றிய செய்தியை, அது முடிவடைந்த பின்னர் தானே எனக்கு எடுத்துரைத்தீர்கள். சுத்த வீரர்களாகிய என் அண்ணன்மார், அபி மன்னன் அராவான் முதலாயினரோடு கலந்து பயிலாத தனி வாழ்வில் இவ்வாறு என்னை ஏனம்மா கரந்து வைத்தீர்கள்? இஃதுங்களுக்குத் தருமமா.........?

சித்திரா : பப்பிரவாகா, என் செல்வமே, என்னை மேலும் மேலும் குறை கூறி வருத்தாதே. நீ உன் தந்தையார் பிரதாபத்தை அறியக் கூடாது என்பதற்காகவே நான் உன்னை இருண்ட வாழ்விற் புகுத்தினேன். பாரத யுத்த நிகழ்ச்சிகளை அறிய நேர்ந்தால் உடனே உன் தந்தையாருக்குத் துணையாகப் போர்க்களம் புகுந்து விடுவாய் என்று எண்ணித்தான் உன்னை அவ்வேளை பார்த்து நாக லோகத்தில் உன் பெரிய தாயார் உலூகி மகாராணியாரிடம் அனுப்பி வைத்தேன்.

பப்பிர : நிறுத்துங்கள். போதும். தந்தையை அறியவொட்டாமல், அவர் வாழ்வு தாழ்வுகளில் பங்கு கொள்ளவிடாமல் தனயரைத் தடுத்துவாழும் தாய்மாரும் உலகில் உண்டுபோலும். ஏனம்மா இந்தச் சதி புரிந்தீர்கள். உங்கள் மைந்தன் கோழை என்று உலகு கூறுவது உங்கள் செவிக்கு உவப்பாகுமா அம்மா......?

சித்திரா : மகனே, அநியாயமாக என்னை எண்ணுதே. இந்த மதுரைப் பேரரசுக்கு உரியவன் நீ ஒருவனே. நீ பிறந்த அன்றே எனது தந்தையாராகிய பாண்டியர் உன் தந்தையாரிடம் உன்னைத் தன் நாட்டரசனுகத் தரும்படி கேட்டுப் பெற்றுக் கொண்டனர். நீ உணர்ச்சியுள்ளவனுகுங்

காலத்து உன் தந்தையாரது நிகழ்ச்சிகளை உன்னளவில் மறைத்து வைக்கவேண்டிய கடப்பாடு எனக்கு நேர்ந்துவிட்டது மகனே. ஆதலால் என்னை மன்னித்து விடப்பா.

பப்பிர : ஆஹா, அம்மா, நன்று உங்கள் நியாயம். ஒரு நாட்டின் அரசுரிமையைப் பாதுகாப்பதற்காகப் பிதாவின் வாழ்விலே பிள்ளை கலந்துகொள்ள முடியாதபடி செய்யவும் வேண்டியிருந்ததா? நன்று இந்த அரசாட்சி அம்மா. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? அதையாவது சொல்லுங்கள். எந்தையாரை மதுரையிலே தங்கவைத்துவிட்டு அவர் கொணர்ந்த குதிரையின் காவலை நான் ஏற்று மிகுதியுள்ள அரசர்களை வென்று வருவதுதான் என் குற்றத்திற்குரிய பிராயச்சித்தம். என்ன செய்வதற்கும் உங்கள் ஆணையை வழங்குங்களம்மா.

சித்திரா : என் வீரசிகாமணியே பொறு. உனக்குரிய கட்டுப்பாடுகள் இனி இல்லை. உன் தந்தையை நீ தரிசித்து, அவர் வாழ்விற் கலந்து கொள்வதற்கு இனி எந்த விதத் தடையும் இல்லை. செல் மகனே, செல் உன் தந்தையாரைச் சென்று தரிசித்து அவர் உபய பாதங்களைத் தொழுது உடனழைத்துக் கொண்டு வா. தாமதம் செய்யாதே. மகனே, என் மன்னரைக் காணுமல் இனி ஒரு கணமேனும் நானுந்தான் தரிக்கவியலாது விரைந்து செல்லப்பா.

பப்பிர : அம்மா நீங்கள் நீடு வாழ்க. இதோ போகிறேன். எனது வெற்றிப் பிரதாப வீரத் தந்தையைக் கண் களிக்கக் கண்டு அழைத்து வர இந்தக் கணமே செல்கிறேனம்மா.

(செல்கிருன். மைந்தனின் வீர நடையை நோக்கிய உவகையில் தன்னை மறந்து நிற்கிருள் சித்திராங்கதை.)

காட்சி 2

இடம் : வைகைக் கரை.

பாத்திரம் : அருச்சுனன், சாரதி, பப்பிரவாகன், இரு வீரர்கள்

நிகழ்ச்சி : அருச்சுனன் நதிக் கரையோர இயற்கை எழில் கண்டு வியத்தல்.

அருச்சு : ஆ, சாரதி, அசுவத்தைக் காவல் செய்வதையும் மறந்து, இந்த நதியின் கரையோர வனப்பில் ஈடுபட்டு நாம் நெடுந் தூரம் வந்து விட்டோம் போலல்லவா இருக்கிறது ?

சாரதி : ஆம் பிரபு இந்த நதிக் கரையின் மாட்சி பற்றற்ற பெரிய முனிவரையும் மயக்கித் தன் வசமீர்த்து விடும் என்பதில் தவறேயில்லை. ஆஹா, என்ன அற்புதமான கரையோரம் இது.

அருச்சு : (ஒரு பாறையில் அமர்ந்தவாறே) இந்த நதியின் பெயர் என்ன தெரியுமா சாரதி? இதுதான் வைகை நதி. இங்கு வீசும் காற்றின் குளிர்ச்சியைப் பார்த்தாயா?

சாரதி : ஆம், மகாராசா, வடதேசத்திலிருந்து இந் நீண்ட தூரம் வரையும் அனுபவித்தறியாத ஒரு புத்துணர்ச்சியை இந்த மென்சீதக் காற்றுத் தந்து கொண்டிருக்கிறது பிரபு.

அருச்சு : சாரதி, உன் பேச்சு மிகப் பொருத்தம். இந்த இளங்காற்று இந்த நாட்டுக்கே உரிய காற்றப்பா. சந்தனச் சோலை நிரம்பிய தண் பொதிகைமலை யிலே தோன்றி, சிந்தையை மயக்கி, எழுந்து வீசும் மந்த மாருதம் அப்பா இது. இக்காற்றை இங்குள்ளார் தென்றல் என்று குறிப்பார்கள்.

சாரதி : மகாராசா குறிப்பிடுவது போல் இந்த நாடு காண்பார் கண்ணையும் கருத்தையும் கவரும் கவின் நிறை நாடு என்பதில் தவறேயில்லை.

அருச்சு : சாரதி அம்மட்டோடு நின்று விடாதே. இந் நாட்டு மக்கள் பேசும் மொழியை நீ கேட்டிருக்க மாட்டாய். அப்பப்பா என்ன இனிமை. எவ் வளவு கர்ணாமிர்தம்.

சாரதி : அப்படியா அரசே, அந்தத் திவ்ய மொழியின் பெயரை அடியேன் அறியலாகுமா, பிரபு. ...?

அருச்சு : ஆமாம் அறியலாம். அதன் பெயர் தமிழ். செவிமடுத்தார் யாரையும் தேவ அமிர்தம் உண்டார் போலாக்கும் செந்தமிழ் என்னும் பெயரினது அம்மொழி. அந்த மொழியிலே மயங்கித்தான்

சாரதி : மகாராசா, மேலும் பேசாமல் இருக்கிறீர்களே ...

அருச்சு : வேண்டாம் சாரதி. அந்த இன்ப நினைவுகள் யாக கருமத்தை மேற் கொண்டிருக்கும் என் நெஞ்சகத்தில் எழக் கூடாதவை.

சாரதி : வேண்டாம் பிரபு. மன்னர் வாழ்விலே எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள் நிகழும்? அவையெல்லாம் ஏழையாகிய எனக்கேன்? அரசே, இந்த நன் னாட்டின் அரசியல் பற்றி ஏழையேன் ஏதும் அறியலாகுமோ? ... ...

அருச்சு : ஆமாம். ஆனால் சிறிது பொறு. எமது அசுவ மேதக் குதிரை நாட்டினுட் புகுந்த செய்தி இது வரையில் அரண்மனைக் கெட்டியிருக்கும். அச் செய்தியின் பிரதிபலிப்பைக் கொண்டு நீயாகவே அரசியல் பற்றி அறிந்து கொள்ளுவாய். பாண்டிப் பொன்னுடாகிய இது படை வலியிற் சிறிதும் தாழ்ந்ததன்று. ஆ, அஃதென்ன பேரோசை?

சாரதி : (சிறிது போய் மீண்டுவந்து) யாரையோ வாழ்த் தும் ஒலி. வீரர் பலர் சூழ்ந்து வாழ்த்த ஒரு சுந்தர வாலிபர் இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார் பிரபு அதோ அவர்கள் எம்மைக் கண்டு விட்டார்கள். சுற்றி வந்த கூட்டத்தை அங்கே நிறுத்திவிட்டு அவ்விளைஞர் மற்றொரு வீரனோடு எம்மை நோக்கி வருவதைப் பாருங்கள்

இஃதென்ன ? அரசே அந்த அழகிய இளைஞரின் பேரெழில் என்னை மயக்குகிறது பிரபு.

அருச்சு : அப்படி என்ன புதுமையைக் காண்கிறாய் சாரதி?

சாரதி : வேந்தர் கொற்றம் வாழ்க. அங்கு வந்து கொண்டிருக்கும் காளையும் தேவரீரும் உருவத் தால் ஒத்திருக்கிறீர்கள் அரசே. அவருடைய இளமைத் தோற்றந்தான் உங்களினின்று அவரை வேறு பிரித்துக் காட்டுகிறது

அருச்சு : (குறிப்பாகப் பார்த்து) ஆமாம். சாரதி நீ கூறு வது உண்மையே. பாரதப் போரிலே, பகைவர் செந்தலைகளை நிலத்திலுருட்டிப் பந்தாடிய என் பாலகன் அபிமன்னன் தான் உயிர் பெற்றெழுந்து வருகிறானோ என்று எண்ணும்படி தோன்றுகிறான் அந்த இளைஞன். அவன் இந்த மதுரை நாட்டு அரசிளங் குமரனாகத் தான் இருக்க வேண்டும்.

சாரதி : பிரபு, ஏழையைச் சோதிக்க வேண்டாம். வருகின்ற கட்டழகுப் பெட்டகமான இந்த இளங்குமாரருக்கு எங்கள் அருச்சுன மகாராசரின் அருமைத் திருப் புதல்வருக்குரிய உபசாரங்களை நான் செய்ய வேண்டுமென என் உள்ளந் தூண்டுகிறது. அரசே, யான் அங்ஙனம் செய்யாது விடும் தவற்றினை எய்தாமல் அடியேனைக் காத்தருளுங்கள் மகாராசா ... ...

அருச்சு : சாரதி, சிறிது பொறு. உன் மனத்தின் ஐயங்கள் விலகும். சிறிது அப்பாற் சென்று நின்று நிகழ்பவற்றைக் கருத்தாகப் பார்.

(சாரதி விலகிச் செல்கிறான்)

பப்பிர : அப்பா, அப்பா நிலவுலகில் நான் பிறந்த அன்றே என்னைத் தாங்கள் நீங்கிச் செல்லத் தந்தையென்பார் யாரெனத் தெரியா நிலையில் வாழும்படி என்னைச் செய்த விதி இன்று தன் பிடியைத் தளர்த்திக் கொண்டதப்பா. வெற்றிச்சிலை வளைத்து வீரம் நிலைநாட்டும் கொற்றத் திருவேந்தே. எந்தையே, மைந்தன் பப்பிரவாகன் வணங்குகிறேன்.

அருச்சு : இளைஞனே, நீ என்ன சொல்கிறாய்? என்னைத் தந்தையே என்று அழைக்கும் உரிமை உனக்கு எப்படி உண்டாகும்? நீ யார்?

பப்பிர : அப்பா, பாண்டி நாட்டின் மகாராணியார் சித்திராங்கத தேவியார் தாம் என்னை ஈன்றெடுத்த அன்னையார். திக்கெல்லாம் புகழ் வீசும் சித்திரச் சிலைக்கை விஜய காண்டீபரே அந்த அன்னையாரின் அருமைக் கணவரென்பது உலகப் பிரசித்தம் அப்பா.

அருச்சு : ஆமாம், என் அருந்துணைவி இந்த நாட்டின் அரசி என்பதும் அவளிடத்தே தோன்றிய என்

மைந்தனொருவனுளன் என்பதும் யாம் அறிவோம். 18 ஆண்டுகளின் முன் - அவன் பிறந்த அன்றே - விட்டு நீங்கிச் சென்ற யாம் நீ தான் எம் மகனென்று கூறுவதை எப்படி நம்புவது?

பப்பிர : எந்தையே, அரண்மனைக்கு எழுந்தருளுங்கள். அங்கே தங்களின் வரவு நோக்கிக் காத்திருக்கும் - சகோரப் பறவை போல் உங்களின் வரவை உவந்து நோக்கியிருக்கும் என் அன்னையார் உங்கள் ஐயங்களைப் போக்குவார்கள்.

அருச்சு : வாலிபனே, சொந்தத் தந்தைக்குத் தன் புத்திரனை அடையாளங் காணத் தெரியாது என்பது உன் சித்தாந்தமா? நீ என் மகன் தான் என்பதை உன் அன்னை சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? சிங்கக் குட்டியை இதுதான் சிங்கக் குட்டியென்று சுட்டியுணர்த்தவும் வேண்டுமா? போ, போ. மருவார் உடற் புலத்துப் புக்குழலாரும் கொடுவாம் போர்வாள் அபிமன்னனைத் திருமகனே என்றழைத்த வாயால் உன்னையும் என் புதல்வனென அழைக்கச் சொல்கிறாயா?

பப்பிர : அப்பா, எந்தையார் வருவார், அவர் வெற்பனைய தோள்களிலே சாய்ந்து, என் தந்தைப் பாசத்தைத் தீர்த்துக் கொள்வது எப்போது என ஏங்கிக் கிடந்த என்னை எடுத்தெறிந்து பேசாதீர்கள். அபிமன்னர், அரவான் ஆகிய என் அண்ணன்மார்களைக் கண்டு பழக, அவர் வீர தீரங்களைக் கண்டு, என் செயலையும் அவர்க்குக் காட்டிக் குதூகலிக்கத் தவம் புரியாத பாவியாக நான் வளர்ந்தேனே. அந்தக் குற்றம் என் மேலதா அப்பா?

அருச்சு : சீ, என் வீரப் புதல்வர்களைக் கோழையாகிய நீ அண்ணன்மார் எனக் கூறல் தகாது. கூறி,

அவர் வீரத்துக்கு மாசு கற்பிக்காதே. வில்லின் நாணோசையைக் கொண்டே பகைவர் உயிர் குலைக்கும் பார்த்தனின் மகன் எனக் கூறிக் கொள்ள உனக்கென்ன ஆசையாக இருக்கிறதா? வளர்ந்த இடம் பிழையென வாதாடுகிறாயே. மான் கூட்டத்திலே வளரும் புலிக்குட்டி மானின் குணமுடையதாக மாறுவதும் உண்டா? செல். சென்றுவிடு.

பப்பிர : தந்தையே, வீரமற்ற கோழையென்று அடியேனைக் குத்திக் குறை கூற யான் நடந்து கொண்டேன். எந்தையார் முன்னிலையில் என் வீரங் காட்டற்கு ஏது வொன்றுமில்லையே. அன்றியும் பெரியவர்களாகிய உங்கள் முன்னையில் யான் எப்படியப்பா தலை நிமிர்ந்து நிற்க முடியும்? அப்பா நான் புரிந்த பிழையெல்லாம் பொறுத்து என்னை ஆதரியுங்கள்.

(நிலத்தில் வீழ்ந்து பணிகிறான்)

அருச்சு : விலகிச் செல், எனக் கடிந்துரைப்பது கேட்டும் காலடியிற் பணிந்து கிடக்கும் நீயும் ஒரு க்ஷத்திரியனா? வீரங் காட்டவுஞ் சந்தர்ப்பம் வேண்டுமா? தானே வீரனெனத் தருக்கிய ஒருவனால் அனுப்பப்பட்ட அசுவமேதக்குதிரை உன் நாட்டினுட் புகுந்திருக்கிறதே அஃதோர் அரிய சந்தர்ப்பமில்லையா? அந்தக் குதிரையைப் பிடித்துக் கட்டி நீ வீரன் தான் என்பதை உலகறியச் செய்திருக்கலாமே. தருக்கினான் ஒருவன் என்றதுமே முருக்கி எழும் வெஞ்சினங் கொள்ளும் க்ஷத்திரியப் பண்புள்ளவன் தானா நீ? ஆமாம் இங்கு நீ கொணர்ந்து என் காலடியில் வைத்த காணிக்கைப் பொருளே அதற்குச் சான்று ... ... (நகைத்து) அதமனே, என் மைந்தனெனக் கூறிக் கொண்டு இன்னும் ஏன் என்முன் நிற்கிறாய்? சென்று விடு. நீ க்ஷத்திரியனேயல்லன்.

நீ அரச பத்தினியின் வயிற்லே பிறந்தவனே யல்லன். பரந்த இந்தப் பாண்டிய சாம்ராஜ்யம் படைப்பலமற்ற ஒரு பயங்கொள்ளியையா பாராளும் மன்னனுய்ப் பெற்றிருக்கிறது?

பப்பிர : (மீசை துடிக்க உடம்பு பதறக் கோபமுற்றவனுய்) ஹா நான் க்ஷத்திரியனல்லன். என் தாய் இராச பத்தினியல்லள். என் பாண்டிய நாடு வீரமற்ற மன்னனைப் பெற்றிருக்கிறது. இவ்வாறு கூறியவர்களும் உயிரோடு இருக்கிருர்கள். பப்பிர வாகா, இவற்றைச் செவியேற்றுக் கொண்டும் இங்கு நீ நிற்கிருயே. என் செய்வேன்? நிந்தை புரிபவர் எந்தையார் ஆயினுரே. கொதிக்கும் என்னுடைய கோப நெருப்பைத் தருமம் தணிக் கிறதே. எந்தையே, யான் வருகிறேன். மேலும் மேலும் என் வீர வாழ்வினுக்கு மாசு கற்பிக்கும் உங்கள் பேச்சை இவ்வளவில் நிறுத்துங்கள். சுருண்டு கிடப்பது கொடிய நாகமென்பதுணராது குச்சி கொண்டு குத்தும் குழந்தைமையை நான் மேலும் பொறுத்தல் இயலாதப்பா. வருகிறேன்.

(சாரதி வெளி வருதல்)

சாரதி ; மாமன்னரே, யாதுமறியா இளங்காளையாகிய தங்கள் திருக்குமாரரை இவ்வாறு சோதனை புரியலாகுமா? பிரபு.

அருச்சு : சாரதி, இப்பொழுது உன் ஐயங்கள் நீங்கியிருக் கும் என எண்ணுகிறேன். இன்னும் பொறு. மேல் என்ன நிகழும் என்பதை இருந்தறிவோம்.

சாரதி : ஆமாம், மன்னர் கருமங்களையும் மன எண்ணங் களையும் அளந்து கூறும் அறிவு எமக்கேது?

காட்சி 3

இடம் : புற நகரிலே ஒரு தனியிடம்

பாத்திரம் : பப்பிரவாகன், மந்திரியார், உலூகி

நிகழ்ச்சி : பப்பிரவாகன் அழன்றெழும் கோபத்தோடு அமைச்சரைப் பார்க்கிறான்.

பப்பிர : அமைச்சரே, தந்தையாரென்று தரிசிக்கச் சென்ற யான் பட்ட நிந்தையான பரிபவம் எனக்குப் போதும். ஹா, பாண்டி நாட்டு வீரம் பழியடைய நின்றேனே. ஈன்ற அன்னையார் இழிந்தவர் எனக் கூறக் கேட்டும் ஏதொன்றும் செய்ய இயலாமல் இருந்தேனே. துடிக்கிறது என் உயிர். எரிகிறது என் மான உணர்வு. மூண்டெரியும் என் மானத்தைத் தகைந்து நிற்கும் தருமத்துக்கு முன் யான் யாது செய்வேன்? அந்தோ இப் பழிமொழி தாங்கியும் நெடுநிலத்து வாழ்வதா?

அமைச் : இளவரசே வருந்துதல் தகாது. பாண்டிய வீரத்தைப் பழித்துரைக்கப் பாருலகில் வன்மையுள்ளார் எவருமில்லைப் பிரபு. பழிப்புரை கூறியவர் உங்கள் தந்தையார். அது குறித்து வெம்மை கொள்ளுதல் பண்புடை மைந்தருக்குகந்ததன்று.

பப்பிர : ஆமாம். பண்பும் தருமமும் போற்றிய காரணத்தினாலே தான் அந்தப் பழியுரைத்த நா இன்னும் வைகைக்கரை மண்ணிலே வீழ்ந்து துடிக்காமல் இருக்கிறது. எந்தையார் என்ற பெருமையைத் தாங்கியமையாலேதான் அன்னையை நிந்தித்து அசைந்த அந்தத் தலை வையைப் பெருக்கிலே மிதக்கும் இளங் குரும்பையாகாமல் இன்னும் இருக்கிறது. அமைச்சரே, கொதிக்கும் என் கோபந்தீரும் குறியெதுவென்று கூறுங்கள்.

அமைச் : இளைய மகாராசா, அன்னையின் ஆணை தாங்கி, தந்தையைக் காண வந்த தாங்கள் அன்னையிடம் மீண்டு செல்வதே செய்யத்தக்கது. வாருங்கள் அரசியாரிடம் சென்று நிகழ்ந்தன உரைப்போம்.

பப்பிர : என்ன, அரண்மனைக்குச் செல்வதா ? அடியுண்ட வேங்கை மீண்டும் குகைக்குள்ளே புகுந்து பதுங்குமா ? பப்பிரவாகன் தனக்கேற்பட்ட மாசு துடைத்தபின் பன்றி அரண்மனைக்குள் நுழையான். அமைச்சரே, ஆ பகைத்துப் போர் செய்யலாமென்றால் தந்தையென்ற தர்மம் தடுக்கின்றது. அதேவேளையில் அவருரைத்த புன்மையாகிய பழி மொழியை என் தோள் சுமக்கின்றது. நான் என் செய்வேன் ? அம்மா, அம்மம்மா .... (சோர்கிறான்)

அமைச் : (அவனைத் தாங்கியபடி) இளவரசே, கலங்காதீர்கள்.

(நாக கன்னிகையாகிய உலூபி தோன்றுதல்)

ஆ, அதோ தங்கள் தந்தையாரின் மற்றொரு பத்தினியார் நாகலோகத்து உலூபி மகாராணியார் வருகின்றார்கள்.

பப்பிர : ஹ, என் பெரியன்னையாரா ? அன்னையே மைந்தன் வணங்குகிறேன்.

உலூகி : எழுந்திரு குழந்தாய். (எடுத்துத் தடவியபடி) என்ன? மலர்ந்து பொலிந்த புதுமலர் போல் இருக்கும் உன் வதனம் மெலிந்து சோர்ந்து காணப்படுகிறதே? பப்பிரவாகா ஏன் இந்த மாற்றம்?

பப்பிர : பெரியன்னையே, எனக்குச் செயல் இல்லை. யான் பிறந்த நாளில் இருந்தே முகதரிசனம் பெறாத எந்தையார் இந்த நகர்ப்புறத்தே வந்துள்ளார். பெரியம்மா அவரை வந்தனை செய்யச் சென்று யான் பெற்ற நிந்தனைகளினால் தோன்றிய சிந் தனைக் குறிகளம்மா இவை …………

உலூகி : என்ன, என் பிராணநாதர் இங்கே உங்கள் நக ரெல்லையில் வந்துள்ளாரா? பப்பிரவாகா எனக்கு இன்பத்தேன் வார்த்தாயப்பா. அவ ரால் உனக்கேன் நிந்தனை ஏற்பட்டது? புகழ் பெற்ற பார்த்தனாரின் திருமகன், தமிழ் பெற்ற பாண்டி நாட்டின் தனிப் பெரு வேந்தன், தந்தை சொன்னார் நிந்தையுரை யென்று தளர்வதா? மகனே நிகழ்ந்ததை விரி வாகக் கூறு. கலங்காதே.

பப்பிர : பெரியம்மா, தந்தையார் வந்திருக்கிறார் எனக் கேட்டு ஓடோடிச் சென்று தாள்பணிந்த என்னை அவர் 'மைந்தனே வா'வென்று ஏற்றுக்கொள்ள வில்லை. 'கோழையே போ' என்று கொதித்து நின்றாரம்மா. வேந்தரின் வெற்றி மேம்பாட்டைச் சோதித்தறியக் குதிரையை அனுப்பிக் காவலாக வந்த தம்மை யான் பணிந்து நின்றது குற்றமாம். குதிரையைப் பிடித்துக் கட்டித் தம்மை எதிர்த்து வீரங்காட்டி வரவேற்காத யான் க்ஷத்திரியப் பண்பற்றவனும் இராச பத்தினி வயிற்றிற் பிறவாத பேடியாம். பெரியம்மா, யான் என் செய்வேன்?

உலூபி : மகனே, கவலாதே. மைந்தரின் வீரச் செயல்களைக் கண்ணாரக் கண்டு களிப்பதே தந்தையாரின் பெரு விருப்பம் விறல் வீரரும், ஒப்பற்ற வில்லாளியுமாகிய உந்தையார் உன்னையோர் வீரனாகக் காண விரும்பியதிலே தவறில்லையப்பா.

பப்பிர : எப்படிப் பெரியம்மா, நான் என் வீரத்தை எந்தையார் முன் காண்பிப்பேன் ? அதற்கும் ஏதும் சந்தர்ப்பம் நிகழ வேண்டாமா ? அன்று நிகழ்ந்த மகாபாரத யுத்தத்தை நான் அறியவொண்ணுதவாறு நீங்கள் என்னை நாகலோகத்தில் அழைத்து வைத்திருந்த குற்றத்தால் நான் இன்று எந்தையால் நிந்திக்கப்பட்டேன்.

உலூபி : மகனே, உனக்கு வீரங்காட்டச் சந்தர்ப்பம் அளித்திருக்கிறார் உன் தந்தை. தம் வருகையை முன்னராகவே உங்களுக்குத் தெரிவிக்காமல் குதிரையை உங்கள் நாட்டில் அனுப்பியதிலிருந்தே அதை நீ உணர்ந்திருக்க வேண்டும்.

பப்பிர : பெரியம்மா, இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

உலூபி : கண்ணே, பப்பிரவாகா நீ பழிக்கப்பட்டாய். உன் அண்ணன்மார்போல் நீயும் வீரனென்று உந்தையார் உணர வேண்டும். அது செய்வது தான் தக்கதப்பா

பப்பிர : யான், அதற்காக இனி என்ன செய்வேன்?

உலூபி : உன் தந்தையின் பாதுகாப்பிலுள்ள அசுவமேதக் குதிரையைப் பிடித்துக் கட்டு

பப்பிர : கட்டினால் தந்தையாரையே எதிர்க்க வேண்டிய தரும விரோதம் ஏற்படுமே

உலூபி : ஆமாம், உன் தந்தையை எதிர்த்துப் போராடு. சிங்கத்தின் குட்டி சிங்கந்தான் என்பதை அவரே உணரட்டும்.

பப்பிர : பெரியம்மா, என்ன சொல்கிறீர்கள்? எந்தையை எதிர்த்துப் போர் புரியும்படி சொல்வது நீங்கள் தானு? உங்கள் கணவரையும் உங்கள் மகனையும் போரிடும்படி தூண்டுகிறீர்களே

உலூபி : பப்பிரவாகா, என் வாயினுலும் நீ கோழை என்ற பட்டத்தைப் பெற விரும்புகிருயா? செல் போருக்கு. உன் தந்தையார் உன்னைப் பழித்துரைத்த பழிச்சொல் இப்படி நீவிர் போரிட்டாலன்றித் தீராது. என் மகன் அரவான், அபிமன்னன் ஆகிய தம் புதல்வர் போன்ற திறலுடையவனே நீயும் என்பதை உந்தையார் உணரச் செய்வதற்கு இது போன்ற சந்தர்ப்பம் வேறில்லை உடனே போய்க் குதிரையைப் பிடித்துக் கட்டு.

பப்பிர : என் அன்னை சித்திராங்கதையின் திருவுள்ளம் இதை ஒப்புமோ அறியேன் பெரியம்மா. இரு வினையுடைய யான் இறந்தொழிதலே தக்கது. வேறு செயல் எனக்கில்லை

உலூபி : மகனே, உன் அன்னையும் நானும் ஒரே கணவரை அடைந்தவர்கள். என் எண்ணமே உன் தாயின் எண்ணமுமாக அமையும். பழிச்சொல் கேட்டுத் தயங்கி நிற்பதுவும் உறவுமுறை பார்ப்பதுவும் க்ஷத்திரிய தருமமேயன்று. உன் தகப்பனுராகிய அருச்சுன மகாராஜரே தமது சபதத்தின்படி தம் வில்லைப் பழித்த காரணத்தால் தமையனுராகிய தருமபுத்திரரைக் கொல்ல முயன்றவர். ஆதலால் தயங்காதே. வீரத்தின் நிறைவேற்றம் விளைவை எதிர்பார்ப்பதில்லை. பப்பிரவாகா துணிந்து நின் தந்தையைப் போரில் எதிர்த்து நில்.

பப்பிர : பெரியம்மா, துணிந்தேன் பப்பிரவாகன் படைத் திறத்தையும் வில்லாண்மையையும் அந்தப் பார்த்தனும் எந்தையாரே பார்த்துக் களிக்கட்டும். இதோ யான் குதிரையைப் பிடித்துக் கட்டுகிறேன். நீங்கள் நிகழ்ந்ததை உரைக்க என் அன்னையிடம் செல்லுங்கள். யாரங்கே?

ஏவ : இளவரசே.

பப்பிர : எமது நாட்டுட் புகுந்துள்ள வடபுலத்தாரின் அசுவத்தைத் பிடித்துக் கட்டும்படி எம் படைத் தலைவரிடம் சொல் எதிர்த்து வருவோருக்கிறுதி காண். இதோ யானும் புறப்பட்டுவிட்டேன். அருச்சுன வேந்தரின் அகம்பாவமும் அவர் பாண்டிய வீரத்தைப் பழித்துரைத்த உரையும் ஒரே செயலிற் போக்க இதோ யான் வருகிறேன்.

காட்சி 4

இடம் : அரண்மனை

பாத்திரம் : சித்திராங்கதை. உலூகி, செங்கமலம்.

நிகழ்ச்சி : சித்திராங்கதை அலங்காரங்கள் செய்தபடியே செங்கமலத்தை அழைக்கிருள்.

சித்திரா : செங்கமலம், செங்கமலம்.

செங்க : அரசியார் வாழ்க.

சித்திரா : தந்தையை அழைத்துவரச் சென்ற இளவரசனை இன்னும் காணேமே செங்கமலம். தன் தந்தையை முன்னொரு போதும் பார்த்தறியாத என் மைந்தன் அவரைக் காண்பதிலே தடுமாறி அலைகிருனே? செல். சென்று ஒற்றர்களிடம் விபரமறிந்து வா.

செங்க : அப்படியே. (சென்று உடனே மீண்டு) மகாராணியார் வாழ்க. எங்கள் மன்னரின் மற்ருெரு பத்தினியாராகிய உலூகி மகாராணியார் தங்கள் சமுகம் நாடி வந்து கொண்டிருக்கிருர்களம்மா

சித்திரா : ஆஹா, அதுவும் நல்லதாயிற்று எமது பிராண நாயகரை நாம் இருவருமே இணைந்து நின்று உபசரிக்கும் இந்த நல்ல வாய்ப்பை இறைவனே அருளினுர். செங்கமலம் நீ உன் கருமத்தின் மேற் செல். வருகின்ற மகாராணியாரை யான் வரவேற்கிறேன். (செங்கமலம் போகிருள்)

(உலூபி வரக்கண்டு ஓடிச்சென்று கரம்பற்றி)

வாருங்கள் அக்கா, என் மனப்பதற்றம் தீர்க்கும் மருந்துபோல வந்தீர்கள் அக்கா எங்கள் உயிர்த் துணைவர் இந்த மதுரை நகர்ப்புறத்தே அசுவ மேதக் குதிரையைக் காக்கும் வீரராக வந்து கொண்டிருக்கிறாராம்.

உலூபி : என்ன? எங்கள் கணவர் வந்திருக்கிறாரா? பாண் டவகுலதிலகர் இங்கு வந்திருக்கிறாரா? சித்திரா நான் பாக்கியசாலியானேன். மைந்தன் பப்பிர வாகனைக் கண்டு க்ஷேமமுணர்ந்து செல்லலாம் என வந்த எனக்கு எங்கள் நாதரின் தரிசனம் கிடைப்பதென்றால் அது தெய்வத் திருவரு ளேதான்.

சித்திரா : அக்கா, எங்கள் இருண்ட வாழ்வுக்கு முடிவு வந்துவிட்டது. 18 ஆண்டுகளாகக் கணவன் பணிவிடை புரியாத பாவிகளாகவல்லவா நாங் கள் அமைந்து விட்டோம்.

உலூபி : (பெருமூச்சுடன்) சித்திரா நீ சிறிதளவாவது அதிட்டமுடையவள். நானோ பெரும்பாவி. நீ புத்திரனோடிருந்து கணவரைக் கண்டாற் போல விளங்கும் உன் மைந்தன் உருவ அமைப்பைப் பார்த்தாவது ஆறுதலடைந்தாய். நானோ என் ஒற்றைத் திருமைந்தனையும் பாரதப் பெரும் போரினிற் பிரிந்து கணவன் அன்பேயன்றிப் புத் திரனையும் இழந்து நிற்கும் கொடும்பாவியாகி விட்டேன்.

சித்திரா : அக்கா, இன்பமான இந்தச் சுபதினத்திலே கழிந்துபோன நிகழ்ச்சிகளை எண்ணிக் கலங் காதீர்கள். உங்கள் புத்திர ரத்தினமாகிய அரவானை இழந்த உங்களுக்கு ஆறுதல் மொழி கூறுதல் இயலாதுதான். அதற்காக......

உலூகி : (சிறிது வெறி பிடித்தவள் போல்) என் புதல்வன் மாவீரன் அவன் வீரமரணம் எய்தினன். ஆனல் எங்கள் பாண்டவர்கள் தமது நன்மைக்காக என் மகனைக் களப்பலிக்கெனத் தேர்ந்தெடுத்தார்களே அதை எண்ணும்போது என் வயிறு கொதிக்கிறது 18 நாள் நடந்த பாரதப்போரை ஒரு தினத்திலே முடித்து வைக்கும் உத்தம வீரனகிய எனது மைந்தன் வீரங் காட்ட இயலாது வறிது மாய்ந்தானே என எண்ணும் போது எனக்குளதாகும் வயிற்றெரிச்சலைத் தாங்கவே முடியவில்லை; அதனல் எழும் என் புத்திரசோகம் என் கணவர் மீதுகூட க்ஷாத்திரம் கொள்ளச் செய்கிறது சித்திரா.

செங்க : (வந்து நுழைந்து மகாராணியார் வாழ்க. மேலே பேசாது நின்று விம்மி விம்மி அழுகிருள்)

சித்திரா : செங்கமலம், என்ன இது? உன் கொள்கையென்ன? சொல்ல வேண்டியது எதுவாயினும் தயக்கமின்றிக் கூறவேண்டும் கட்டப்பாட்டிலுள்ள நீ இன்று கண்கலங்கி நிற்பதேன்?

செங்க : என் செய்தி, நான் தங்களுக்குணர்த்தவென ஏற்று வந்திருக்கும் செய்தி என் வாயினலே சொல்ல முடியாத அளவுக்குக் கொடுமையான தம்மா.

உலூகி : எது அவ்வளவுக்குக் கொடுமையானது? எதுவாயினும் விரைந்து சொல் செங்கமலம்.

செங்க : அம்மா, எங்கள் இளவரசர் தந்தையாரை வரவேற்கச் சென்று (விசும்புதல்)

சித்திரா ; சென்று செங்கமலம் மேலே என்ன நடந்ததடி? விரைவாகச் சொல்.

செங்க : தந்தையாருடன் மாறுபட்டுப் போர் புரிய வேண்டி ஏற்பட்டு விட்டதாம்.

சித்திரா : என்ன தந்தையோடு மாறுபட்டு மைந்தன் போரிட்டாளு? அவமானம். இந்தத்தரும விரோத மான செயலை என் மகளு செய்தான்? அந்தோ நான் என் செய்வேன்? அக்கா நீங்கள் ஒன்றும் பேசாமல் நிற்கிறீர்களே சொல் செங்கமலம் சொல்.

செங்க : அவ்வாறு நிகழ்ந்த போரிலே எங்கள் இளவரசர்

உலூகி : இளவரசருக்கு என்ன நேர்ந்தது?

செங்க : இளவரசர் எய்த அம்பு மகா வீரராகிய அருச் சுன மகாராசாவின் மார்பை உருவிச் சென்ற தாம் அம்மா. வேந்தர் மூச்சற்றுவிட்டாராம்.

சித்திரா : அந்தோ, எங்கள் பிராண நாதரே, மைந்தன் கரத்திளுல் மாண்டொழியவா இந் நெடுந்தூரம் புரவிக் காவல் பூண்டு வந்தீர்கள்?

உலூகி : சித்திரா, அழுது புரள்வதற்கு இதுவா சமயம்? அரச பத்தினிமாருக்கு அமைய வேண்டிய மஞேதிடம் உன்னிடத்துப் பொருந்தாதிருப்பது விந்தையம்மா. புறப்படு எம் நாதர் வீழ்ந்து கிடக்குமிடஞ் சென்று நிகழ்ந்ததை அறிவோம் (போகிருர்கள்).

காட்சி 5

இடம் : போர்க்களம்

பாத்திரம் : அருச்சுனன், பப்பிரவாகன், உலூகி, சித்திராங் கதை, மந்திரி, சாரதி.

நிகழ்ச்சி : பப்பிரவாகன் இறந்த தந்தையை மடிமீதிற் ருங்கிப் புலம்புகிருன்.

பப்பிர : அப்பா, அப்பா, பாராளும் பார்த்திபரெல்லாம் நடுங்கப் பாணமழை சொரியும் வீராதி வீரரே, நீங்களா இங்குப் பேச்சற்றுக் கிடக்கிறீர்கள்? அந்தோ நான் பாவி. பெற்ற பிதாவுக்கு எதிராக வில்லெடுத்த பெரும் பழி ஒன்ரு? அவர் உயிரைப் போக்கிய பழியாகிய மா பாதகத்தையுஞ் சுமக் கப் பெற்றேனே. (விழுந்து சோர்கிருன்)
(உலூகியும் சித்திராங்கதையும் ஓடி வருகி ருர்கள்)

சித்திரா : அரசே, அரசே, என்வீரப் பிரதாபரே. உங்கள் வீரமெல்லாம் எங்கே? ஒற்றைச் சிறுவனை எதிர்த் தமராடிக் கொற்றம் கொள்ள வியலாது பொற் றடம் மார்பகம் மண்ணிற்புரள வீழ்ந்து கிடக் கும் நிலைமையும் உங்களுக்கு நேர்ந்ததா? என் ஆருயிரே, மைந்தனேடு கூடி உவந்து வரும் தந்தையின் தனிக் கோலத்தைக் கண்ணுரக்கண்டு களிப்படைவேன் எனக்காத்திருந்த தமியேனைக் கைவிட்டு எங்கே சென்ருெளித்தீர்? (மகனைப்

பார்த்து) பப்பிரவாகா, நீ என்ன செய்து விட்டாய்? நீயா என் மகனுகத் தோன்ற வேண்டும்? அழைத்துவா தந்தையை என்றுனக்கு யான் உரைத்த பணியை, உந்தையின் பொன் மார்பகத்தினை அம்பினுற் குத்திக் குழைத்துவா என்று சொன்னதாக உணர்ந்து விட்டனையே தந்தையைக் கொன்று தருமம் பிழைத்து நிற்கும் நீயும் ஒரு மைந்தனு? கொடும்பாவி. நீ என் வயிற்றிலா தோன்றவேண்டும்?

பப்பிர: அம்மா, அம்மா என்னை மகனென்று சொல்லாதீர்கள். நான் பாவி, மகா பவி தந்தையைக் கொன்று தாயாரால் நிந்திக் ப்பட்டு வாழும் கொடு வினையுடைய யான் பூமிக்குப் பொறையானேன். (உலூகியைப் பார்த்து) ஆ பெரியம்மா, தநயரின் வீரம் கண விழைவது தந்தையர் இயல்பு. ஆதலாற் தாமதிக்காதே. உந்தையை எதிர்த்துப் போரிடு என்று ஊக்கங் காட்டி என்னை ஏவினீர்களே, அந்தோ, புத்தி மயங்கி யான் எந்தையை எதிர்க்க வில்லெடுத்தேனே பெரியம்மா, பருங்கள் உங்கள் கணவரை. எனக்குப் பேருக்கம் காட்டி நின்றது உங்கள் பேராக்கமாகிய கணவரின் உயிரைக் கவர்ந்ததே பெரியம்மா.

சித்திரா: பப்பிரவாகா, நீ என்ன சொல்கிறுய்? உன் பெரிய தாயாரா உன்னைத் தூண்டித் தந்தையோடு போராட வைத்தார்? அக்கா, நீங்களா இந்தப் பாதகம் புரிந்தீர்கள்? ஆம் ஆம். நீங்கள் தான் என் கணவரை வேண்டுமென்று கொல்வித்தீர்கள். முன்பின் முரணுன உங்கள் உரையும் செயலும் உண்மையை உரைக்கின்றனவே.

உலூகி: சித்திரா என்னை ஏனம்மா சந்தேகிக்கிறுய்? உன்போல் அருச்சுன மகாராஜருக்கு நானும் உயிர்த் துணைவிதான் என்பதை நீ அறிவாய் தானே.

சித்திரா : ஆமாம் அறிவேன். என் அரண்மனைக்கு வர முன்பே என் மைந்தனை வழியிற் கண்டு பிதாவோடு போரிடும்படி தூண்டினீர்களே. அம்மட்டா? நாதன் வரவை முன்னதாகவே அறிந்திருந்தும் நான் கூறத்தான் தெரிந்து கொண்டவள் போல மாய மலைச்சி காட்டினீர்களே இவ்வாறெல்லாம் சதிபுரிந்த நீங்கள் என் நாயகரின் ஆருயிர்த் துணைவி என்று கூறுகிறீர்கள். அதை யார்தான் மறுப்பார்! பாதகத்தின் பிறப்பிடமே, நாதனுர் மடிந்து கிடக்கவும் நடுங்கி, மெலிந்து, கலங்காது நிற்கும் உங்கள் நிலையொன்றே நீங்கள் அருச்சுனனுரின் பெரும்பெறல் துணைவி என்பதைச் சாற்றப் போதுமே.

உலூபி : நங்கையே, வீணுக எனக்கு அபவாதம் ஏற்றுதே. உன் பதியாகிய என் கணவனை உன் மகனை ஏவிக் கொல்வித்தேன் என்று குற்றஞ் சாற்றுகிறுயே. நிகழ்ந்ததை யறிவாயா?

சித்திரா : நிகழ்ந்தவைதாம் மிகத் தெளிவாகத் தெரிகின்றனவே. புத்திரனை இழந்து தவிக்கும் உங்களைப் போல நானும் புத்திரனை வெறுத்து வாழ வேண்டுமென்ற சதி உங்கள் மனத்திலே உண்டாகியுள்ளது என்பது உங்கள் பேச்சிலே மறைந்து கிடக்கக் கண்டேனே. நாகலோகம் நஞ்சுடையதென்பர். அஃதுங்களிடம் இல்லாமற் போகுமா?

அமைச் : மகாராணியார் மன்னவரை இழந்த மனத்துயராலே அளவுமீறி உலூபி மகாராணியாரை நிந்திக்கிறீர்கள். அது தகாது இங்கே மைந்தராகிய இளவரசர் தந்தையைக் கொன்ற பாதகம் தம்முயிரை மாய்ப்பதினுலே தான் தீருமென்று இறக்கத்துணிகிறுர். தாங்களோ, அருமைத் தமக்கையாரை எல்லை கடந்து அவதூறு புகல்கின்றீர்கள் நாகலோகத்து நல்லரசியாரோ கணவனுர் நிலை கண்டும் கலங்குதலன்றி நிற்கி

ரூர்கள். இந்தப் பொருத்தமற்ற காட்சி புதுமை ஒன்றைப் பொதிந்திருக்கின்றதெனவே யான் உணர்கிறேன்.

பப்பிர : அமைச்சரே பொறுக்க, பெரியம்மா, இனிநான் உயிர்வாழ மாட்டேன். தந்தையைக் கொன்ற மாபாதகன் என்று உலகோர் உரைக்கும்படி பழிப்புரையைத் தாங்கிக் கொண்டும், புத்தி மகிழ்வோடு புவி புரந்தான் பப்பிரவாகன் என்னும் நிந்தை வருமுன்பே யானும் இறந்தொழிவேன். எந்தையே, வானுலகிலாயினும் தேவரீரோடு தங்கியிருக்கும் வாய்ப்பைப் பெறுதற்காக இதோ உங்களிடம் வருகிறேன்.

(வாளை உருவுகிறான்)

உலூகி : பப்பிரவாகா பொறு. சித்திரா கலங்காதே. இவையெல்லாம் விதியின் சூழ்ச்சிகளம்மா. எனது நாதனுருக்கும் உங்களுக்கும் யான் இதமே புரிந்தேன் என்பதை நிரூபித்துக் காட்டுகிறேன். பதறாதே. பதற்றத்தினால் வேண்டாப் பழியை வீணே சுமக்காதே சித்திரா எங்கள் நாதர் தம் மைந்தனால் உயிரிழத்தல் வேண்டுமென்பது தெய்வ நியதியம்மா அதை நான் அறிவேன்.

சித்திரா : அக்கா ..

பப்பிர : பெரியன்னையே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

உலூகி : யாவரும் பொறுமையோடிருங்கள்.

(பாடுகிறாள்)

(இராகம் : பிகாக் அல்லது சாமா)

பல்லவி

ஜீவமணி அருள்வாய் — எந்தையே
ஜீவமணி அருள்வாய்

அநுபல்லவி

காவலனாய் எமக்கு ஆதரவாய் நின்ற
காதலன் ஆருயிர் காத்திட இன்றே (ஜீவமணி)

சரணம்

பாதல உலகில்வாழ் பாம்புகட் கரசே
பலர்புகழ் வாசுகிப் பெயருடை அரவே
பேதலித் தரற்றிடும் மைந்தனும் நாங்களும்
பெருமகிழ் வெய்திடும் பேறளித் திடவே
(ஜீவமணி)

(உலூகி ஒரு திசையில் திரும்பி வணக்கம் செய்கிறாள். அவளுடைய கையிலே ஜீவமணி என்ற இரத்தினமணி வந்து வீழ்கிறது)

இதோ பாருங்கள் இது ஜீவமணி. இந்த மணி எங்கள் நாதருயிரை மீட்டுத் தரும். அஞ்சாதீர்கள் பப்பிரவாகா. இந்தா. இந்த மணியினால் உந்தையார் புண்களை ஒற்றிக் கடவுளை வணங்கு.

பப்பிர : (அப்படிச் செய்து) அப்பா, அப்பா

(அருச்சுனன் எழுந்து)

அருச்சு : ஹா, நான் எங்கிருக்கிறேன்? என் வீரத் திருமகன் பப்பிரவாகனோடு அமராடிக் கொண்டல்லவா இருந்தேன். அவன் எங்கே? வீர விஜயன் என்ற என் பெயரை வெறும் பெயராக்கிய என் வெற்றிப் புதல்வன் எங்கே?

பப்பிர : அப்பா, அப்பா பெற்ற பிதாவை வில்கொண்டெதிர்க்கத் துணிந்த மாபாவியப்பா நான். இதோ தங்கள் தாளடி பணியவும் கூசித் தளர்ந்து நிற்கிறேன்.

அருச்சு : மட்டற்ற வீரங்காட்டிய என் கட்டிளங் காளையே நீயேன் கலங்குகிறாய்? இதயத்தின் இன்ப ஊற்றைக் கிளரச் செய்த, என் இளஞ்சிங்கமே என் அருகில் வர ஏன் தயங்குகிறாய். வா நிகழ்ந்தவற்றைக் கூறு

(பப்பிரவாகன் கிட்ட வந்து காலில் விழுகிறான். தந்தை தழுவிக் கொள்கிறான்.)

சித்திரா : நாதா, நாதா (காலில் விழுகிருள்)

அருச்சு : என் சித்திராவா எழுந்திரு.

உலூகி : பிரபு அடியாள் உலூகியும் வணங்குகிறேன்.

அருச்சு : ஹா! எனது புத்திர ரத்தினமாகிய அரவானை ஈன்றெடுத்த பொற்கொடியா? என் இதயத்துக் கொலுவிருக்கும் நாகலோகத்து நல்லரசியா? உலூகி மங்கையா? வா. நானும் என் கொற்ற மைந்தனும் விற்போரில் முனைந்து நின்றதும் மைந்தனேவிய கொடிவேற் கணையொன்று என் மார்பிற் புகுந்ததும் யானறிவேன் அதன்பின் யாது நிகழ்ந்தது?

சாரதி : மாமன்னர் வாழ்க மைந்தரோடு விற்போரில் முனைந்து நின்ற நீங்கள் அரசகுமாரர் ஏவிய கூர்ங்கணை மார்பிற் பாய மயங்கி வீழ்ந்து விட்டீர்கள் எம்மையெல்லாம் தவிக்கச் செய்து விட்டீர்கள். அரசகுமாரர் ஓடிவந்து தங்களைக் கட்டிக்கொண்டு கதறினர் நான் எவ்வளவோ கூறியும் தேறவில்லை மகாராசா

அருச்சு : ஆ. அதன் பிறகு

உலூகி : பிரபோ, நாம் செய்தியறிந்து ஓடிவந்தோம். இதோ பாருங்கள் நாதா. இஃது எங்கள் நாக லோகத்து ஜீவமணி இறந்தவருக்குயிரூட்டும் அற்புத சஞ்சீவி. இதை நான் தருவித்துத் தங்கள் மேனியின் விழுப்புண்ணைத் தடவுவித்துப் பூசித் தேன் எமக்கெல்லாம் உயிர்வழங்கத் தேவரீர் உயிர் பெற்றெழுந்தீர்கள்

அருச்சு : ஆகா இந்த மணியினலா யான் உயிர்பெற் றெழுந்தேன்? தேவி இந்த வேளையில் நாக லோகத்திலுள்ள நீ இங்கு எப்படி வந்தாய்?

உலூகி : இவ்வாறெல்லாம் நிகழப்போவதை நான் முன் னராகவே அறிந்திருந்தேன் பிரபு.

அருச்சு : என்ன எவை நிகழும் என நீ அறிந்திருந்தாய்?

உலூகி : தாங்கள் தங்கள் திருக்குமாரரால் உயிரிழப்பீர்கள் என்பதை நான் பல நாட்களின் முன்னரே தெரிந்து கொண்டிருந்தேன் பிரபு.

பப்பிர : பெரியன்னையே, என் கரத்தால் எந்தையார் இறக்கவேண்டுமென்ற நியதி முன்னுளிலேயே ஏற்பட்டதா? அதனைத் தாங்கள் அறிவீர்களா? எல்லாவற்றையும் விளக்கியருளுங்கள் அம்மா.

அருச்சு : ஆம் தேவி அந்த விபரத்தை விளக்கிக் கூறு.

(பாட்டு — அகவல் — இராகமாலிகை)

உலூகி : 1 'பேரருள் நிறைந்தஎன் ஆருயிர்க் கரசே
நேரினில் அவையெல்லாம் நிதழ்த்துவன் கேட்பீர்
பாரெல்லாம் போற்றிய பாரதப் போரிலே
வீரம் விளைத்த வீட்டுமனரை நும்
அம்பு களால்நீர் வெம்பிட வதைத்தீர்'

அருச்சு : ஆமாம்

உலூகி : 2 'அந்தச் செயலால் அந்தர வசுக்கள்
கோபங் கொண்டனர் சாபம் மொழிந்தனர்'

அருச்சு : என் பாட்டனரை நான் கொன்றால் வசுக்கள் என்மீது கோபங் கொண்டதேன் தேவி ?

உலூகி : பிரபு,
3 'அந்தர உலகுவாழ் அட்ட வசுக்களில்
ஒருவரே வீட்டும உரவோனகப்
பெருமைசேர் புவியிற் பிறந்துவாழ்ந் தாராம்
தங்களில் ஒருவரைத் தாட்சண்ய மின்றிப்
பாட்டன் என்றவோர் பாசமும் மறந்துநீர்
கொன்றதை யேயவர்குற்றமாய்க் குறித்தார்.'

அருச்சு : ஆஹா, அப்படியா ? அதற்காக அவர் எவ்வகையான சாபமொழி கூறினர்கள் தேவி?

உலூகி : [4] 'பாட்டனும் வீட்டுமர் பதைத்திட வதைத்து
நாட்டிய பழிபெறும் நாதரே நீர்நும்
மைந்தனால் வீழ்ந்து மடிந்திடு வீர்என,
அந்த வசுக்கள் அறைந்தனர் சாபம்'

அருச்சு : என்ன, தெய்வ நியதி இப்படியா அமைந்தது? வீரங்காட்டவில்லையேயென என் மைந்தனை யான் விளையாட்டாகக் கடிந்த செயல் உண்மையாக இந்தச் சாபத்தின் தூண்டுதலால் நிகழ்ந்ததென்பதை இப்பொழுதுதான் உணர்கிறேன்.

சித்திரா : எம் மன்னருக்குச் சாபம் நேர்ந்ததை நீங்கள் எப்படி அக்கா அறிந்தீர்கள்?

உலூகி : சொல்கிறேன் சித்திரா,

[5] 'கங்கை ஆற்றங் கரையிலே வசுக்கள்
தங்கிநின் றிவ்வகை சாற்றினர் அப்போ
நீர்விளை யாட்டில் நிலைத்திருந் தேன்யான்
எனது நாதருக் கிவரிட்ட சாபம்

செவியில் வீழ்ந்தது திகைத்தேன் துடித்தேன்
எந்தை வாசுகியோ டிவர்களை யடைந்து
வந்தனை புரிந்து, மாற்றுரை வழங்குவீர்
அருள்புரிந் தென்துயர் அவிப்பீர் என்றேன்
அவருள்ளம் மகிழ்ந்தார், அறைந்தார் விமோசனம்
ஜீவநன் மணியைத் தெரிந்து கொணர்ந்து
ஆவி நீங்கிய அருச்சுனர் மேனியில்
வைத்தால் அவருயிர் வந்திடும் என்றார்.'

பப்பிர : பெரியன்னையே, இன்று இந்த நிகழ்ச்சி நிகழும் என எப்படி நீங்கள் அறிந்தீர்கள்?

உலூகி : 7 'அந்நாட் டொடங்கி நாதரைத் தொடர்ந்தேன்.
எங்கள் மைந்தருள் இறவா திருப்பவன்
நீயே யாதலால் நின்கரத்தால் தான்
நாதர் மடிவார் என்று நம்பினேன்
மைந்தனே நீயும் மன்னரும் ஆங்குச்
சந்தித்த போதிற் சாபமாந் தீமை
வந்திடு மென்பதை மதித்தேன் நின்னைத்
தூண்டினேன் போர்செயத் துடித்துநீ சென்றாய்
மாண்டனர் தந்தை மற்றவை யெல்லாம்
ஈங்கு நிகழ்ந்தன இவைநீர் தெரிவீரே!'

சித்திரா : அக்கா, என் மங்கல நாணையும் என் புத்திரன் உயிரையும் ஒருங்கே காத்த உத்தமியே, என்னை மன்னித்து விடுங்கள். ஆராயாமல் அபாண்டம் சுமத்தி அநீதி புரிந்த என்னை ஆதரித்தணைத்து அன்புகாட்டி மன்னிப்பருளுங்கள் அக்கா.

உலூகி : சித்திரா, இஃதென்ன? உனக்குத் தெரியாத வகையில் எத்தனை கருமங்களை நான் மறைத்து வைத்தேன். மறைத்தது நன்மைக்கேயாயினும் அந்த மறைப்பினால் என்னிடம் வந்த வஞ்சக எண்ணமாகிய மாசு உனது கடிந்துரைகளினா லன்றோ கழுவப்பட்டது. இல்லையேல் நான் புனித முடையவளாவேனோ? மன்னித்தேன். சித்திரா எழுந்திரு.

அருச்சு : நாகலோகம் பெற்றெடுத்த நங்கையர் மணியே வா, நீ கொணர்ந்து என் புண்களிலே தடவிய மணியா என் உயிரைத் தந்தது? இல்லை இல்லவே இல்லை? நீயே என் உயிரைத் தந்தாய். என் உயிரைத் தந்த ஜீவமணி இந்தக் கல்லன்று. நீயே என் ஜீவமணி. நீயே என் ஜீவ சிந்தாமணி

(உலூகியோடு சித்திராவையும் அணைத்துக் கொள்கிறான்)

பப்பிர : அப்பா, அன்னைமாரோடு அரண்மனைக்கு எழுந்தருளுங்கள், அப்பா.

அருச்சு : இல்லை. என் செல்வமே, யாக கருமத்திற்காக விரதம் பூண்டுள்ள யான், அரண்மனைச் சுகபோகங்களில் ஈடுபடலாகாது. நீங்கள் உங்கள் அரண்மனைக்குச்செல்லுங்கள். அசுவமேத யாகம் காண உங்கள் யாவரையும் அஸ்திஞபுரத்துக்கு அழைத்துச் செல்ல விரைவில் யான் வருவேன். *

(திரை)

* 1 சண்முகப்பிரியா 2 மோகனம் 3 கனடா 4 காம்போதி 5 கல்யாணி 6 சிந்துபைரவி

அம்பையின்
வஞ்சினம்

[தெல்லிப்பழையில் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்ற நாடகம்] **1967**

பாத்திரங்கள்

பீஷ்மர்	—	சந்தனு மன்னனின் மூத்த புதல்வர்
	—	அத்தினபுர அரசுப் பாதுகாவலர்
பரிமளகந்தி	—	சந்தனுவின் இரண்டாம் மனைவி
விசித்திரவீரியன்	—	பட்டத்திளவரசன்
	—	பரிமளகந்தியின் புதல்வன்
பீரதீபன்	—	ஒற்றர் தலைவன்
காசிவேந்தன்		
அம்பை	—	காசிவேந்தனின் மூத்த புதல்வி
அம்பிகை அம்பாலிகை	—	காசி வேந்தனின் இளையபுதல்வியர்
பரசுராமன்	—	பீஷ்மரின் குரு

அரசர்கள், அரச புத்திரர்கள், காவலன், வீரர்கள், தோழி

காட்சி 1

இடம் : பீஷ்மர் அரண்மனை

பாத்திரம் : பீஷ்மர், பரிமளகந்தி, ஒற்றர் தலைவன், காவலன்

நிகழ்ச்சி : பீஷ்மர் ஓர் ஏட்டை வாசித்துக்கொண்டு பீடமொன்றில் அமர்ந்திருக்கின்றார். காவலன் வருகிறான்.

காவலன் : சந்திர குல சிரேஷ்டர் வாழ்க. எங்கள் இள வரசரின் அன்னையார் வருகிறார்கள்.

பீஷ்மர் : யார் சிற்றன்னையாரா? பரிமளகந்தி மகாராணி யாரா? ஆகா! அதிகாலையிலே அன்னையார் தரிசனம். காவலா, இதோ வருகிறேன். (பீஷ்மர் வாயிலிற் சென்று) சிற்றன்னையார் வரவேண்டும்; வர வேண்டும் (பாதந் தொட்டு வணங்கி நிற்கிறார்)

பரிமளகந்தி : கங்கா புத்திரனே, நீ நீடு வாழ்க.

பீஷ்மர் : உள்ளே எழுந்தருளி ஆசனத்தில் அமருங்கள் சிற்றன்னையாரே.

பரிமள : (சென்று அமர்ந்து கொண்டு) மகனே, நீயும் இப்படி அமர்ந்துகொள்ளப்பா.

பீஷ்மர் : வேண்டாம் அன்னையாரே. தாங்கள் என் சிறு குடில் நாடி எழுந்தருள்வதா? ஏவலரிடம் சொல்லி விட்டிருந்தால் யானே அரண்மனைக்கு வந்திருப்பேனே.

பரிமள : ஆமாம் நீ வந்திருப்பாய்தான் ஆனல் துறவு வாழ்வு மேற்கொண்டிருந்தும் அரசியற் பொறுப்பையுந் தாங்க வேண்டி நேர்ந்தமையால் வருந்தும் உனக்கு, என்னுலும் சிரமம் ஏற்பட வேண்டுமா என்ற ஓர் எண்ணம். அதனோடு......

பீஷ்மர் : சொல்லுங்கள் தாயே.

பரிமள : வேறொன்றுமன்று. இந்த அஸ்திஞபுரத்தின் அரண்மனையும் அரசபரம்பரையும் நீண்டகாலம் நிலைத்திருக்கவேண்டுமேயென்ற கவலை ... இந்தக் கவலையாற் சில நாட்களாகத் தூக்கமே அரிதாகி விட்டதப்பா.

பீஷ்மர் : என்ன? மாமன்னர் சந்தனுவின் பட்ட மகிஷியான உங்களுக்கே கவலையா? மலைச்சாரலிலே யுள்ள குளிர் பூம் பொழிலிலே வெம்மையுந் தோன்றுமா? விசித்திர வீரியனும் இளவரசனை ஈன்றெடுத்த மாதரசியாகிய நீங்களா கவலையில் ஆழ்கிறீர்கள்?

பரிமள : மகனே, காங்கேயா, சூரியனின் பேரொளி பரந்து கிடந்தாலும் மழை முகில் செறியும் போது வையகம் இருளடைகின்றதல்லவா ? என் மகன் விசித்திரவீரியன் விறல் வீரனே தான். ஆயினும் அவன் இன்னும் இளவரசன் தானே.

பீஷ்மர் : ஆமாம். ஆமாம். அன்னையாரின் கவலைக்குரிய காரணம் புரிகிறது. தம்பி விசித்திரவீரியனுக்குப் பொன்முடி சூட்டிப் புவிவேந்தனுக்கும் வைபவம் இன்னும் நிகழவில்லை என்பது தானே.

பரிமள : ஆம் மகனே, ஆம். பருவந்தப்பிய பயிர்ச் செய்கை பலன் விளைக்குமா? எல்லாம் உரிய காலத்தில் நிகழவேண்டும் அப்பா. என் மைந்தனுக்கேற்ற பட்டத்தரசி வந்த பிறகல்லவா அவன் மாநிலம் புரக்கும் மன்னனாதல் முடியும்.

பீஷ்மர் : யாவும் புரிந்து கொண்டேன் அன்னையே. எம்பியின் கருமங்களிலே அசட்டையாய் இருந்து விட்டேனென்று அன்னையார் குறைகொள்ளலாகாது. எம்பிக்குரிய இளவரசிகளை ஆய்ந்தறிந்து வருமாறு, நமது ஒற்றர்கள் நாற்றிசைக்கும் அனுப்பப்பட்டுள்ளார்கள். இன்றோ, நாளையோ விபரங்கள் கிடைக்கும்.

பரிமள : ஆமாம். எல்லாம் நீ செய்திருப்பாய் என்பது தான் என் எண்ணம். ஆனாலும் அந்த மங்கல காரியங்களை விரைவிலே கண்டுகளிக்க வேண்டுமென்ற ஒரு சபலம். அது தான் என்னை இவ்வளவு தூரம் இழுத்து வந்துவிட்டது. மனித காயம் என்ன சாஸ்வதமா? எல்லாம் தெரிந்த உனக்கு நான் என்ன சொல்லக் கிடக்கிறது? ம்......... நான் சென்று வருகிறேனப்பா.

பீஷ்மர் : ஆம் அன்னையாரே, சென்று வாருங்கள். ஒற்றர் தரும் விபரங்களைப் பெற்றுக்கொண்டதும் உங்கள் மருமகளாக யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதை ஆலோசிக்க யானே உங்களிடம் வருகிறேன். (பீஷ்மர் வணங்கப் பரிமளகந்தி போகிறாள்)

காட்சி 2

இடம் : பீஷ்மர் அரண்மனை.

பாத்திரம் : பீஷ்மர், விசித்திரவீரியன், பிரதீபன்.

விசித்திர : (பீஷ்மர், ஓராசனத்தில் அமர்ந்து உபதேசிக்கிருர். விசித்திரவீரியன் கேள்வி கேட்கிருன்.) அண்ணு, இன்று என் மனத்தெழுந்த ஓர் ஐயத்தைப் போக்குதல் வேண்டும். மழை பெய்யாமல் இருத்தல், அகால மரணம் நிகழ்தல் ஆகிய இவற்றுக்கும் அரசனே காரணமாவன் என்று கூறப்படுகிறதே. தெய்வ நியதியால் நிகழும் இவற்றுக்கு அரசன் மீது பழிபெய்தலாமா அண்ணு?

பீஷ்மர் : விசித்திரவீரியனே உனக்கெழுந்த ஐயம் நியாயமானதே. அவற்றுக்கு அரசனே தான் காரணம். தெய்வப் பிரீதி உள்ள நாட்டிலேதான் மழை பெய்யும். அரசன் யாகாதிகளாலும் நித்திய நைமித்திகங்களாலும் தேவரைப் பிரீதிப்படுத்துதல் வேண்டும். மழை பெய்விக்குந் தெய்வம் இந்திரன். அவனுக்கு மகபதியென்று ஒரு பெயர். அந்தப் பெயர்க்குக் காரணம் என்ன தெரியுமா? யாகங்களுக்குத் தலைவன் என்பதுதான். பூமியில் அரசன் செய்யும் யாகங்களினுல் இந்திரன் மகிழ்கிருன். அதனுல் அந்த அரசனுடைய நாட்டுக்கு மழையைப் பெய்விக்கிருன்.

விசித்திர : உணர்ந்தேன் அண்ணு. அகால மரணத்தை எவ்வாறு தடை செய்யலாம் ?

பீஷ்மர் : தம்பீ, இறைவனுல் அருளிச்செய்யப்பட்டவை வேதங்கள் வேதங்களிலே வருணுசிரமதருமங்கள் விதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருணத்தாரும் தமக்கு விதிக்கப்பட்ட தருமங்களில் நிலேத்துத் தவருது நடத்தல் வேண்டும். வருணுசிரம தருமம் தவறுமேயாஞல் அகால மரணம், அசால மழை முதலாயின ஏற்படுகின்றன. ஒழுங்கற்ற வாழ்வுதான் அத்தீமைகள் நாட்டில் நிகழக் காரணம்.

விசித்திர : அப்படியாஞல் அரசன் தன் நாட்டிலே வருணுசிரம தருமங்கள் வழுவாமல் பாதுகாக்க வேண்டுமெனச் சொல்கிறீர்கள். அப்படித்தானே அண்ணு?

பீஷ்மர் : ஆமாம், அப்படியேதான்.

காவலன் : சந்திரகுலசிகாமணிகள் வாழ்க. ஒற்றர் தலேவர் பிரதீபர் வந்திருக்கிருர்.

பீஷ்மர் : பிரதீபரா? உடனே வரச்சொல். தம்பி இன்று இவ்வளவு போதும். சென்று அரசியற் கருமங்களேச் செய். யான் பிரதீபருடன் கலந்து கொள்ள வேண்டும்.

விசித்திர : அப்படியே செய்யுங்கள் அண்ணு. வணக்கம்.

பிரதீபர் : மதிக்குலத்தார் மாணிக்கம் வாழ்க.

பீஷ்மர் : பிரதீபரே உமது வரவைத் தான் எதிர்பார்த்திருந்தோம். எம் நாட்டு அரசிகளாகக் கூடிய இராஜ புத்திரிகள் யார் ? எங்கிருக்கிருர்கள்?

பிரதீபர் : பாரத நாட்டிலே பத்தினிப் பெண்களுக்கும் பஞ்சமா பிரபு? ஆஞல் எமது இளவரசருக்கு ஏற்ற மங்கையர்கள்.........

பீஷ்மர் : இல்லையென்று சொல்லப் போகிறீரா?

பிரதிபர் : தாங்கள் அந்த முடிவுக்கு வருதல் கூடாது. காசி நகர வேந்தரிடம் மூன்று புதல்வியர் இருக்கிறார்கள். அவர்களை நான் நேரிற் பார்த்தேன். திரு நிறைந்த அவ்விளவரசிகள் மூவருமே இளவளரசருக்கேற்றவர்கள் ஆனால் .

பீஷ்மர் : அதன்மேல் என்ன ஆனால் என்று சொல்லுகிறீர்?

பிரதிபர் : காசி நகர வேந்தர் தம் புதல்வியரைச் சுயம் வரத்திற் கொடுப்பதென எண்ணி நாளும் குறித்து விட்டார். இன்னும் நான்கு தினங்களின் மேல் ஆங்குச் சுயம்வரம் நிகழும்.

பீஷ்மர் : அப்படியா? அப்படியானால் எமக்குச் சுயம்வர அழைப்பு வரவில்லையே.

பிரதிபர் : பிரபு ஆங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டும் கேட்டும் பொறுக்கவியலாது கொதிக்கும் உள்ளத்தோடு வந்து நிற்கிறேன். காசி வேந்தரும் மற்றை அரசர்களும் எம்மை ஒழித்துச் சுயம்வரம் நிகழ்த்தத் தீர்மானித்து விட்டார்கள் பிரபு.

பீஷ்மர் : என்ன! அரசர்கள் அவ்வளவுக்குத் துணிந்து விட்டார்களா? தலையிருக்க வாலாடுகின்றதா? பிரதீபரே! காசியிலே சுயம்வரம்! அத்தினாபுரத்திற்கு அழைப்பில்லை. அழைக்கக் கூடாதென்பது அரசர்கள் முடிவு!! நன்று. நன்று. காரணம் என்ன சொல்லிக் கொண்டார் பிரதீபரே?

பிரதிபர் : காரணத்தைச் சொல்ல அடியேன் நா கூசுகின்றது பிரபு. எங்கள் பேரரசர் சந்தனு வேந்தரின் இரண்டாவது திருமணம் சிறிது தாழ்குலத்தில் நிகழ்ந்துவிட்டதாம் அதனால் மற்றைய அரசர்கள் சம்பந்தங் கொள்ள முடியாத அள வுக்குச் சந்திரகுலம் தாழ்ந்துவிட்டதாம்.

பீஷ்மர் : பிரதீபரே, மேலும் விளக்கம் வேண்டாம் யாவும் புரிகிறது. சந்திரகுலம் களங்கமுற்றுவிட்ட தென்று கூறியவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள்! ம் ...... சிங்கம் உறங்குகின்றதென்று கருதிக் கும்மாளம் போடுகின்றன குள்ள நரிகள். எந்தையார் சந்தனுவின் அந்திய காலம் பற்றி அவதூறு கூறும் அளவுக்கு அரசர்களைத் துணிய வைத்து விட்டது என் அமைதி; எனது அரசியற் றுறவு. ஆம் என் தளர்த்திய நாணுடைய வில்லுக்குவேலை வந்து விட்டது.

பிரதீபரே, அந்தக் காசிநகரப் பெண்கள் என் வீரத்தின் பரிசுப்பொருளாகி விட்டார்கள். புறப் படட்டும் எங்கள் படை. தம்பி விசித்திரவீரியனும் மணக்கோலம் கொண்டு கிளம்பட்டும் காசி நகரம் சுயம்வர விழா எடுக்கிறதா, அல்லது அரசர்களின் அவல விழா எடுக்கிறதா என்பதை நான் பார்க்கிறேன். ம் .... செய்திகள் செயலாக்கப்படட்டும்.

எம்பியின் திருமணத் துணைவியாராகக் காசி நகர இளவரசிகளைக் கொண்டு வந்த பின்பன்றிப் பீஷ்மன் உறங்கப்போவதில்லை.

காட்சி 3

இடம் : காசி நகரச் சுயம்வர மண்டபம்.

பாத்திரம் : காசிவேந்தன், அம்பை, அம்பிகை, அம்பாலிகை, விசித்திரவீரியன், பீஷ்மர், அரசர்கள், வங்க, குந்தள, அங்க, காம்போஜ, சாலுவ முதலான தேசங்களின் இராச புத்திரர்கள், வீரர்.

காசிவேந் : அவையினர் யாவரையும் நானும் புதல்வியரும் வணங்குகின்றோம். இவர்கள் அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்ற பெயர் தாங்கிய என் செல்வப் புதல்வியர்கள். இவர்களது திருமண வைபவத்தைக் கண்டு களிக்கும் பேராவலுடையேனதலினால் இன்று இச் சுயம்வர நிகழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளேன் அவையினர் இவ் வைபவம் இனிது நடைபெறவும் என் ஆவல் நிறைவேறவும் துணை புரிதல் வேண்டும். இதோ சுயம்வரம் ஆரம்பமாகின்றது.

('சந்திர குல சிரேஷ்டர் வாழ்க. அத்தினபுரத்து அரசப் பெருந்தகை வாழ்க.' என்ற கோஷம் கேட்டு யாவரும் குழப்பமடைகிறார்கள். பீஷ்மர் வில்லேந்தியவராய் வந்து நிற்கிறார்.)

காசிவேந் : (ஓடிச் சென்று) கங்கா புத்திரர் வரவேண்டும். அத்தினபுரத்து இளவரசர் வரவேண்டும். என் வாழ்வின் பயனை நுகர்தலாய் அமைந்த என் புதல்வியர் சுயம்வரம் இனிதுநிறைவேற அத்தின

புரத்துப் பெருவேந்தர் பெரிதும் உதவுதல் வேண்டும். குறைகளைப் பொருள் செய்யாது ஆசனத்தமர்ந்து வைபவத்தை நிகழவைக்கவேண்டும்.

பீஷ்மர் : ஆம், ஆம். அப்படியே செய்வோம். (ஓராசனத்தில் தம்பியை அழைத்துச் சென்றிருத்தித் தாம் பின்புறத்தே ஓர் ஆசனத்தில் அமர்கிறார்).

தோழி : (பெண்களை அழைத்து வந்து) காசிநகர வேந்தரின் கண்மணிகள் என்னச் சிறந்த பெண்மணிகளே, இதோ வீற்றிருக்கும் இளங்குமரரைப் பாருங்கள் இவர் குந்தள தேசத்துக் கொற்றவர் முந்தி வரும் பகைவரெல்லாம் அந்தமுறப் போர் புரியும் அசகாய சூரர். உங்கள் சிந்தை கவரும் குணாளர். இவரைப் பாருங்கள் (குறிப்பினால் அடுத்த மன்னனிடம் செல்கிறாள்.) விசுவேசர் கருணையின் விளைவெனத் தோன்றிய மெல்லியலார்களே, இதோ வீற்றிருக்கும் விறல் வீரர், காம்போஜ தேசத்துக் கட்டழகுக் காளை கதித்து வரும் மல்லர்களைக் கண்டு கொதித்தெழுந்து வெல்லும் கொற்றவர் இவர். பொன்னும் மணியும் நிறைந்து, புனல் வளம் பெருக்கும் நன்னிலத்துக்குரிய இவ் விளங்குமரர் உங்கள் உள்ளங்கவர்ந்த உத்தமர் என்று யாம் எண்ணலாகுமா? (மற்றவரிடம் போதல்) விசாலாக்ஷி அன்னையின் விழியருளே உருவெடுத்தாற் போல விளங்கும் மங்கையர் மணிகளே, இதோ வீற்றிருக்கும் இளவலைப் பாருங்கள். இவர் அத்தினபுரத்து வித்தகவேந்தர் சந்தனுவின் மெய்த்தவத்திற் றோன்றிய புத்திரமணி. குலமுதல்வர் சந்திரன் போன்ற தண்ணளியும் சூரியனை நிகர்த்த பேரொளி மேனியும் படைத்த பெருமையுடைய இளவரசர். இவர் புகழ்பெற்ற வில்வீரர். பீஷ்மரின் சகோதரராகித் திகழ்கின்ற திறலாளர். விசித்திரவீரியன் என்னும்

பெயராளர், இவர் உங்கள் திருவுள்ளத்தில் இடம் கொள்ளுவார் என யாம் கருதலாகுமா? (பெண்கள் தங்கி மாலையை அரசன் கழுத்தி விடப் போகிறார்கள்)

சாலுவன் : பெண்களே, தாழ்ந்த குலத்தானுக்கு மாலை யிடுகிறீர்களா?

வங்க : காசிமன்னன் எம்மை வஞ்சித்து விட்டான். க்ஷத்திரியகுலத்தினின்று தாழ்வடைந்தவனைச் சபையிலே ஏற்றிவிட்டான்.

அங்க : விசித்திரவீரியன் யமுனைப் படகுத்துறைத் தலைவன் தாசனின் பேரன்; க்ஷத்திரியனேயல்லன்.

காம் : அத்தினபுரத்தாருக்கு மானுபிமானம் கழன்று வருடங்கள் பலவாகிவிட்டன. அதனைக் காசி நகரத்தில் தேடிப்பெறவந்து விட்டார்கள். நாண மற்றவர்கள்.

சாலுவ : கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு என்று கூறப்படுவதையுணர்ந்தும் கோத்திரம் கெட்ட வரைச் சபையிலேற்றினன் காசிவேந்தன். அவ னுக்கும் நாணமில்லை தாமும் வேந்தரென்று கூறிக்கொண்டு சபையேற இந்தப் பீஷ்மனுதி யோருக்கும் வெட்கமில்லை.

பீஷ்மன் : ஹஹ்ஹஹ்ஹா உயர்குலத்துத் தோன்றல் களே, முறையான போர்ப் பயிற்சியிலே முதன்மை பெற்றவர்களே, வேந்தராய்ச் சிறந்து விருது பெற்றவர்களே, எல்லோரும் வாருங்கள். இதோ, தாழ்ந்த குலத்தானென நீங்கள் கருதும் பீஷ்மன் நிற்கிறன். அவன் தனித்துத் தான் வந்திருக் கிறன். சேமவில்லுமின்றி ஒற்றை வில்லுடன் நிற்கிறன். சொல்லாண்மை காட்டுகின்ற க்ஷத்திரியத் தோன்றல்களே உங்கள் வில்லாண் மையைச் சிறிதே காட்டுங்கள். (வில்லை

நாணொலி செய்ய அரசர்கள் அஞ்சி ஓடுகிறார்கள்) பிரதீபரே, விசித்திரவீரியனே மணப்பெண்களுக்கு ஊறு நிகழாதவாறு சென்று காத்துக்கொள்ளுங்கள். அரசர்களே எங்கே ஓடுகிறீர்? நில்லுங்கள்.

சாலுவ : பீஷ்மா, நீதான் வில்லாளியெனச் சொல்லாடாதே. வீரம் ஒருவருக்குத்தான் உரிமை என்று விதண்டா வாதம் பேசாதே உன்னை ஒழித்துவிட்டு இப்பெண்களை என்வீரப் பொருள்களாகக் கொண்டு என்நாடு புகுவேன். எங்கே உன் வீரத்தைக் காட்டு

பீஷ்மன் : சாலுவதேசத்தானா என்னை அறை கூவுபவன்? கோலிய சிலையிலே கூர்ங்கணை கோக்கத் தெரியாத பாலகனல்லவா நீ எப்போதையா நீ வில்லைத் தாங்கப்பயின்றாய்? பதரே, கொடிய யானைகளும் கும்பிட்டொதுங்க நிமிர்ந்து வரும் கோளரியின் முன்னே குழி முயலின் குட்டை வால் ஆடுகிறதா? இதோ பெற்றுக் கொள் (சாலுவன் மயங்கி வீழ்கிறான். யாரும் போர்க்கு வராதொழியப் பீஷ்மர்)

பிரதீபரே, மணப் பெண்களைப் பல்லக்கில் ஏற்றி வெளியேயுள்ள நம் படை துணையாக வர முன் செல்க. யாமும் இளவரசரும் பின்னாக வருகிறோம். தம்பி வா போவோம்.

(சாலுவன் எழுந்து நொண்டி நடந்து செல்கிறான்)

காட்சி 4

இடம் : பீஷ்மர் அரண்மனை

பாத்திரம் : பீஷ்மர், பிரதீபன், காவலன், பரிமளகந்தி, அம்பை

பீஷ்மர் : (பீடத்தில் அமர்ந்தவாறே) காவலா

காவ : கங்கா புத்திரர் வாழ்க. சிற்றன்னையார் சமுகத்துக்கு எழுந்தருளுகிறார்கள்.

பீஷ் : ஆஹா, இதோ வருகிறேன் (சென்று வணங்குகிறான்)

பரிமள : வெற்றித் திருமகனே வாழ்க (சென்று ஆசனத்தில் அமர்கிறாள். அம்பையும் பின்னே வந்து அவள் ஆசனத்தருகே தலை தாழ்ந்து நிற்கிறாள்). சுபகாரியங்களைச் சீக்கிரமே செய்து முடித்துவிடல் வேண்டுமெனப் பெரியோர்கள் சொல்லுவார்கள். என் மைந்தனுக்கு ஒரு மணப் பெண்ணைத் தேடச் சென்று மூன்று கன்னிகைகளைக் கொணர்ந்து விட்டாய் ஆஹா! அவர்கள் என் மீது காட்டும் பரிவு என்னை இன்பலோகத்தில் அமர்த்துகிறது.

பீஷ்மர் : அதுதான் தெரிகிறதே அன்னையாரே. மூத்த மருமகளார் உங்களோடு உடன் வந்திருப்பதிலிருந்தே எல்லாம் யான் உணர்ந்துகொண்டேன்.

பரிமள : கங்கா புத்திரனே, மூத்த மருமகளாகிய இந்த அம்பை உன்னிடம் ஏதோ பேச வேண்டுமாம். அதற்காக யான் துணைவர வேண்டியதாகி விட்டது. ஏன் அம்மா, அம்பை நீ சொல்ல வேண்டியதைச் சொல்லேன்.

அம்பை : மாமி நீங்களே சொல்லுங்கள்.

பரிமள : என்ன, நானே சொல்லுவதா? உன் எண்ணங் களையும் மன விருப்பங்களையும் நீயே எடுத்து வைப்பதுதானே முறையம்மா?

பீஷ்மர் : ஆமாம். நீயே சொல்லம்மா. உந்தையாரின் அன்பணைப்பிலே தங்கியிருந்த உங்களை யான் இங்கு வலிந்து அழைத்து வந்துவிட்டேன். முன் பயிலாத புதிய இடத்திலே உங்களுக்குஎவ்வளவோ தேவைகள் இருக்குமென்பதை யான் உணர்கின் றேன். ஆதலால் தயக்கமின்றி எல்லாவற்றையும் கூறம்மா.

பரிமள : மகளே, அம்பை என் பெரிய மகன் மிகவும் உத்தமன். ஆதலால் நீ நாணமின்றி எதையும் சொல்லலாம். சொல் மகளே சொல்.

அம்பை : வெற்றி வீரரே, காசியம்பதியிலே எந்தையாரின் அன்புப் பிணைப்பிலே கவலையின்றி வாழ்ந்திருந்த யாங்கள் இன்று உங்கள் வெற்றியை விளக்கும் பரிசுப் பொருள்களாக உங்கள் அரண்மனையில் வாழவேண்டியவர்களாகிவிட்டோம்.

பீஷ்மர் : ஆம் அது நியாயந்தானே. வீரங்காட்டிப் பெண் கொண்டு வாழுதல் அரசர்பரம்பரைச் செயல்கள் தானே.

அம்பை : பரம்பரைச் செய்கை என்பதால் மட்டும் அது செய்யப்படுதல் ஆகுமா ? அச்செயலிலுள்ள நீதி, அநீதிகள் பகுத்துணரப் படல் வேண்டாமா?

பீஷ்மர் : இதில் பகுத்துணர்வதற்கு என்ன இருக்கின்றது? வெம்போர் விளைத்து வெற்றிகண்ட விறல் வேந்தர் காலடியிலே அம்புவித்தலமெல்லாம் அடங்கத்தானே வேண்டும் பெண்ணே.

அம்பை : ஆம் அரசே. வீரர் கவர்ந்து கொள்ளும் பொருள் களிலே உயிரும் உணர்வும் உள்ள பொருள் களையும் அடக்கிப்பேசுதல் தங்களுக்கு அநீதி யாகத் தோன்றவில்லையா ?

பீஷ்மர் : பெண்ணே நீ என்ன சொல்கிறாய்?

அம்பை : வேதநெறி தெரிந்த வேந்தரே, யானும் என் சகோதரிகளும் இன்று உங்கள் வெற்றிப் பரிசுகள். நீங்கள் எம்மை எது வேண்டுமானாலும் செய்ய லாம். ஆனால் நாங்கள் உயிர் உள்ளவர்கள்; உணர்வுள்ளவர்கள்; ஆசாபாசங்களுக்காட்பட் டவர்கள். அதன்மேல் (விசும்புகிறாள்)

பீஷ்மர் : பெண்ணே, அத்தினபுரத்தின் அரண்மனை, ஆரணங்குகளின் அழகையைக் கண்டறியாத பெருமனையம்மா. உன் அபிலாஷை எது வானாலும் கூறம்மா. அதைச் செய்வதாகத் தானே நான் முதலிற் கூறினேன்.

அம்பை : பிரபு. பொறுத்தருளல் வேண்டும். என் தங்கை கள் இருவரும் உங்கள் இளவலை விரும்பி நின் றார்கள் ஆனால் யான்... ...? யான் அவர்களுக்கு மூத்தவளாகப் பிறந்து விட்டதனாலோ என் னவோ அவர்களோடு உடன் வாழ முடியாத வளாகிவிட்டேன். அரசே, என் மனக்கருத்தை... இங்கு யான் எப்படி விபரிப்பேன் (அழுகிறாள்)

பீஷ்மர் : அம்மா நீ எதையும் அஞ்சாமற் கூறலாம். மெல்லியல்புடைய பெண்ணினத்தின் துயர் துடைப்பதே அரசர்க்கு மேலான கடமை யம்மா. உன்குறிப்பு மொழியிலிருந்து, நீ எங்கள்

அரண்மனையிலே, சந்திரகுலத்திலே வாழ்வு நடத்த விரும்பவில்லை எனத்தோன்றுகிறது. ஏனம்மா, அப்படித்தானே.

அம்பை : (பரிமளகந்தியை நோக்கி) நான் என்கருத்தை எவ்விதமம்மா கூறுவேன். (அழுகிறாள்)

பரிமள : மகனே, காங்கேயா, இந்த அருங்குணவதியை என் மருமகளாகப் பெற யான் கொடுத்து வைக்கவில்லை. இவள் இளமையிலிருந்தே சாலுவ தேய மன்னனைத் தனக்குரிய துணைவனாக வரித்து விட்டாளாம் அப்பா. ஆதலால்.

பீஷ்மர் : சிற்றன்னையாரே, மற்றொருவர் மீது மனம் வைத்த பெண் அவர்க்கே உரிமை உடையள்; எமக்கன்று. சிற்றன்னையாரே, இதற்கு நீங்கள்தான் வழிவகுத்துரைத்தல் வேண்டும்.

பரிமள : ஆம் மகனே. இந்தத் திருமகள் தான் விரும்பிய மன்னனிடம் சென்று வாழ்வதே தக்கதப்பா. அதற்குரிய அநுமதியை வழங்கி இவளைச் சாலுவ தேசத்துக்கு அனுப்பி விடப்பா. இதுவே செய்யத் தக்கது.

பீஷ்மர் : சிற்றன்னையார் உரைக்கு மாற்றமும் உண்டோ? யாரங்கே ... ...

காவலன் : மகாராசா

பீஷ்மர் : இந்த அம்மையார் சாலுவ தேசம் செல்ல வேண்டும். அரண்மனைத் தோழியர் சிலரோடு இவரை ஆங்கு அனுப்புவதற்குரிய ஆயத்தங்களை விரைந்து செய். அம்மா, அம்பை உன் விருப்பப் படியே யாவும் நடக்கும். நீ சாலுவ தேசம் சென்று சுகமாக வாழ்வாயாக.

பரிமள : ஆம் மகளே, உன் அன்புச் சேவையில் மனங் களித்து வாழ யான் கொடுத்து வைக்கவில்லை யென்றாலும் உன் பண்பான சகோதரிகள் என் மருமக்களாகி விட்டார்கள். நீ போய் உன் மனம் போலச் சிறந்து வாழம்மா.

அம்பை : மாமி, மன்னரே, வீரமிருக்கு மிடத்திலே நீதியும் இருக்கும் என்பதை யான் உணர்கிறேன். ஏழை யாகிய என் ஒருத்தியின் மனோ பீஷ்டம் நிறை வேறப் பேருதவி புரிந்த நீங்கள் என் தெய்வங்கள். நான் சென்று வருகிறேன் (வீழ்ந்து பணிந்து செல்கிறாள்.)

பீஷ்மர் : சிற்றன்னையாரே. நான் என்ன சொல்லுவேன்? சுயம்வர தினத்தன்று நிகழ்ந்த போரிலே அந்தச் சாலுவமன்னன் என்னோடு இறுதிவரை நின்று போரிட்டான். அவன் வீராவேசம் கொண்டு சமராற்றியமைக்குக் காரணம் இப்போதுதான் புரிகிறது. படுகாயம் உற்று மீண்டிருக்கின்றான். அவனை அம்பைதான் தேற்றவேண்டும்.

பரிமள : என்னவோ, நாம் தரும விரோதமின்றி நடந்து கொண்டோம். மேல் நிகழ்வனவெல்லாம் அம்பையின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. நான் வருகிறேனப்பா,

காட்சி 5

இடம் : சாலுவதேசத்தரண்மனை

பாத்திரம் : சாலுவ மன்னன், அம்பை, தோழி

நிகழ்ச்சி : அரசன் உடம்பிற் சில கட்டுக்களுடன் படுத்திருக்கிறான். தோழி விசிறிக் கொண்டு நிற்கிறாள்.

சாலுவ : அம்பா, ஐயோ உன்மேலுற்ற காதலினால் ஏற்பட்ட வெற்றிப் புண்கள் இவை. இன்று நீ என் பகைவன் சொத்து. ஆம். ஆனாலும் என்ன? உன்னை என்னால் மறக்கமுடியாது. மறக்காமல் ... ... அம்பா ... ... என் அம்பா

அம்பை : (ஓடிவந்து விசிறியை வாங்கிக்கொண்டு) சுவாமி உங்கள் அம்பை இதோ வந்துவிட்டேன். கண்ணைத் திறந்து பாருங்களேன்.

சாலுவ : ஆ, ஐயோ, அம்பா

அம்பை : சுவாமி, அம்பை இதோ நிற்கிறேன். ஆ என் பொருட்டாகவா இத்தனை காயங்கள். அந்தோ நான் பாவி! அரசே, இதோ உங்கள் பதசேவை செய்வதற்கு அம்பை ஓடி வந்துவிட்டேன். என்னைப் பாருங்கள் அரசே.

சாலுவ : (கண்களைத் திறந்து பார்த்துவிட்டு) இல்லை. நீ அம்பையில்லை. அவள் எப்படி இங்கு வருவாள்? அவள்தான் அத்தினபுரத்து அரசியாகி விட்டாளே. (சிரிக்கிறான்)

அம்பை : பிரபு, நான் அம்பைதான் இங்கு வந்திருக்கிறேன். கண்களைத் திறந்து பாருங்கள். அம்பை உங்கள் நாட்டு அரசியேயன்றிப் பிறர்நாட்டின் அரசியாவதற்கு எப்படி ஒருப்படுவாள் ?

சாலுவ : (எழுந்து மெதுவாக உட்கார்ந்து) ஆம். அதே சாயை; அதே குரல். நீ என் அம்பையேதான் ஆம் அம்பை நீ தான். அம்பா, அம்பா (எழுந்து அம்பையிடம் செல்ல முனைந்து) ஆ, நீ என்னுடையவளல்லவே. (பின் படுக்கையில் விழுந்து) ஆம், நீ என்னுடையவளல்லள்.

அம்பை : பிரபு, என்ன சொல்கிறீர்கள் ? படரவரும் பசுங் கொடியைப் பற்றாதே எனத் தடுக்கும் பைந்தருவும் உண்டா அரசே ? அம்பா என் அம்பா என்ற இன்பநாதம் எழுந்த நாவிலே நீ, என்னுடைய வளல்லளென்ற கொடுமைக் குரலொலியுந் தோன்றுமா. அரசே அம்பை உங்களுடையவள். என்றுமே உங்களுடையவள்.

சாலுவ : பெண்ணே, நீ என்னுடையவள்தான். என்னுடையவள்தான். அஃதெல்லாம் சுயம்வரதினம் வரையும். இன்று நீ பீஷ்மன் சொத்து. விசித்திர வீரியனின் பட்டமகிஷி. என் பகைவனின் உடைமை. ஆம் என் பகைவன் உன்னைக் கவர்ந்து விட்டான்; என்னை வென்று விட்டான். நீ அவர்களிடமிருப்பதன்றி என்னிடம் ஓடி வந்தமை அரசகுலதர்மத்துக்கே இழுக்கு.

அம்பை : அரசே நான் ஓடிவந்தேனில்லை. நானாக அவர்களோடு சென்றேனுமில்லை. வேந்தே நான் பெண். வல்லவன் கையில் அகப்பட்ட பம்பரம். யான் என் செய்வேன் ? உள்ளம் பிறிதோரிடம் வைத்து மற்ற ஓரிடத்தில் ஒன்றி வாழ்ந்தால் என் பெண்மைக்கு அஃதிழுக்காகாதா ? ஆதலினாலே தான் பீஷ்ம வேந்தரின் அநுமதியோடு தங்களைச் சரணடைந்தேன்.

சாலுவ : சீ, இதனினும் அவமானம் வேறு வேண்டுமா எனக்கு? பெண்ணே, வெந்த புண்ணிலே வேலைச் சொருகவா இங்கு வந்தாய் சென்றுவிடு. வலிய பகைவன் கவர்ந்து சென்றபின் நீ எங்ஙனம் எனதுடைமை ஆக முடியும்? இதோ பார் உன் பொருட்டால் யான் அடைந்த வீரப் பரிசுகள். இவை என் உடம்பிலே இருக்க உன்னை ஏன் எனக்கு? பகைவன் பரிந்தளித்த பரிசுப் பொருள் ஏந்தி நிற்கும் அளவுக்கு நான் பேடியாகவில்லை சென்றுவிடு அம்பா. சென்றுவிடு

அம்பை : சுவாமி, அழைப்பார், ஆதரிப்பார், அன்பளிப் பார் என்று நம்பி ஓடோடி வந்த எனக்கு நீங்கள் அளிக்கும் வரவேற்பு இதுதானா ? அரசே உங்களுடைமை யான். ஏற்றருள வேண்டும்.

சாலுவ : அம்பையே, தோல்வி கண்ட சாலுவ தேசத் தான், பகைவன் இரங்கி அளித்த கன்னிகையை உவந்து பெற்று வாழ்கிறான் என்று உலகு கூறும் அளவுக்குத் தாழ்ந்து போக நான் காமுகனாகி விடவில்லை. நான் க்ஷத்திரியன். சிங்கம் தான் வென்று கொன்ற உணவையே உண்ணும் என் பதை நீ அறியாயா ? நீ இன்று என் பகை வனுடைமை. ஆமாம் சென்று விடு. இங்கே நில்லாதே.

அம்பை : அரசே, எனக்குப் போக்கிடமில்லை. உங்களை என் துணைவராக வரித்த காரணத்தால் என் வாழ்வு பாழாவதா ?

சாலுவ ; உன்விதி அதுவானால் அதைத் தடுக்க யான் யார் ? நில்லாதே, சென்றுவிடு. ஐயோ அப்பா.

அம்பை : அரசே, அரசே.

சாலுவ : போ, போ, நான் உன்னை வேண்டேன். (திரும்பிப் படுக்கிறான்; சிறிது தரித்து நின்ற அம்பை சோர் வுடன் திரும்புகிறாள்.)

காட்சி 6

இடம் : பீஷ்மர் அரண்மனே.

பாத்திரம் : பீஷ்மர், அம்பை, காவலன்.

காவலன் : (பீஷ்மரிடம் வந்து) மகாராஜா வாழ்க. எங்கள் அரசபத்தினிமாரின் மூத்த தமக்கையார் வருகிருர்கள் பிரபு.

பீஷ்மர் : யார்? அம்பையா? உடனே அழைத்துவா. [இந்தப் பெண் சாலுவ தேசம் போனவளா யிற்றே, உடனேயே மீண்டும் வந்து விட்டாளே]

அம்பை : (ஓடிவந்து காலடியில் வீழ்ந்து) வேந்தர் வேந்தரே எனக்குப் போக்கிடமில்லே. நான் பாவி.

பீஷ்மர் : அம்பை, எழுந்திரம்மா. சாலுவதேசத்தானிடம் சென்ற நீ ஏனம்மா மீண்டு வந்துவிட்டாய்.

அம்பை : அவர் என்னே வெறுத்து விட்டார் பிரபு. என் முகதரிசனமே வேண்டாமென்று விரட்டிவிட்டார் மகாராசா. என் செய்வேன் பிரபு. நீங்களே அடைக்கலம்.

பீஷ்மர் : அம்மா, உன் நிலே என்ன? உனக்கென்ன வேண்டும். எல்லாம் விபரமாகச் சொல்லம்மா?

அம்பை : வேந்தே எனக்கு வாழ்வு வேண்டும். இவ்வுலகிற் பெண்ணாகப் பிறந்த யான் இல்லறம் புரிதல் வேண்டும்.

பீஷ்மர் : அம்பா, அதற்குயான் என்ன செய்வேன். உன் விருப்பப்படிதானே நடந்துகொண்டேன்.

அம்பை : வேந்தே, என்னை விரும்புவார், விரைந்தேற்பார் என்று யான் நம்பிச் சென்ற சாலுவ மன்னர் என்னை உதாசீனம் செய்துவிட்டார். பகைவன் கைப்பட்ட பாவையென்றென்னைப் பாராதிருந்து விட்டார். ஆதலால் எனக்கு இனி நீங்களே தஞ்சம்.

பீஷ்மர் : என்னைத் தஞ்சம் புகுவதால் ஆகும் பயன் என்னம்மா?

அம்பை : அரசே, நான் உங்களால் வெல்லப்பட்ட சிறைப் பொருள். எனக்கு வாழ்வமைத்துத் தரவேண்டியது உங்கள் கடமை?

பீஷ்மர் : பெண்ணே, இன்று நீ என் சிறையிலிருந்து விடுபட்ட சுதந்திரப் பறவை. நீ எங்கு வேண்டு மானாலும் செல்லலாம். எது வேண்டுமானாலும் செய்யலாம்.

அம்பை : வேதமுணர்ந்த தங்கள் திருவாயிலிருந்தா பெண் ணாகிய யான் சுதந்திரமுடையவள் என்ற வார்த்தை பிறக்கிறது. பிரபு, பெண் என்றும் தனித்து வாழ்தலாகாது; முதுமையிலும் மைந்தர் முதலாய ஆண்களின் ஆதரவில் அடங்கி வாழ்தல் வேண்டுமென்றல்லவோ வேதம், ஸ்திரீ குல தர்மம் உணர்த்துகிறது.

பீஷ்மர் : அம்பையே உன் பேச்சு நியாயமற்றது. உன் எண்ணப்படிதானே நீ சாலுவ மன்னனை வரித்தாய்.

அம்பை : ஆம், அது பருவத்தியற்கை. பிறரால் வெல்லப்பட்டு அடிமையான பின் அவ்வியற்கை செயற்படமுடியாதல்லவா. அடிமையான பின் கற்பில் தவறியவள் என்று கொள்ளப்படுமா?

பீஷ்மர் : இல்லை. உன்னை வென்ற எஜமானன் சொற்படி நடப்பதே கற்பு.

அம்பை : ஆம், பிரபு, என் உள்ளத்தியற்கை செயற்படவொட்டாமல் எம் சுயம்வரத்தைத் தடைசெய்து எம்மை அடிமையாக்கியவர் நீங்கள். ஆதலால் நீங்களே என் எஜமான். எனக்கு வழியமைத்து வாழ்வு நல்க வேண்டியவர் நீங்கள்தான்.

பீஷ்மர் : பெண்ணே, முன் எண்ணியவாறே, என் தம்பிக்கு நின்னை மணமுடிக்கலாம் என்றால், மற்றொருவர் மீது மனம் வைத்த நின்னை அவன் மணப்பதற்கு ஒருப்படமாட்டானே. என் செய்யலாம் அம்மா.

அம்பை : வேந்தே என் காதல் அழிந்துவிட்டது. அது போகட்டும். ஆனால், யான் பெண்பிறவியாக இருக்கிறேன். பெண்குலத்தார் இல்லறம்புரியாதிருப்பது கொடும்பாவம் என்று 'சொல்லப்படுகிறதே. அப்பாவத்தினின்றும் நீங்குவதற்காவது நான் மணம் புரிதல் வேண்டுமே.

பீஷ்மர் : ஆம் உண்மையே. அதற்காக என்னை என்ன செய்யச் சொல்கிறாய்.

அம்பை : வேந்தரே, வேதநெறி வழுவா வாழ்வுடைய நீங்கள் ஒரு தீர்வுகாண இயலாதா ? தாங்கள் மனம் கொண்டால் நான் இல்லறம் புரியும் பெரும் பயனை எய்தியவளாவேனே.

பீஷ்மர் : பெண்ணே, என்ன சொல்கிறாய்? யானே உன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் உன் குறிப்பு மொழியா ? ஆகாதம்மா. எந்தையார்

பொருட்டு இல்லறமும் அரசுரிமையும் துறந்து வாழும் யான் எங்ஙனம் அம்மா அதை மீறல் முடியும்.

அம்பை : அந்தோ, மலர்ந்து சிறந்த மாமலர், அணிபவ ரிடத்தே சென்றமர்தலாலல்லவா அவர்க்கினிமை யூட்டுகிறது; தானும் மதிப்பில் உயர்கிறது. அம்மலர் போலாகாது செடியின் கண்ணே மலர்ந்து பயனின்றி வாடி விழும் மலர் போல ஆவதற்கா யான் பூமியிலே ஜனனமெடுத்தேன். பிரபு தாங்களே கருணைகாட்டுதல் வேண்டும்.

பீஷ்மர் : அம்மா, அம்பை, மேலும் மேலும் என்னை ஏன் இரந்து நிற்கிறாய். என் உறுதியை மாற்ற எவராலும் இயலாது. ஆமாம். பிரமசாரியாகிய யான் உன் முன்னிலையிலே நிற்பதும் உன்மொழி கேட்பதும் ஆகிய இவைகள் தாமும் செய்ய லாகாது. அஃது என் உறுதி தளர்வதற்கும் பழிவளர்வதற்கும் ஏது. ஆதலால் நீ எதை வேண்டுமாயினும் செய். இப்பொழுதே இவ் விடத்தை நீக்கிச் சென்று விடு. நில்லாதே.

அம்பை : கடவுளே, எனக்கும் போக்கிடமுண்டா.

(செல்கிறாள்)

காட்சி 7

இடம் : பரசுராமர் ஆசிரமம்.

பாத்திரம் : அம்பை, பரசுராமர்.

நிகழ்ச்சி : பரசுராமர் தவத்தில் இருக்கிறார். அம்பை ஓடி வந்து அவர் கால்களில் வீழ்ந்து கதறுகிறாள்.

அம்பை : மாதவப் பெரியோய், அடைக்கலம். அன்னையின் அழுகை பொருது அவளுக்கு இன்னலைச் செய்த ஆதித்தகுல வேந்தரை இருபத்தொரு தலைமுறை சங்கரித்து வெற்றிகொண்ட வீரத்திரு முனிவரே, சரணம். அடியாள் அம்பை தங்கள் அடைக்கலம் சுவாமி.

பரசுரா : (கண்ணை விழித்து) அம்மா எழுந்திரு. அருந் தவத்திலிருக்கும் எம் காலடியில் வீழ்ந்துகிடந்து புலம்பும் நீ யாரம்மா ?

அம்பை : சுவாமி. அடியேன் காசி வேந்தரின் புதல்வி. அம்பை என்பது என்பெயர்.

பரசுரா : ஆமாம், நீ எம் காலடியில் வீழ்ந்து புலம்புவதற்குக் காரணம் ? உனக்குற்ற துயரம் என்னம்மா ?

அம்பை : தபோநிதியே, எனக்கு வாழ்வு வேண்டும். இல்லற வாழ்விலமர்ந்து பெண்ணாகத் தோன்றிய இப்பிறவியின் பயனை அனுபவிக்கத் தேவரீரது கருணையை வேண்டிவந்தேன். வரந்தாருங்கள் சுவாமி.

பரசுரா : அம்மா, அதற்கு என்ன தடை நேர்ந்தது. உன் கலங்கிய நிலைக்குக் காரணம் என்ன? உனக்கிந்த நலிவு செய்தோர் யார்?

அம்பை : சுவாமி, சாலுவதேச மன்னனிடத்திலே என் மனதைப் பறிகொடுத்த யான், எந்தையார் எமக்கமைத்த சுயம்வரத்திலே எழுந்த போட்டியின் காரணத்தால் அத்தினபுரத்தரசர் பீஷ்மரிடத்திலே சிறையாக அகப்பட்டேன். (விசும்புகிறாள்)

பரசுரா : கலங்காமல் மேலே கூறம்மா.

அம்பை : அந்தப் பீஷ்மரிடம் என் மனக் கருத்தைக் கூறி அவரநுமதி யோடு சாலுவ தேசத்தரசனிடம் சென்றேன். பகைவனிடம் சிறைப்பட்ட என்னை ஏற்க முடியாதெனச் சாலுவதேசத்தரசர் மறுத்து விட்டார். நான் மீண்டும் பீஷ்மரிடம் வந்தேன்.

பரசுரா ; பீஷ்மன் என்ன சொன்னான்?

அம்பை : அவரிடம் என் நிலையைக் கூறி இல்லற வாழ்வு தந்து என்னை ஈடேற்ற வேண்டுமென்று இரந்து நின்றேன். அவரும் மறுத்து விட்டார் சுவாமி.

பரசுரா : அவன் மறுக்கக் காரணம்?

அம்பை : சுவாமி, அவர் இல்வாழ்விற் புகுதல் இல்லையெனச் சபதம் எடுத்துக் கொண்டவராம்.

பரசுரா : ஆமாம், பீஷ்மன் என்ற பெயர், விரதங்காப்பவன் என்ற பொருளுடைய தென்பதை நாம் உணர்கிறோம். அப்புறம் நிகழ்ந்ததென்னம்மா?

அம்பை : சுவாமி, நான் அபலையாகிவிட்டேன். பெண்ணுகப் பிறந்த யான் இல்லறப்பயனை நுகராத நிர்ப்பாக்கியவதியாகி விட்டேன். மகா தபசி

யாகிய தங்கள் பாத தாமரைகளே தஞ்சமென வந்து நிற்கின்றேன்.

பரசுரா : கவலாதே யம்மா. உனக்கு நாம் கதிகாட்டு வோம். ஆமாம், அத்தினபுரத்தரசன் பீஷ்மன் என்று கூறினுயே. அவன் சந்தனுவேந்தரின் மைந்தனு ?

அம்பை : ஆம் சுவாமி சந்தனு மன்னரின் மூத்த மனைவி கங்கையின் வயிற்றிற் பிறந்தவரெனத் தோழிகள் கூறக்கேட்டேன் சுவாமி.

பரசுரா : ஆஹா, காங்கேயனு, எம்மிடம் வில்வித்தை பயின்ற அந்த அரசிளங்குமாரனு ?

அம்பை : ஆமாம், சுவாமி, தங்கள் சீடரே அவர் என்பதை அறிந்து தான் அடியாள் தங்களிடம் சரண் புகுந்தேன்.

பரசுரா : காங்கேயனு இன்று பீஷ்மன். அரசகுலத்துத் தோன்றியவன் கிருகஸ்தாசிரமத்தை இழப்பதா? அதுவும் எம்மிடம் கலைகற்றுத் தெளிந்தவன் வேத வாய்மை கடைப்பிடிக்காது வாழ்வு மேற் கொள்வதா? அம்மா, கலங்காதே வா. அந்தப் பீஷ்மனை மனந்திருப்பி உன் கோரிக்கையை நிறைவேறச் செய்வோம்.

அம்பை : சுவாமி, மகா பெரியவராகிய தங்களின் தவச் செயல்களுக்கிடையே புகுந்து அவற்றுக்குத் தடை யாய் நின்ற தமியேனைப் பொறுத்தருளல் வேண்டும்.

பரசுரா : (சிரித்து) நீ, என்னம்மா. எனக்குச் சிரமமா? மனங்கலங்காது புறப்படு. அத்தினபுரஞ் செல் வோம்.

(பரசுராமர் தம் ஆயுதங்களோடு புறப்படுகிருர். அம்பை தொடர்கிருள்)

காட்சி 8

இடம் : *பீஷ்மர் அரண்மனை*

பாத்திரம் : *பீஷ்மர், பரசுராமர், அம்பை*

காவலன் : வேந்தர் கொற்றம் வாழ்க. பிரபு, யாரோ பெருந் தவ சிரேட்டர் வருகிறார்.

பீஷ்மர் : முனிவரா, இதோ வந்தேன். (ஆசனத்தெழுந்து விரைந்து செல்கிறார்)

பரசு : காங்கேயா, மங்களம் உண்டாகட்டும்.

பீஷ்மர் : ஹா, என் குருதேவரா (காலில் விழுந்து) பிரபு தமியேன் சிறுகுடில் தேடிப் பாததாமரைகள் நிலந்தழுவ நடந்து வந்தீர்களே, நான் தன்ய ஞானேன். புவியிற் பிறந்த பெரும்பயனைப் பெற்றேன். குருவே உள்ளே எழுந்தருளித் தமியேனுக்கருள் புரிதல் வேண்டும். (உள்ளே ஓராசனத்தில் அமரச் செய்து கைகட்டி நிற்கிறார்)

பரசு : காங்கேயா ...

பீஷ்மர் : சுவாமி

பரசு : இன்று நீ ஐம்பத்தாறு தேசத்துக்கும் தனியாணை செலுத்தும் அத்தினபுரத்துச் சக்கரவர்த்தி ...ம்

பீஷ்மர் : இல்லை சுவாமி, தமியேன் தங்கள் பாதம் பரவித் தொழும் பரமதாசன் குருதேவா.

பரசு : ஆமாம். எல்லாம் அறிந்தேன். உன் தந்தையார் பொருட்டு அரசுரிமையும் இல்லறமும் துறந்து வாழும் வாழ்வு மேற்கொண்டிருக்கிருயாமே. வேதத்தின் விளைநிலத்திலே பாதகத்தின் பலிப்பு. உன் குல தர்மத்துக்கு ஒத்த வாழ்வுதான் உன் வாழ்வா, காங்கேயா?

பீஷ்மர் : குருதேவர் உரைப்பது ...

பரசு : ஆமாம், அன்று விளங்கிக் கொள்ளுவாய். இன்று விளங்காது. ஏன் தெரியுமா? இன்று நீ பீஷ்மனுகி விட்டாய் (ஹ ஹ - சிரிப்பு)

பீஷ்மர் : மகானுபவரே, அடிமை தாசானுதாசன். குரு தேவரே எளியேன்மீது கிருபை கூர்ந்தருள வேண்டும்.

பரசு : பீஷ்மா. இல்லை நீ காங்கேயனே, நாம் உன்னைக் காங்கேயனுகவே, அழைப்போம். காங்கேயா அன்று எம்மிடம் கலைகற்ற நாளில் கொண்ட பிரம்மச்சாரியமே இன்றும் கொண்டிருக்கிரு யாமே. வேதம் சொல்வதைத் தெரிந்து கொண்ட வன் தானே நீ.

பீஷ்மர் : ஆம், குருநாதரே, அறிவேன்.

பரசு : எதை அறிவாய்? அரசகுல தர்மம் என்றும் பிரமச்சாரியாய் இருத்தல் என்பதையா?

பீஷ்மர் : இல்லை சுவாமி, இல்லற ஆச்சிரமம், வானப் பிரஸ்தம் என்ற முறையில் பயிலுதல் வேண்டும் என்பதை அறிவேன் சுவாமி.

பரசு : காங்கேயா மகிழ்ந்தோம். இந்நாள்வரையும் நீ அதனின்றும் தவறியதையும் க்ஷமித்தோம். இதோ இந்த மங்கையை நீ அறிவாயல்லவா.

பீஷ்மர் : அறிவேன் குருநாதா. இவள் அம்பை; காசி தேசத்தவன் புதல்வி.

பரசு : உன்னால் திருமணம் புரிதற்கென வெற்றி கொள்ளப் பட்டவள் என்பதையும் சேர்த்துச் சொல்.

பீஷ்மர் : குருநாதா.

பரசு : குலதர்மம் தவறினாய் அபலையாகிய பெண்ணொருத்தியின் வாழ்விலே புகுந்து அவளை அநாதரவு செய்து கொடும்பழியையும் சுமந்தாய். அந்த இரண்டு களங்கத்தினின்றும் நீ நீங்க வேண்டும்.

பீஷ்மர் : கட்டளை இடுங்கள் குருதேவா.

பரசு : காங்கேயா இவளை நீ மணந்து கொள்ளவேண்டும்.

பீஷ்மர் : குருதேவா, எல்லாம் உணர்ந்த தாங்கள் என்னைச் சோதிக்கலாகுமா?

பரசு : காங்கேயா, இது சோதனையன்று. எமது கட்டளை. வேத நெறி வழுவி நிற்கும் உன்னைத் திருத்த யாம் கூறுகின்ற யோசனை - பிராயச்சித்தம்.

பீஷ்மர் : சுவாமி, சுவாமி நான் என் செய்வேன்.

பரசு : காங்கேயா விரைந்து செய். தயங்காதே

பீஷ்மர் : குருதேவரின் வாக்குத் தமியேனைத் தரும சங்கடத்துள் ஆழ்த்துகிறதே. சுவாமி ...

பரசு : காங்கேயா. நாம் சொல்கிறோம். உனது குரு சொல்கிறார். ஏற்றுக் கொள்.

பீஷ்மர் : மாட்டேன் சுவாமி. மாட்டேன்.

பரசு : என்ன, எனது வாக்கையும் மீறுகிறாயா?

பீஷ்மர் : சுவாமி, குருதேவரே க்ஷமிக்க வேண்டும். எந்தை யார் பொருட்டு யான் ஏற்றுக் கொண்டிருக்கும் சபதம் என்னுவது சுவாமி.

பரசு : காங்கேயா நில். குருவின் கட்டளையினும் உன் சபதம் பெரிதா? அடே எம்மையும் மீறத் துணிந்து விட்டாயா?

பீஷ்மர் : தேவரும் மூவரும் யாவரும் அறிய, அவர் அங்கீகரிக்க நான் செய்துகொண்ட சபதம் மீறப் படுமே குருதேவா.

பரசு : காங்கேயா, மேலும் மேலும் அடுக்காதே. எம் கட்டளையை உடனே நிறைவேற்று.

பீஷமர் : சுவாமி முடியாது. என் சபதம் சாதனை யிலிருந்து நான் வழுவமுடியாது.

பரசு : முடியாது - ஆ - எம்மிடம் கற்றவில்லாண்மை இவ்வாறு உன்னைப்பேச வைக்கிறது எப் பொழுது நீ என் உரையை மறுத்து விட்டாயோ அப்பொழுதே நீ என் பகைவனுகி விட்டாய். எடு உன் வில்லை. வா போருக்கு. அகிலத்தரசர் யாரும் பெயர் கேட்டாலே நடுங்கும் பரசுராமர் வாக்குக்கு எதிர்வாக்குக் கூறுபவன் அழிந்தொழி வான் என்பதை நீ அறியவில்லை. அடேய் காங்கேயா.

பீஷ்மர் : சுவாமி, சுவாமி. கோபங்கொள்ளலாகாது. (காலில் விழுதல்)

பரசு : (காலால் உதைத்தபடி) மீண்டும் மீண்டும் இரக்காதே. உன் ஆண்மை என் சொல்லை அவமதித்து விட்டதல்லவா? அது போர்முனை யிலே தீர்க்கப்படவேண்டும். எடு உன்வில்லை. அரசப்பதரே. வா போரிடுவோம். போரினுல் எங்கள் சாதனையை நிலைநாட்டுவோம்.

பீஷ்மர் : குருதேவா.........

பரசு : என்பேச்சில் இனி மாற்றமில்லை. வா வெளியே. போருக்கறைகூவி நிற்கும் ஒருவனைக் கெஞ்சி நிற்கும் நீயும் ஒரு க்ஷத்திரியனா? வா. உன் வில்லாண்மையைக் காட்டு. உன் சபதத்தை நிலை நாட்டு.

பீஷ்மர் : வருகிறேன் சுவாமி. இந்நாள்வரையும் சாதித்த எனது சபத வார்த்தையை, சாதனையைக் கை விட்டுவிடுவதிலும் மகாவீரராகிய தங்கள் கையால், என் குருதேவரது அம்பினாலேயே கொல்லப்படுதல் எனக்குப் பெரும் பாக்கியம் சுவாமி. வருகிறேன்.

(யுத்த களத்திலே பரசுராமன் அம்பினாலடியுண்டு வீழ்கிறான்)

பீஷ்மர் : (ஓடிப்போய்) குருநாதா, நான்பாவி, நான் பாவி, சுவாமி என்னைப் பார்த்துப், பொறுத்தருள் செய்யவேண்டும்.

பரசு : (மயக்கந் தெளிந்து) என்னை விடடா. நான்... நான் நொந்தேன். என்னிடம் கற்ற வித்தையைக் கொண்டே என்னை நோகச் செய்தான் ஒரு க்ஷத்திரியன். இனிமேல் க்ஷத்திரியனாகிய அரச குலத்தான் எவனுக்குமே நான் வில்வித்தை கற்பிக்க மாட்டேன். அம்மா, அம்பை நடந்தது கண்டாயா? நான் வருகிறேன். நீ உன் வழியிற் செல்லம்மா.

அம்பை : சுவாமி இனிமேலும் எனக்கு ஒரு வழி இருக்கிறதா? என்னை இல்வாழ்விற் புகவொட்டாது தடுத்துப் பாவியாக்கிய பீஷ்மனே, நில். நானே உன்னைக் கொல்வேன். தவஞ் செய்து வலி பெற்று அடுத்த பிறவியிலாயினும் உன்னை நான் கொல்வேன். கொல்லேனாயின் நான் காசி வேந்தன் மகளல்லள். வருகிறேன். (போகிறாள்)

பீஷ்மர் : (தனித்து நின்றபடி) எல்லாம் விதி. விதியின் கரத்தில் அகப்பட்டு நிற்கும் நாம் அதன் வழியில் அமைந்து கிடப்பதே நலம். ★

கோமகளும்
குருமகளும்

[மட்டு நகரில் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற நாடகம்.] **1968**

பாத்திரங்கள்

சுக்கிராச்சாரியார்	—	அசுரகுல குரு
யயாதி	—	அத்தினபுர வேந்தன்
விடப்பன்மன்	—	தானவகுல மன்னன்
சன்மிஷ்டை	—	விடப்பன்மன் மகள்
ராதிகா, சுரசை	—	சன்மிஷ்டையின் தோழிகள்
தேவயாணி	—	சுக்கிராச்சாரியார் மகள்
நிகும்பன்	—	விடப்பன்மனின் ஒற்றர் தலைவன்
மந்திரிகள்		

காட்சி 1

இடம் : கானகப்புறத்தே ஒரு சோலை.

காலம் : காலை.

பாத்திரம் : சன்மிஷ்டை, ராதிகா, சுரசை, யயாதி, சுக்கிராச்சாரியார்.

நிகழ்ச்சி : சன்மிஷ்டை நீராடிவிட்டுத் தேவயாணியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்.

சன்மி : ராதிகா, ராதிகா -

ராதிகா : (ஓடிவந்தவளாய்) கோமகள் சன்மிஷ்டை தேவியார் வாழ்க பணியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன் அம்மா.

சன்மி : ஆமாம். ஏண்டி ராதிகா, நீராடிய குருமகள் தேவயாணி மாற்றுடை தரிக்க இவ்வளவு நேரமா? இன்னும் காணோமே.

ராதிகா : குருமகளாரையேயன்றி அவருக்கு மாற்றுடை எடுத்துச் சென்ற சுரசையையுங் கூட இன்னும் காணோமே அம்மா. சுரசை போய் இரண்டு நாழிகைப் போதாவது இருக்கும்.

சன்மி : ஆமாம். அவர்கள் இன்னும் வராமைக்குக் காரணம்?

ராதிகா : எனக்கும் புரியவில்லையம்மா. சென்று பார்த்து வரலாமென்றால் இங்கு நீங்கள் தனித்திருக்கி றீர்களே. அதோ சுரசை வருகிறாள் அம்மா.

சுரசை : (வந்து கொண்டே) கோமகளார் வாழ்க. குரு புத்திரியார் உங்கள் ஆடையை அணிய மறுத்து, அதை உங்களிடமே கொடுத்து விடும்படி தந்த னுப்பியிருக்கிறார்களம்மா. இதோ, (உடையைக் கொடுக்கிறாள்.)

சன்மி : அப்பபடியா? என் உடையை அணிவதற்குத் தாம் தகுதியற்றவர் என்று குருமகளார் எண்ணியிருக்க வேண்டும். ஐயையோ, அப்படியானால் தேவயா ணிக்கு ஆடை வேண்டுமே. ஈர ஆடையுடன்தான் குருபுத்திரியார் இன்னும் அங்கே நின்றுகொண்டி ருக்கிறாரா? ஏண்டி சுரசை, இதை உடனேயே வந்து கூறியிருக்கலாகாதா? இந்நேரமளவும் நீ அங்கே என்னடி செய்துகொண்டிருந்தாய்?

சுரசை : அரச புத்திரியார் பொறுக்க வேண்டும். தேவயா ணியம்மையாரின் ஆஞ்ஞைப்படி நான் அவர்கள் மனைக்குச் சென்று வேறோர் ஆடை எடுத்து வந்து கொடுத்தேன். அதனாலேதான் காலதாமதமாயிற் றம்மா.

சன்மி : சுரசை, நீ என்ன மூடப்பெண்ணா? குரு புத்தி ரியார் எனது ஆடையை மறுத்தவுடனேயே, ஏதோ தவறு நேர்ந்திருக்க வேண்டுமென்பதை அறிந்து இங்கு நீ ஓடிவந்திருக்க வேண்டுமே. வந்திருந்தால் நான் தவறுதலாக எடுத்தணிந்த குருபுத்திரியாரின் ஆடையைத் தந்துவிட்டிருப்பேனே.

சுரசை : கோமகளார் பொறுக்க வேண்டும். உங்கள் ஆடையை அவர் மறுத்தவுடனே யான் உங்க ளிடம் மீண்டு வரத் திரும்பினேன். குருமகளார் தாம் தடுத்துவிட்டார். தமது சொந்த ஆடை எங்கே? என்றார். காற்றினால் ஒன்று கலக்கப்பட்ட மாற்றுடைகளிலே பேதம் காணமுடியாமையினால் நீங்கள் அவர் ஆடையைத் தரித்துக் கொண்டி ருப்பதாக யான் நிகழ்ந்தவற்றைக் கூறினேன்.

சன்மி : நீ மதியூகமாகத் தான் நடந்திருக்கின்ருய். நிகழ்ந்த வற்றை அறிந்தபின் குருபுத்திரி என்ன செய்தார்?

சுரசை: நீங்கள் அணிந்து விட்டமையினுல் தமது சொந்த ஆடையுமே தமக்கு வேண்டாம் எனக்கூறிவிட்டு என்னைத் தம் மனைக்குச் சென்று வேறு ஆடை கொண்டு வரும்படி பணித்தார்களம்மா. அவர் பணியைச் செய்ய வேண்டியிருந்தமையாலேதான் காலதாமதமாயிற்றம்மா.

சன்மி : என்ன? நான் தரித்துவிட்டமைக்காகத் தம் ஆடையையே வேண்டாம் என்று கூறுகிருரா குரு புத்திரியார். வரட்டும் காரணத்தை அறிவோம்.

ராதிகா : அதோ குருமகளார் வருகிருர்களம்மா.

சன்மி : வரவேண்டும், வரவேண்டும். குருமகளார் வர வேண்டும். சுக்கிராச்சாரியராம் அசுரகுவின் திரு மகளார் வரவேண்டும். மாற்றுடைதரித்து வரு வதற்கு இவ்வளவு நேரமா?

தேவ : ஆமாம். தோழியாய் இருப்பவரின் தகுதியும் தூய்மையும் உணராது பழகும் இயல்புடையார் இருக்கும்போது நேரம் அதிகமாகாமல் இருக்குமா? அரச புத்திரி அவ்வளவுக்கு நிலைதடுமாறிப் போவாள் என்று நான் நினைக்கவில்லை.

சன்மி : அரசபுத்திரி நிலைதடுமாறவில்லை. குருபுத்திரிக்குத் தான் குணம் பேதலித்துவிட்டது. இல்லா விட்டால், அற்ப விலைபெறும் ஆடையிலும் பார்க்க உயர்ந்த மதிப்புள்ள ஆடை கிடைக்கும் போது அதை உதாசீனம் செய்யும் பேதைமை அவரிடம் தோன்றியிருக்கமாட்டாது.

தேவ : அரசர்கள் அளவில் அந்த ஆடை உயர் மதிப் புள்ளதாக இருக்கலாம். ஆனுல், எமக்கு நாம் தரிக்கும் ஆடையே உயர்ந்தது. இதனைப் புரிந்து கொள்ளாத அரச குமாரியின் அறிவுத் திறத்தை எப்படிப் புகழ்வது?

சன்மி : அரசர்களிடம் தங்கி, அவர் கொடுப்பதை ஏற்று, அது கொண்டு வாழ்வு நடத்துபவர்கள். அவ்வரசர் அநுபவிக்கும் பொருள்களை இழிந்தன என்பார்கள். தமதுடைமையே உயர்ந்ததென்பார்கள். ஆஹா, இந்தத் தன்மையை அறியாதமை அரசகுமாரியின் அறிவுக் குறைவேதான். நன்று, நன்று தேவயாணி.

தேவ : சன்மிஷ்டை. உன் அகங்காரமான பேச்சை அவ்வளவில் நிறுத்து. நாம் அரசரை அண்டி, அவர் தருவதை ஏற்று வாழும் வாழ்வுடையோம் என்று நாத்தடிக்கப் பேசாதே. எந்தை சுக்கிராச்சாரியார் இல்லாவிட்டால் தெரியும் உன் தந்தையின் அரச வாழ்வு.

சன்மி : ஊஹூம், பார்த்தாயாடி ராதிகா, கேட்டாயாடி இவள் பேசும் பேச்சை? ஒரு அப்பாவிப் பிராமணரால் தான். தேவரையும் வென்று, வீரம் செறிந்து விமரிசையாய் விளங்கும் விடப்பன்ம வேந்தர் வாழ்கின்றார். தேவயாணி, அகங்காரம் உனக்கன்றி எனக்கில்லை. எந்தையாரிடத்து வந்து கையேந்தி நிற்கும் உன் தந்தையாரின் நிலையை அறியாமல் என்னை அகங்காரம் பிடித்தவள் என்று கூறுகிறாயே, நீ பகுத்தறிவுடையவள்தானா?

தேவ : அரசகுலக் கன்னியொருத்தி தரித்த ஆடையை, அவள் தோழியேயானாலும், ஆசாரம் மிக்க அந்தண குலப்பெண் தரிக்க உடன்படமாட்டாள், என்பதைச் சிந்தித்து உணரமுடியாத நீயா நானா பகுத்தறிவுக் குறைவுடையவர்கள்? எந்தையாரின் அறிவுத்திறம் இல்லாவிட்டால், நீயும் உன் குலமும் உன் தந்தையும் என்ன பாடு படுவீர்கள் தெரியுமா? கூடத்திலே தேவப் பெண்களின் ஏவல் கேட்டு நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கும் என்பதை அறியாமல் எந்தையாரைப் பழித்துரைக்கின்றாயே, முழு மூடமே. உன் வாயை அடக்கிப் பேசு.

சன்மி : ஆஹா, அற்பப் பிராமணச் சிறுக்கியா, அசுரேந்திரனாகிய விடப்பன்மன் புதல்வியை வாயடைக்கும்படி கூறுபவள்.

தேவ : ஆம் அவளேதான். அவளை அற்பம் என்றெண்ணுவது தான் தவறு. நினைத்தால் அகில உலகத்தையுமே தன்னடிக்கீழ் அடக்கி ஒடுக்கி வைக்கும் அதிகாரம் அவருக்குளதாகும் என்பது தெரியாய் போலும். அசுர குலத்தாருக்கும் நன்றியுடைமைக்கும் வெகுதூரம் என்பதை அறியாமை என் தவறுதான்.

சன்மி : அசுரகுலத்தார் தந்துதவ உண்டு களித்துக்கொண்டு, அக்குலத்தை இழித்துரைக்கும்போது நீ நன்றியுணர்வைத்தான் காட்டுகிறாய். அடீ, தேவயாணி தம்மை இழித்தவர்களை அசுர குலத்தார் என்ன செய்வார்கள் என்பதை நீ அறிவாயா?

தேவ : ஏன் அறியாமல்? நான் யார் தெரியுமா? அசுர குலத்தாரின் குருமகள். அசுரர் செய்வனவெல்லாம் எந்தையாரின் ஆலோசனைகளும் கற்பனைகளுமென்பதை நீ அறிந்துகொள்.

சன்மி : ஆஹா, அவ்வளவுக்கு அகந்தை கொண்டிருக்கிறாயா நீ? இதோ அசுரர் செய்யும் செயல்களை நான் செய்கிறேன். இவையும் உன் தந்தையின் கற்பனைதானா பார். அகிலலோகத்தையும் காலடிக் கீழ் ஒடுக்குவேன் என்றாயே, அதைக் காட்டு. அடிமைச் சிறுக்கிக்கு அவ்வளவு வாய்த் துடுக்கா? (கூந்தலைப் பற்றி இழுக்கிறாள்)

சுரசை : அம்மா கொடும்பழி விளைக்கும் குரூரச் செயலைச் செய்யாதீர்கள். அந்தப் பழி பொல்லாததம்மா.

சன்மி : சுரசை, அப்பாற் செல்லடி. என்னையும் என் குலத்தையும் அவதூறு கூறியவள் உயிரோடிருத்தல் ஆகாது. இதோ ஒழிந்து போகிறாள் பாருங்கடி. (ஹ ஹ ஹ ஹா) வாருங்களடி போவோம். அவள் கிணற்றுட் கிடந்து அதிகாரத்தைக் காட்டட்டும். (யாவரும் போகிறார்கள்)

(யயாதி மன்னன் வருகிறான்)

தேவ : (கிணற்றுள் இருந்தபடியே) தெய்வமே என்கதி இப்படியா முடியவேண்டும்? அந்தோ, இவ்வழியாக வருவார் போவார் யாருமில்லையா? கிணற்றுள் வீழ்ந்து தவிக்கும் ஓர் அபலையைக் காப்பதற்கு யாரும் வரமாட்டார்களா?

யயா : (ஓடிவந்து கிணற்றை எட்டிப்பார்த்து விட்டு) பெண்ணே அஞ்சாதே. இதோ உன் அவலந்தீர்க்கிறேன். இந்தா, இந்த உத்தரீயத்தை இறுகப் பற்றிக்கொள். யான் உன்னை மேலே தூக்கி விடுகிறேன். அஞ்சாமல் பற்றிக்கொள்ளம்மா. (மேலே இழுக்கிறான்) மெதுவாக. மெதுவாக, ஆ, சரி. (தேவயாணி மேலே வந்து உடல் கூச நிற்கின்றாள்.)

தேவ : என்னை இறப்பதினின்று காத்தருளிய ஏந்தலே, நீங்கள் செய்த நன்றிக்கு யான் இயற்றும் கைம்மாறு யாது? யானோர் அபலை வேந்தரே ...... (அழுகிறாள்)

யயா : எனக்குக் கைம்மாறு செய்தல் வேண்டும் என்பதற்காகவா நீ கலங்குகிறாய்? உயிர்களுக்கு நேருந் துன்பந் துடைத்தலே என் தர்மம்; பெண்ணே, உனக்குற்ற துன்பந்தான் தீர்க்கப்பட்டு விட்டதே. மேலும் துயருறலாகுமா ?

தேவ : மன்னரே, யான் என் விதியை நினைத்து விம்மு கின்றேன். வானவரும் தானவரும் வந்து வழிபா டியற்றும் அருட்குரு சுக்கிராச்சாரியாரின் அருந் தவப் புதல்வியாகிய எனக்கா இக்கதி? இதை எண்ணும் போது என்னுற் கலங்காதிருக்க முடிய வில்லை.

யயா : என்ன? நீ சுக்கிராச்சாரியரின் புதல்வியா? அறி வுக்கடலாகிய அந்தணப் பெரியாரின் அரும்புதல் வியாகிய உனக்கும் அவலந் தோன்றுமா? அம்மணி நீ இந்நிலை யெய்தக் காரணம் யாதென்பதை யான் அறியலாகுமா?

தேவ : அதுவா? அஃதென் விதி வேந்தரே, விதி, உருத்து நிற்கும் ஊழ்வினையின் ஊடே நின்று அதன் வலியைத் தடுத்து நிறுத்தலும் இயலுமா? அரசே புனிதமும் நன்னெறிப் படர்வும் வாய்ந்த உங்கள் மனத்திலே என் சோகத்துக்காம் காரணங்கள் புகுதல் ஆகாது புகுந்து அந்தத் திருவுள்ளத்தைப் புண்படுத்தலாகாது அவை என் அகத்தினுள்ளேயே தங்கி அழிந்து போகட்டும்.

யயா : பெண்ணே, என்னுற் காக்கப்படுவோரின் இன்னல் களைக் கேட்டுக் கேட்டுப் பழகியவை என் காதுகள். அவர்கள் இடையூற்றினை எண்ணி எண்ணி நலிந்து பயின்றது என் சிந்தை. ஆதலினுல் உன் செய்திகள் அதனைப் புண்படுத்தமாட்டா. வேண்டாம் அவை. மேலும் உனக்கு என்னுலாக வேண்டிய உதவி இருந்தாற் சொல்.

தேவ : வேந்தரே, சூழ்வினையின் இறுகப் பற்றிய சுருக்கிலே துடித்து நின்ற என்னை, நீங்கள் தெய்வமாக வந்து தளர்த்திவிட்டீர்கள். அதுவே போதும். மேலே இடர் ஏதும் எய்தாதவாறு பார்த்துக்கொள்ளும் ஆற்றல் எனக்குண்டு.

யயா : ஆ. அப்படியானால் நன்று. வா. நின்னை நின் தந்தையாரிடம் சேர்க்கின்றேன். சேர்த்து விட்டு அவர் ஆசியையும் பெற்றுச் செல்கிறேன்.

தேவ : கருணை மிகுந்த வேந்தரே, நன்றி செய்தார் ஒருவரின் நயவுரைகளைப் பேணுதிருந்தாள் தேவயாணி என்ற அபவாதம் தமியேனுக்கு ஏற்படாமல் என்னைக் காத்தருளுங்கள் பிரபு.

யயா : ஆஹா, நன்று. அந்த அபவாதம் நினைக்கெய்தாமல் யான்காக்கின்றேன். மங்கையே வேட்டைமேல் வந்த என்னை நீண்ட நேரங் காணுமையினால் தேடியலைகின்ற என் பரிவாரங்களுடன் இனி யான் சென்று கலந்து கொள்ளலாமல்லவா?

தேவ : ஆருயிர் எனக்கீந்து, ஆதரவு நல்கிய அரசரே. சென்று வாருங்கள். உங்கள் அருங் குணங்களும் அன்பும் அடியாள் நினைவில் என்றும் நிலைத்திருக்கும் (வணங்குகிருள்)

தேவ : (தனியே சோகபிம்பமாய் ஒரு கற்பாறையில் அமர்ந்து கொண்டு) ஆம் என் தலைவிதியை நானே நொந்து கொள்ள வேண்டும். கிணற்றிலே வீழ்த்தப்பட்டபோதே யான் உயிர் போக்கியிருக்க வேண்டும். அஃதின்றி வெளியே மீட்கப்பட்டதால் எனக்கென்ன பயன்? அந்தோ, சர்வலோகமும் புகழும் அசுரகுருவின் பெண் கிணற்றிலே தள்ளப்பட்டாள் என்ற களங்கம் என்னையும் என் தந்தையையும் பற்றி நிற்கப்போகின்றதே. பூவுலக வேந்தன் மேனியிற் படிந்த உத்தரீயத்தைப்பற்றி வெளியேறி, அவ்வேந்தன் முன்னே அவல நிலையிற் காட்சியளித்து நின்ற அபவாதம் என்னை என்றும் பற்றி நிற்குமே. அப்பா, அப்பா, யான் என் செய்வேன்.

(சுரசை பின் தொடரச் சுக்கிராச்சாரியார் வருகிருர்)

சுக்கி : தேவயாணி, என் செல்வமே, உனக்கென்னம்மா நேர்ந்தது ? நீராடச் சென்ற நீ நீண்ட பொழுதாகியும் மனைக்கு மீண்டிலேயே எனத் தேடி வரும்போது, சுரசையை வழியிற் சந்தித்து, விபரம் அறிந்தேனம்மா. தெய்வத்தினருளால் உயிர் மீட்கப் பெற்ற நீ ஏனம்மா மனைக்கு வராதிருக்கின்ருய். எழுந்திரு வா. மனைக்குச் செல்வோம்

தேவ : (திரும்பி) அப்பா, யான் யாருமற்றவள், அநாதை. அதுமட்டுமா, மதிப்பிற் குறைந்து மானமிழந்து வதங்கி நிற்கிறேன். எனக்கேனப்பா, மனையும் நகரமும் ? இந்த வனமே போதுமப்பா.

சுக்கி : பேதைப் பெண்ணே, நீயா, அநாதை ? நீயா ஆருமற்றவள். தேவரும் அசுரரும் போற்றத் திசையெல்லாம் புகழ் பெருக்கி வாழும் சுக்கிரனின் பெண்ணு யாருமற்றவளாகி நிற்கிருள். அஃதெப்படியம்மா முடியும் ?

தேவ : அப்பா, யான் அநாதையல்லா விட்டால், அந்தச் சன்மிஷ்டையால் வாயில் வந்தபடியெல்லாம் இகழப் படுவேஞ ? பாழுங் கிணற்றிலே உயிர் பதைக்க வீழ்த்தப்பட்டுப் பரிதவிப்பேஞ ? புவிவேந்தன் ஒருவனுல் உயிர் காக்கப்பெற்றுப் புனித நிலை கெட்டுப் புலம்புவேஞ ? எந்தையே, உங்கள் பெருமை, கீர்த்தி, மகிமை எல்லாமே என்னேடு சேர்த்துக் கிணற்றுள் வீழ்த்தப்பட்டு விட்டன. இனி உங்களுக்கும் எனக்குமுள்ள வாழ்வுதான் என்னப்பா ?

சுக்கி : தேவயாணி, செந்தண்மையே நிறைவாயமைந்த அந்தண குலத்தவர் நாம். சின்னஞ் சிறியவளாகிய சன்மிஷ்டை செய்த தவற்றினைப் பொருள் செய்யாது பொறுத்துக் கொள்ளம்மா. எங்கள் குலப்பெருமை அதனுலேதான் நிலைநிற்குமம்மா. வா, மனைக்குச் செல்வோம்.

தேவ : அப்பா. யான் இனி மனைக்கு வரமாட்டேன். அந்தக் கொடியவள் வாழும் நகரத்துள்ளே காலடி எடுத்து வைக்கமாட்டேன். விடப்பன்ம வேந்தன் இரங்கி நல்கும் பொருள் கொண்டு வாழ்வு நடாத்துகிறோமாம் நாம். அவ்வேந்தனின் இரக்கம் இல்லாவிட்டால் எம்மால் வாழ முடியாதா என்பதை நான் பார்க்கவேண்டும் அப்பா. பாய்ந்து வரும் நீரோட்டம், பாறையின் கனிவை நோக்கிக் காத்திரும்பதில்லை. அதை விலக்கி வேற்றுவழி யமைத்தும், வேண்டுமானால் அதனை உருட்டித் தள்ளிக் கொண்டுந் தான் தன் வழியை அமைத்துச் செல்கிறது.

சுக்கி : மகளே, அறியாச் சிறு பெண் சன்மிஷ்டை கூறிய இகழ்ச்சிக்காக, எனது உத்தம சீடனும், நாட்டின் நல்லரசனுமாகிய விடப்பன்மனை நாம் வெறுக்கலாகுமா அம்மா? உன் மனத்திலே வைரத்தை ஏற்றாதே தேவயாணி.

தேவ : இல்லையப்பா. நான் வருதல் இயலாது. நன்றி கெட்ட அசுரர் வாழும் நகருக்கு நீங்களுமே போதல் வேண்டாம். குருவின் ஆணையை மிஞ்சி அரச அதிகாரம் செல்லாதென்பதைக் கொடியவள் சன்மிஷ்டை உணர வேண்டும்.

சுக்கி : மகளே, கொடுமையான செயல்களில் உள்ளம் நிலைக்க நேருமேல் அது நினைப்பவனையே அழிக்கும் அம்மா?

தேவ : அப்பா, இதோ, என் மேனியைப் பாருங்கள். எத்தனை காயங்கள். என் ஆடையைப் பாருங்கள். சேறும் நீரும் கலந்து, காணப்படும் காட்சிகள். இவை ஏன் நேர்ந்தன? இவற்றை ஏன் தேவயாணி பெற்றாள்? இவையெல்லாம் உங்கள் திருமகளுக்கு நேர வேண்டுமா? என்னைப்பார்த்து உங்கள் உள்ளம் கொதிக்கவில்லையா? போங்கள் தருப்பைக் கட்

டையும் பஞ்சாங்கத்தையும் கொண்டு அந்த விடப் பன்மன் சபைக்குச் செல்லுங்கள். பாழுங் கிணற்றிலே தள்ளி வீழ்த்திய பகையாளியைப் பணிந்து நில் என்று கூறி நிற்பவரும் ஒரு தந்தையா? நான் இந்தக் காட்டிலே எங்காவது செல்வேன்; மனேக்கு வரேன். (போகிருள்)

சுக்கி : மகளே, தேவயாணி, வேண்டாம். நீ எங்கேயும் போக வேண்டாம். நாம் இங்கேயே இருப்போம் இக் காட்டகத்தே எமக்கு வாழ வழியில்லாமற் போகவில்லே. அழாதே. எல்லாம் உன் விருப்பப் படியே நடக்கும். அம்மா செல். சென்று உன் உடம்பைத் தூய்மை செய்து வா.
சுரசை, நீ மனேக்குச் சென்று தேவயாணிக்கு ஆடை அணிகளே எடுத்துவா. நாம் இனி இங்கேயே வாழ்வோம். எமது செய்திகளே அவசியம் நேர்ந் தாலன்றி யாரிடமும் சொல்லாதே. செல்.

சுரசை : அங்ஙனமே செய்கிறேன் குருதேவா (செல்கிருள்)

காட்சி 2

இடம் : அரண்மனை.

காலம் : காலை.

பாத்திரம்: விடப்பன்மன், மந்திரிகள், ஒற்றர் தலைவன் நிகும்பன், சுரசை.

நிகழ்ச்சி : மந்திரிகள் இருக்க விடப்பன்மன் கொலுமண்டபத்துக்கு வருகிறான்.

அமை 1: தைத்திரியர் குலத் தலைவர் வாழ்க.

அமை 2: தானவகுலப்போரேறு வாழ்க.

அமை3 : வீரத்தலைவர் விடப்பன்மர் வாழ்க.

விட : அனைவரும் அமர்க.

காவல: வெற்றிவேந்தர் வாழ்க. ஒற்றர் தலைவர் நிகும்பன் வருகிறார்.

விட ! ஆ அப்படியா. உடனே வரச் சொல்.

நிகும் : தானவகுலாதிபருக்கு வெற்றி பெருகுக. ஒற்றர் தலைவன் நிகும்பன் வணங்குகிறேன்.

விட : ஆம். நிகும்பா, உனக்கிடப்பட்ட பணி யாது ?

நிகும் : தேவேந்திரன் செய்திகளைக் கண்காணித்து வர வேண்டுமென்பது எனக்கிடப்பட்ட பணி பிரபு.

அமை1 : ஆம், அரசே, வியாழபகவானுகிய தேவகுரு புத்திரன் கஜன் எங்கள் சுக்கிராச்சாரியாரிடம் வந்து சஞ்சீவி மந்திரத்தைக் கற்று எம்மையும் வஞ்சித்துச் சென்று விட்டபின் தேவலோக நிகழ்ச்சிகளிற் கருத்தா யிருக்குமாறு நிகும்பனுக்குக் கட்டளையிட்டிருந் தோம் பிரபு.

விடப் : ஆமாம், அமைச்சரே, அற்பப் புல்லிலே, ஆடற் களிறு தடுக்கி வீழ்ந்தது போலாயிற்று எம் ஆண்மை. அந்தக் கஜன் எமது குருவிடம் மந்திரோபதேசம் பெருமல் தடுக்க எம்மால் முடிய வில்லையே.

அமை 2: மகாப்பிரபு. கஜனை நாம் எத்தனையோ முறை வெட்டிக் கொன்ருேம். அத்தனை முறைகளிலும் அவன் எமது குருமூர்த்தியின் சஞ்சீவி மந்திரத்தால் உயிர் பெற்றெழுந்து விட்டான்.

விடப் : கழிந்துபோன நிகழ்ச்சி நமக்கேன் ? அவை போகட்டும், நிகும்பா உன் நிகழ்ச்சியைச் சொல்.

நிகும் : வேந்தர் வாழ்க. கஜன் எங்கள் குருவிடம் மந்தி ரோபதேசம் பெற்றதும் நேரே தேவேந்திரனிடம் சென்ருன். தான் மந்திரம் பயின்றதை அவனுக்குச் சொன்னுன். எமக்கு அஞ்சி ஒடுங்கிக் கிடந்த இந்திரன் உடனே கஜனைக் கட்டிக்கொண்டு பெரு மகிழ்ச்சி கொண்டாடினுன். சஞ்சீவி மந்திர மொன்றே எமக்குப் பலமாக இருந்ததென்றும், இனி எங்களை அழித்து வெல்லுதல் தனக்கு எளிதென்றும் கூறி ஆரவாரித்தான். எம்மோடு போரிடுதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டிருக் கிருன் பிரபு.

விடப் : என்ன ? தேவேந்திரன் எம்மோடு போரிட ஆயத்தம் செய்கிருனு ? பளபளா. நன்று, நன்று. முருகு முறிய அடி பெற்ருேடியதை மறந்து விட்டாளு ? அமைச்சரே போர் ஆயத்தங்களைத் துரிதப்படுத்துக. ஆமாம், எங்கள் குருதேவரைக் காணும். எங்கே அவர் ? சில நாட்களாகவே அவர் சபைக்கும் வரவில்லை. அமைச்சரே அவர் எங்கே ?

அமை 3: வேந்தர் வாழ்க. குருதேவர் அவர் மனையிலே இல்லை. பல நாட்கள் யாரும் வாசம் செய்யாத இடம் போல அவர் மனை காட்சியளிக்கின்றதரசே. பெரியோர் செயலிலே தீவிர விசாரணை ஆகாதென்ற கருத்தால் நான் அது பற்றிப் பொருள் செய்திலேன்.

விடப் : ஆமாம் அது தக்கதே. எமது குருதேவர் எங்கள் வாழ்வன்றி வேறெதையுங் கருதாதவர் ஆதலால் எமது ஆக்கங் கருதி யாகாதிகள் புரியும் பொருட்டு வேறெங்காவது சென்றிருப்பாரோ ? ஆனுல் எதனையும் எனக் குரைத்தன்றிச் செய்யமாட்டாரே. நிகும்பா, எங்கள் குருதேவரின் செய்திகளை உடனே அறிந்துவா. செல்.

நிகும் : உத்தரவு. (போகிருன்)

அமை : பிரபு ஒரு விண்ணப்பம். நாள் தவறினுலும் தம் வருகை தவருத எமது குருநாதர் சில நாள்களாக இங்கில்லாதிருப்பது சிந்திக்க வேண்டிய தொன்ருகும். வேந்தர் கூட அவர் செய்தியை அறியாதிருப்பது கொண்டு நாம் குருதேவருக்கு எம்மை அறியாமலே ஏதோ அபசாரம் செய்து விட்டோமோ என எண்ணத் தோன்றுகிறது பிரபு.

விடப் : என்ன? அப்படியும் இருக்குமா? இல்லை. அவ்வாறு நிகழ்ந்திருக்க முடியாது.

நிகும் : (உள்ளேவந்து) வேந்தர் பெருமான் வாழ்க. இதோ வேந்தர் புதல்வியாரின் தாதி சுரசை நிற்கிறாள். எங்கள் குருதேவர் தொடர்பான செய்திகளைத் தான் அறிவாள் எனக் கூறுகிறாள் அரசே.

விடப் : யார் ? சுரசையா. பெண்ணே, எங்கள் குருதேவர் பற்றி நீ என்ன அறிவாய் ? விரைந்து சொல்.

சுரசை : மகாமன்னர் வாழ்க. பிரபு அன்றொருநாள் அரச குமாரியாரும் குருமகளாரும் யாங்களும் நீராடச் சென்றோம். நீராடி வந்து மாற்றுடையணியும் போது வேந்தர் புதல்வியார் தேவயாணியம்மை யாருடைய ஆடையை எடுத்துத் தரித்து விட்டார்கள். அதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதனால் கொதித்த சோமகளார் குரு புத்திரியாரைக் கிணறொன்றிலே வீழ்த்தி விட்டார் அரசே.

விடப் : யார் சன்மிஷ்டையா ? என் புதல்வியா இது செய்தாள்? அந்தோ மேல் நிகழ்ந்ததை விரைந்து சொல் சுரசை.

சுரசை : தேவயாணியம்மையார் யாரோ ஒருவரால் இறவாது காப்பாற்றப்பட்டார் பிரபு. இவ்விபரங்களை அறிந்த குருதேவர் தம் புதல்வியாரோடு சென்று கான கத்தே ஓர் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வரு கிறார் வேந்தே குருமகளார் நகர்க்கு வர மறுத் தமையாற் குருதேவர் இங்ஙனம் செய்ய நேர்ந்தது பிரபு.

விடப் : ஆ. நகரத்திலே அரசரிலும் மேலான சுகத்துடன் வாழ்ந்த குருதேவர் கானகத்திலே தங்கியிருக்க நேர்ந்ததா? அவர் செல்வப் புதல்வியாருக்கு மனவைரம் ஏற்படுமாறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்து விட்டனவா ? அந்தோ எமது குலத்தை வாழ் விக்கும் குருதேவர் எம்மை அலட்சியம் செய்வரேல் எமக்கு வாழ்வுண்டா? வளமுண்டா? அமைச்சரே நீர் ஊகித்துரைத்தவை உண்மையாயின. இதோ செல்கிறேன். குருதேவர் கழல் பணிந்து அவரை அழைத்து வருகிறேன். சுரசை நீ வழிகாட்டி முன் செல்லவா.

காட்சி 3

இடம் : வனத்திலோர் ஆச்சிரமம்.

பாத்திரம் : சுக்கிரர், தேவயாணி, விடப்பன்மன், சுரசை.

நிகழ்ச்சி : சுக்கிராச்சாரியார் ஓர் ஏட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

சுக் : (திரும்பி) தேவயாணி, மகளே.

தேவ ; இதோ வருகிறேன் அப்பா, நான் வருவது உங்களுக்கு எப்படியப்பா தெரிந்தது ?

சுக் : நீண்ட நேரமாகக் காணவில்லையே என எண்ணி, அழைத்துப் பார்ப்போம் என அழைத்தேன். யான் அழைந்த வேளையும் நீ வந்துகொண்டிருந்த வேளையும் ஒன்றாக அமைந்தமையினால், நீ ஆச்சரியப் படும்படியாயிற்று. இவ்வளவு நேரமாக எங்கே யம்மா போயிருந்தாய் ?

தேவ : நதி தீரத்திற்குப் போயிருந்தேன் அப்பா. விரை வாக வந்துவிடலாமென்றால் வர முடிந்தாற்றானே.

சுக் : ஏனம்மா, அப்படி என்ன விசேடம் அங்கு இருந்து விட்டது.

தேவ : விசேடமா? அசைந்தாடும் மலர்ச் செடிகளெல்லாம் என்னை அருகே வாவென்றழைக்கின்றன. அவைகளிடம் சென்றால் பறந்தோடும் பைங்கிளிகளெல்லாம் யான் தம்மிடம் வரவில்லையே யென்று பரிந்தழைக்கின்றன. மிரண்டோடும் மான்பிணைகளெல்லாம் திரண்டு வந்து தேவயாணி, வரமாட்டாயா? குதித்தாடிக் கும்மியடிப்பதை எமக்குப் பயிற்றி விடமாட்டாயா? என்று சூழ்ந்து நின்று நிமிர்ந்து நோக்கிக் கெஞ்சுகின்றன. அவைகளையெல்லாம் பிரிந்து வருவதென்றால் எவ்வளவு சிரமமாய் இருக்கிறது தெரியுமா அப்பா?

சுக் : அப்படியா? இப்பொழுது எப்படி நீ அவைகளைப் பிரிந்து வந்துவிட்டாய்

தேவ : அவைகளுக்கு நான் சொல்லிவிட்டுத்தான் வந்தேனப்பா. கிளிகளே, பிணைகளே, உங்கள் கூட்டுறவாற் கிடைக்கும் இன்பத்தைப் பற்றி யாதொன்றும் உணராத கிழவர் ஒருவர் இருக்கிறார். அவர் தான் என் அப்பா. நகரத்தின் ஆரவாரங்கள் தாம் அவருக்குப் பிடிக்கும். அவர் என்னைத் தேடுவார். நான் போய்வருகிறேன் என்று சொன்ன பிறகுதான் அவை மனமிரங்கி எனக்கு அநுமதி தந்தன அப்பா. உடனே ஓடோடி வந்து விட்டேன்.

சுக் : ஆஹா, என்பெண் இன்று சிரேஷ்டமான கவியாகி விட்டாள். கானகமே நீ வாழ்க. கலங்கி நிற்பார் யாவரையும் கவலை போக்கி ஆதரித்துக் களிப்பூட்டுஞ் சோலைகளே, நதி தீரமே நீவிர் வாழ்க.

சுரசை : (வந்து) குருமகாதேவர் திருவடி வாழ்க. வேந்தர் பெருமான் விடப்பன்மர் வந்து கொண்டிருக்கிறார்.

சுக் : வேந்தரா? வரட்டும்.

(தேவயாணி உள்ளே சென்று விடுகிறாள்)

விடப் : (ஓடிவந்து) குருதேவா க்ஷமிக்க வேண்டும். பெருமானே, யாதொன்றும் அறியாத ஏழையேனைத் தவிக்க விட்டு, நீங்கள் கானக வாசம் புரிதல் தகுமா ? பேதையேன் செய்த அபசாரந்தான் என்ன ? மகாத்மாவாகிய உங்கள் சமுகமில்லாமல் என் நகரம், என் கொலுமண்டபம் எல்லாம் பாழாய் விட்டனவே சுவாமி. நாம் செய்த தெல்லாம் பொறுத்து நகருக்கெழுந்தருளுங்கள் குருதேவா.

சுக் : விடப்பன்மா, எழுந்திரு. அரச வாழ்வில் அமர்ந் திருப்பவனுக்கு அகிலம் முழுவதும் பார்வையா யிருக்க வேண்டுமப்பா அஃதின்றியிருந்ததனுல் வந்த கேடுதானப்பா இது.

விடப் : சுவாமீ, சிறுபெண் செய்த செயலினுற் பெரியோர் மனங்குலைவதும் சினங்கொள்வதும் தகுமா ? பெருமானே, சிற்றெறும்பு செய்த துவாரத்தினுலே உயர்ந்தோங்கி நிற்கும் பெருமலைக்கு உந்நதம் குறைந்து விடுமா ?

சுக் : விடப்பன்மா, உன்மகள் செய்த அபசாரம் மிகப் பெரிதப்பா. கல் சிறிதே யானுலும் அது வீழ்வ தனுல் பெரிய குளத்தின் நீரைக் கலக்கிவிடு மென்பதை அறியாயா? வேந்தனே. அன்பு நிறைந்த உன் பரிதாப நிலையைக் கண்டு நாம் இரங்குகிறோம். உன் மீதோ உன் குலத்தின் மீதோ எமக்குச் சிறிதுமே குரோதம் கிடையாது. தான் பேணி வளர்த்த பயன் மரம் வாட்டமுறும்போது வளர்த் தவன் பார்த்துக்கொண்டிருப்பானு?

விடப் : சுவாமி, தெளிந்தேன். உங்கள் கருணையுள்ளம் தமியேனை வெறுத்தொதுக்காதென்பதை உணர் வேன். பெருமானே, சிவிகை மீதமர்ந்து நகரத்துக் கெழுந்தருளுங்கள்.

சுக் : விடப்பன்மா, இன்று ஏற்பட்டுள்ள இந்த நிலை எம்மால் வந்ததன்று. உன் புதல்வி எம் புதல்விக் கிழைத்த கொடுமையால் விளைந்தது. நாம் இரங் குவதனுற் பயனில்லையப்பா. என்மகள் இரங்க வேண்டும். தேவயாணியின் உள்ளங் குளிர வேண்டும். அவளிடமே சென்று வேண்டிக் கொள் ளப்பா. அவள் இரங்கி விட்டால் யாம் நகரத் துக்கு வரத்தடையேயில்லை.

விடப் : அப்படியே செய்கிறேன் சுவாமி. எங்கே குருபுத்தி ரியார்?

சுக் : அம்மா, தேவயாணி, இங்கே வா அம்மா.

தேவ : (வந்து) ஏனப்பா அழைத்தீர்கள்?

விடப் : பெருமாட்டி, விடப்பன்மன் வணங்குகிறுன். தந்தை யாரோடு நகரத்துக் கெழுந்தருளுங்களம்மா. சந்தி ரனும் உதயதாரகையும் இல்லாமல் வானம் பெரு மையுறுதல் எவ்வாறம்மா? நீங்களன்றிப் பாழ டைந்துள்ள என் நகரத்துக்கு வளமூட்ட எழுந்த ருளுங்களம்மா.

தேவ : வேந்தனே, யான் வரமாட்டேன். எந்தையாரையும் உங்களுடனே செல்வதற்கு அநுமதிக்கமாட்டேன். குருவின் உதவியின்றியே வாழ்வும் வளமும் பெருக் குதற்கு நின்மகள் சன்மிஷ்டை இருக்கும் போது நாம் ஏன் அங்கு வருதல் வேண்டும்?

விடப் : குருபுத்திரியார் அங்ஙனம் கூறுதல் தகாது. திருவுள் ளத்திலே கொடுவஞ்சினம் கொள்வது பெருமாட் டியார் குலதர்மம் அல்லவே.

தேவ : ஆமாம். குலதர்மம் நன்கு தெரிந்த நீ உன் மக ளுக்கும் அதனைப் பயிற்ருது விட்டதேன்? குலா சாரம் பேணி நின்று என்னைக் கொடுமைப்படுத்திய உன் மகள் சன்மிஷ்டையினுல் யான் அநுபவித்த

இன்னலை நீ அறிவாயா? வேந்தனே, உன் மகளாற் கிணற்றினுள் வீழ்த்தப்பட்ட யான் இறந்து முடிந்திருப்பேனேல் எந்தையாரின் கோபத் தீயினுல் உன் குலத்தவரும் நீயும் வெந்து நாச மாகியிருப்பீர்களே.குற்றம் புரிந்தார்க்குரிய தண்டம் விதிப்பது அரசநீதி. அதை விசாரித்து முறை செய்யாது, எம் காலடியில் வீழ்ந்து கெஞ்சுகிறுன்யே அரச தர்மம் உணர்ந்தவன் தானு நீ?

விடப் : பெருமாட்டி பொறுத்தருளல் வேண்டும். நாட்டு நிகழ்ச்சிகளிற் கண்ணுயிருந்த யான் என் வீட்டு நிகழ்ச்சிகளிற் கருத்துச் செலுத்தாமை குற்றமே. என் கண்ணைத் திறந்து விட்ட அம்மணீ சொல் லுங்கள். உங்களுக்குற்ற மாசு தீர்த்தற்குரிய பிரா யச்சித்தம் யாது? செய்கிறேன், சொல்லுங்கள் அம்மணீ.

தேவ : விடப்பன்மா, உன்மகள் சன்மிஷடை எனக்குத் தாதியாக வேண்டும். ஆம். அவள் என் அடி மையாய் என் ஏவல் கேட்டு வாழும் பணிப் பெண்ணுய் என்றும் என்னுடன் இருத்தல் வேண்டும்.

சுக் : மகளே, அவ்வளவு கொடுந்தண்டனை ஆகாதம்மா.

விடப் : குருதேவரே, உங்கள் திருமகளார் தீர்ப்பு நீதியானது. அவர் கேள்வி மிகத் தகுதியானது. என் புதல்வி செய்த கொடுமையின் பிராயச்சித்தம் அதுவேதான். நீங்கள் தடை செய்ய வேண்டாம். இதோ யான் வருகிறேன்.

காட்சி 4

இடம் : விடப்பன்மன் அரண்மனே.

பாத்திரம் : விடப்பன்மன், சன்மிஷ்டை, சுரசை.

நிகழ்ச்சி : விடப்பன்மன் அந்தரங்க அறைக்குள் நுழைகிருன்

விட : சுரசை, சன்மிஷ்டையை என் அந்தரங்க அறைக்கு அழைத்துவா.

சுரசை : அப்படியே.

[விடப்பன்மன் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிருன். சன்மிஷ்டை வருகிருள்.]

சன்மி : எந்தையே, சன்மிஷ்டை வணங்குகிறேன். என்னே அழைத்தீர்களாமே.

விட : ஆம், சன்மிஷ்டை. குருமகளார் மனங்கொதிக்க நீ செய்த கொடுமைகளே விசாரணே புரிய அழைத்தேன்.

சன்மி : ஆம், அப்பா. விசாரணே செய்வது அரசர் நீதிதானே.

விட : பெண்ணே, அரசர் நீதியை உணர்ந்த நீ அந்தணர் நீதியும் தெரிந்திருப்பாய்தானே.

சன்மி : ஆம் அப்பா, அறிவேன்.

விட : அறிந்திருந்தால் குருமகளார் கொதிக்க நீ செய்த குற்றம் அறிந்து செய்த குற்றம்தானே.

சன்மி : ஆம், நான் அறியாவிட்டாலும் குருமகள் அதனை எடுத்துக் கூறத் தெரிந்தேன். அதனால் என்ன ? என் குலம் பழிக்கப்பட்டதப்பா எங்கள் அரசர் பழிக்கப்பட்டாரப்பா. அதனைக் கேட்டுக்கொண்டும் யான் வாளாவிருத்தல் முடியுமோ ?

விட : சன்மிஷ்டை, உன்னை விசாரித்து நிற்பவர் உன் தந்தையென்று கொள்ளாதே. தன் குடைநிழற்கீழ் வாழும் உயிர்களனைத்தினதும் சுகதுக்கங்களை விசாரித்தறிந்து துயர் போக்கிச் சுகம் ஆக்கும் புரவலன் என்பதை எண்ணிக்கொண்டு பேசு. குற்றம் புரிபவர் தகவு நோக்கித் தண்டம் புரிந்து தர்மம் காக்கும் கொற்ற வேந்தர் முன் நீ நிற்கிறாய் என்பதை உணாந்து பேசு

சன்மி : ஆம். உணர்ந்தே பேசுகிறேன். அரசே, மனமொத்துப் பழகும் தோழியர், ஒருவர் ஆடையை மற்றவர் மாற்றியணிவது குற்றமா ? அதுவும் தவறுதலாக நேர்ந்தது குற்றமாகக் கொள்ளப் படலாமா ?

விட : சன்மிஷ்டை, குலாசாரம் உணர்ந்தவளென்று உன்னைக் கூறிக்கொண்டு குருமகளார் நின் ஆடையைத் தீண்டமாட்டார் என்பதை யுணராதிருந்தாயே. அது குற்றம். தந்தன்மையை அவர் உணர்த்திக் காட்டிய பிறகும் உன் உயர்வும், அவர் எளிமையும் குறித்து வாதிட்டாயே, அது குற்றம். ஒழுக்கம் பேணும் அந்தண குலத்தாரின் ஏவல் கேட்டு நிற்பான் அரசனும் என்பதை அறிந்தும் உன் அரசின் பெருமையை எடுத்துயர்த்திப் பேசினாயே, அது குற்றம். அவர் செயல்களை இழித்துரைத்தது அதன் மேற் குற்றம்.

சன்மி : அரசே, எந்தையர் வாழ்வு தன் தந்தையார் தந்த வாழ்வு என்னும் போது, என் குலத்தார் தன் காலடிக் கீழ்த் தாழ்வர் என்னும் போது அரச புத்திரியாகிய என் உள்ளம் கொதிக்காதா ? அசுர குலத்தவளாகிய என் உதிரம் துடிக்காதா ?

விட : பெண்ணே, அகந்தை கண்ணை மறைத்ததால் நீ அநீதி புரிந்தாய். குருமகளார் கூறியன யாவும் அவர் நினைத்தால் அவரால் செய்யப்படக் கூடியன என்ற உண்மையை உணர உன் கோபம் உன்னை விடவில்லை. எக்குற்றம் புரியினும் கொலைத் தண்டனை பெறாத பெருங் குலப் பெண்ணணங்கைக் கொன்றொழிக்கத் தூண்டியது உன் கோபம். ஆகவே, மீளவியலாத கொடுங்குற்றம் புரிந்த நீ அதன் தண்டனையையும் அனுபவிக்க வேண்டும்.

சன்மி : வேந்தர் தீர்ப்பு அதுவானால் அதை ஏற்க யான் சித்தமாயிருக்கிறேன்.

விட : சன்மிஷ்டை, கொடுந்தொழிலாற் குருமகளாரைக் கொல்லத் துணிந்த நீ, அவருக்குக் குற்றேவல் செய்யும் பணிப் பெண்ணாதல் வேண்டும்.

சன்மி : அரசே, அப்பா, உங்கள் மகளுக்கு நீங்கள் அளிக்கும் தீர்ப்பா இது?

விட : ஆம், என் மகளானாலும் குற்றத்துக்கேற்ற தண்டமே யான் புரிவேன். மகளே, குருமகளார்க்கு நீ இழைத்த மாசுதீர, நீ அவருக்கு வாழ்நாள் முழுவதும் அடிமையாய்த் தாதியாக இரு. இது அரச கட்டளை.

சன்மி : அப்பா, இது கொடுமை. அருமையாகப் பெற்று வளர்த்த உங்கள் அரும் புதல்வியப்பா யான். அறிந்தோ அறியாமலோ இழைத்த குற்றத்திற்கு இக் கொடுந்தண்டம் விதிக்கலாமா? வாழ்வின்

பங்களை நுகரும் வாயிற்படியில் நின்றுகொண்டிருக்கும் உங்கள் மகள் அவற்றைப் பெறுதலின்றி வாழ்நாள் முழுவதும் அடிமையாக வாழ்வதை நீங்கள் விரும்புகிறீர்களா? எந்தையே, கருணை காட்டுங்கள். அரசர் என்பதை விடுத்துத் தந்தை என்ற நோக்கோடு உங்கள் தீர்ப்பை நோக்குங்களப்பா.

விட : மகளே, என் செல்வமே, என் தீர்ப்பினால் நீ நன்மையையன்றித் தீமையை எய்த மாட்டாய். உன் குற்றத்தினால், குருதேவர் உள்ளங் கொதித்திருக்குமேல் அவர் சாபத்தீ உன்னைச் சுட்டெரித்திருக்குமம்மா. எங்கள் குலத்தை நாசமாக்கி யிருக்குமம்மா. அங்ஙனம் ஏதும் நிகழாமல் உனக்கு உயிர் வாழ்வை வழங்கியுள்ளது என் தீர்ப்பு. ஆதலால் உடனே செல். உன் எஜமானியைப் பணிந்து அவர் வழிப்பட்டொழுகு. அவர் மனங் கனியுமேல் உனக்கு வாழ்வின்பங் கிடைக்கவும் வழி ஏற்படுமம்மா.

சன்மி : அப்பா, அப்பா.

விட : மேலும், மேலும் நின்றிரங்காதே, செல். அதோ உன்னால் செய்யப்பட்ட கொலைத் தொழிலினின்றும் தெய்வ சகாயத்தால் உயிர் பிழைத்த உன் எஜமாட்டி. அவரிடம் செல். அவர் பாதம் பணிந்து ஏவல் கேட்டு வாழ்வதே இனி உன் வாழ்வு. ம் ... ஏன் தயங்குகிறாய் செல்.

காட்சி 5

இடம் : ஒரு சோலை.

பாத்திரம் : தேவயாணி, சன்மிஷ்டை, சுரசை, யயாதி, சுக்கிராச்சாரியார்.

நிகழ்ச்சி : தேவயாணி ஒரு கற்பாறையில் அமர்ந்திருக்கிருள்.

யயா : ஆஹா, அற்புதமான வனம். அதோ, வனத்தின் எழிலை மிகுவிக்க வனதேவதை போல அமர்ந்திருக்கிருளே ஒரு பெண்.

(கிட்ட நெருங்கிப் போய்)

கானக மத்தியிலே தேவரம்பை போலத் தோன்றியமர்ந்திருக்கும் மங்கையே,

தேவ : (திடுக்குற்றுத் திரும்பி) யாரது?

யயா : யான் அத்தினபுரத்துச் சந்திரகுல வேந்தன். என் பெயர் யயாதி. வேட்டமேற்கொண்டு வந்த யான் நீர் வேட்கையுற்றுத் தேடிவந்த போது உன் தரிசனம் கிடைத்தது.

தேவ : ஹா, நீங்களா பிரபு? அடியாள் வணங்குகிறேன். அரசே, நீங்கள் என்னை அறிந்துகொள்ளவில்லையா?

யயா : (உற்று நோக்கி) இல்லைப் பெண்ணே, யானோ பூவுலக வேந்தன், நீவிரோ வேற்றுப்புலப் பெண்கள ளாயிருக்கிறீர்கள். உங்களை யான் எவ்வாறு பெண்ணே, சந்தித்திருக்க முடியும்.

தேவ : வேந்தரே, இவ்வளவுதானா உங்கள் நினைப்பாற்றல்? அரசே, முன்னொருநாள் கானகத்திடையேயிருந்த ஒரு பாழுங் கிணற்றிலேயிருந்து மாளும் நிலையிற் றவித்த ஒரு மங்கையை நீங்கள் காப்பாற்ற வில்லையா.

யயா : ஆம், ஆம், அந்த ......

தேவ : ஆம் அரசே, உயிர் புரந்த தெய்வத்தைத் தரிசித்து உவகைப் பெருக்கில் அழுந்தி நிற்பவள் அந்தப் பெண்தான் அரசே.

யயா : அம்மணி, அந்தணர் குலத்தின் ஆரணங்கே. அவல நிலையிலே அன்று கண்ட உன்னை, இன்று களிப்பு நிலையிலே காணப் பெற்றதனால் யான் பெரிதும் மகிழ்கிறேன்.

தேவ : மகிழ்வதென்ன ? விதியே எம்மைக் கூட்டி வைத்தது பிரபு.

யயா : என்ன ? நீ என்ன சொல்லுகிறாய் ?

சுரசை : அம்மா இதோ நீர்.

தேவ : அரசே, உண்ணுநீர் வேட்டு வந்த நீங்கள் முதலில் அவ்வேட்கையைத் தீருங்கள்.

சன்மி : அம்மா, இதோ நீங்கள் பெரிதும் விரும்பிய நறு மலர்கள். முன்னே பறித்த செடியிலே மலர்கள் இல்லாத காரணத்தால் யான் கானகத்துள் நெடுந் தூரஞ் செல்ல வேண்டியிருந்ததம்மா,

தேவ : அப்படியா, சன்மிஷ்டை மகிழ்ந்தோம். இவ் வேந்தர் எந்தையார் தரிசனத்தை விரும்புகிறார். உடனே சென்று எந்தையாரை அழைத்து வா. சுரசை இம்மலர்களை மாலையாக்குவதிலே உன் கை வண்ணத்தைக் காட்டு பார்ப்போம்.

சுரசை : அப்படியே செய்கின்றேனம்மா.

தேவ : வேந்தர் பெருமானே, அன்று பாழ்ங்கிணற்றிலே பதைபதைத்திறக்க விருந்த என்னுயிர் உங்களாலே காப்பாற்றப்பட்டது. அவ்வுயிரும் அதைத் தாங்கி நிற்கும் யானும் அதனைப் புரந்தவர்க்கேயன்றிப் பிறர்க்குரிமையாதல் எங்ஙனம் ?

யயா : அம்மணி, யான் க்ஷத்திரியன். உயிர்களைப் புரத்தல் என் தொழில் என்றுற் காக்கப்பட்ட உயிரெல்லாம் என் உரிமைப் பொருள்களெனக் கொள்ளப் படுவதாகுமா ?

தேவ : அரசே, அன்று உங்கள் மேனியிற் படிந்த உத்தரீயத்தைப் பற்றிக் கிணற்றினின்றும் வெளியேறினேன். வாழ்வளித்தார் இவர் என்று உங்களையே என் முன்பாகக் கண்டேன். அன்று வாழ்வை உதவக் காட்டிய கருணை இன்றும் அதனையே செய்வதற்குப் பின்னிற்பதேனோ?

சுக் : (நுழைந்து) தேவயாணீ.

தேவ : அப்பா, கிணற்றிலிருந்து என்னை வெளியேற்றி எனக்குயிரளித்த உத்தமர் இவர்தானப்பா. இவர் செய்த நன்றியைப் போற்றவே உங்களை அழைத்தேன்.

யயா : தானவகுலத்தின் தண்ணளிமிக்க குருதேவரே, அத்தினபுரத்தரசன் யயாதி வணங்குகிறேன்.

சுக் : மங்கலமுண்டாவதாக. மன்னனே எழுந்திரு.

தேவ : அப்பா.

சுக் : என்னம்மா.

தேவ : ....

சுக் : என்னம்மா, ஏன் தலை தாழ்ந்து மௌனமாக நிற்கிறாய்.

தேவ : எந்தையே, உயிர்புரந்த உத்தமர் என்ற நம்பிக்கையும் அவர் அளித்த உத்தரீயத்தைத் தீண்டிய உரிமையையும் உடைய காரணத்தால் உள்ளத்திலேயே அவர் உருவத்தை அமர்த்திக்கொண்ட குல மங்கை யொருத்தி மற்றவருக்குரிமையாவதை விரும்பமாட்டாள் என்பதை வேந்தர் உணர எடுத்துக் கூறுங்களப்பா.

சுக் : ஆ, மகளே, உன் எண்ணம் அதுவா? ஆம். பற்றற்ற நிலையில் வாழும் யான் உன் வாழ்வுபற்றிச் சிந்திக்கும் உணர்வை இழந்துவிட்டேன். வேந்தரே, எம் புதல்வியின் குறிப்பு மொழியை நீர் உணர்கிறீரல்லவா? அவள் மனம் விரும்பியவாறே அவளை ஏற்றுக் கொள்வதற்கு உமக்கு யாதுந் தடையுளதோ?

யயா : மகாத்மாவாகிய உங்கள் முன்னிலையிலே வேத தர்மங்களுக்கு மாறிநடக்க வேண்டியேற்படுகிறதே யென அஞ்சுகிறேன் குருதேவரே. இம் மங்கையர் திலகம் அந்தணர் பெருமானுகிய உங்கள் புதல்வி. யானே பூவுலகத்து க்ஷத்திரிய வருணத்தான். உயர் வருணத்துப் பெண்ணைத் தாழ் வருணத்தான் மணக்கலாகாதென்பதன்றோ வேதநெறி.

சுக் : ஆம், ஆம் உண்மையே, ஆனல், எம் புதல்வியின் வாழ்விலே இந்நிலை ஏற்படுதல் வேண்டுமென ஒரு சாபம் நிற்கிறது. பூவுலக மன்னன் உன்னை மணம் புரியக் கடவன் என்பது தேவகுரு புதல்வனல் இவளுக்கிடப்பட்ட சாப மொழி மன்னவா. ஆதலால் தயங்காதே.

யயா : அங்ஙனமாளுல், வேதநெறிக்கோர் வரம்பாக விளங்கும் தேவரீரது ஏவலே அடியேன் ஏற்றுக் கொள்ளுகிறேன் சுவாமி.

சுக் : வேந்தனே, நன்று. தேவயாணி, இதோ உன் விருப்பப்படியே மன்னர் உன்னை ஏற்கச் சித்தமா யிருக்கிருர். நீ அவருடன் சென்று மணவினை கொண்டு மங்கலமாக வாழ்க.

சன்மிஷ்டை, இங்கே வா.

யயாதி மன்னனே, இவள் தேவயாணியின் தாதி. அரசகுமாரியாகிய இவள் ஒரு காரணத்தால் தாதியாயினள். தேவயாணியுடனே வருகின்ற இவளை அரசகுமாரிக்குரிய தகுதி குறையாவண்ணம் பார்த்துக் கொள்வது உன் கடன். ஆனல், இவள் மணவாழ்வின் இன்பம் மாத்திரம் பெற லாகாது.

யயா : பெரியோய். உங்கள் திருவுளப் பாங்கின்படியே நடந்து கொள்வேன்.

சுக் : யாவர்க்கும் எமது வாழ்த்துக்கள்.

காட்சி 6

இடம் : அத்தினபுரத்து நந்தவனம்

பாத்திரம் : யயாதி, சன்மிஷ்டை

நிகழ்ச்சி : சன்மிஷ்டை நந்தவன மத்தியிலுள்ள ஒரு பீடத்தில் அமர்ந்திருக்கின்ருள்.

சன்மி : ஆ, தேவயாணி இன்று அரசி; யயாதி வேந்தரின் அன்புக்குரிய அருமை மனைவி. அரசர் பிரேமையெல்லாந் தன்மேலாக, அவர் குலம் விளக்கும் புதல்வரைப் பெற்றுக் குலவி வாழ்கிருள். ஆனல் யான்? இன்று அடிமை. அந்தோ, இந்நிலை எனக்கெய்துதலாகுமா? அரசியாகத் தோன்றி அடிமையாக நிற்கிறேனே. தெய்வமே வாழ்நாள் முழுவதுமே வேதனைப் பட்டுழலவா யான் பெண்ணுகப் பிறந்தேன் எனக்கு விமோசனம் இல்லையா?

யயா : யாரது? இனிமை குலவும் அந்தப்புரச் சூழலிலே, இன்பம் தவழும் நந்தவனத்து மத்தியிலே துன்ப மிகுதியால் துடித்து நிற்பது யார்?

சன்மி : (திடுக்குற்றுத் திரும்பித் தாழ்குரலிலே) அந்தோ. அரசர். (எழுந்து விரைகிருள்)

யயா : (அதிகாரத்தோடு) செல்லாதே நில்.

சன்மி : (நிலைத்து நின்று திரும்பி வந்து) அரசர் பெருமானே பொறுத்தருளல் வேண்டும். அடியாள் அரசியாரின் பணிப்பெண் சன்மிஷ்டை.

யயா : யார், சன்மிஷ்டை-யா? அனைத்துயிரும் ஆழ்துயிலில் அமிழ்ந்திக் கிடக்கும் அகால நிசி வேளையில் நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

சன்மி : கருணை மிகுந்த காவலரே, இன்பச் சூழலிலே அமர்ந்திருந்து அதனைச் சிறிதேனும் அநுபவிக்க முடியாத பாவியாகித் துன்பச் சுமையைத் தாங்கி நிற்கும் அடியாளுக்கும் தூக்கம் வருமா பிரபு துயில் வராத காரணத்தால் தனிமையை நாடி இங்கு வந்து நிற்கிறேன். வேந்தரது சிந்தனைகளைக் குழப்பிய தமியேனைப் பொறுத்தருளல் வேண்டும்.

யயா : சன்மிஷ்டை, நீ என்ன சொல்கிறாய். துயர் போக்கிச் சுகித்து வாழும் வகையில் என் பிரஜைகளைப் பேணிக் காக்கின்ற எனக்கு என் அரண்மனையிலேயே துயரச் சுமையால் அயர்வுற்று ஒரு ஜீவன் இருப்பதென்றால் ......? பெண்ணே, என் அரசாட்சியின் தகவைச் சோதனை புரிகின்றாயா?

சன்மி : இது சோதனையன்று பிரபு. நெஞ்சை யழுத்தி வருத்தும் வேதனை. வெளியே யார்க்கும் எடுத்துரைக்கப்படாமலும் தீர்க்கும் வழியைக் கண்டறியாமலும் உள்ளே கிடந்து உயிரையும் உருக்கி நிற்கும் பெரு வாதனை அரசே. யான் பாவி. யான் என்ன செய்வேன்.

யயா : பெண்ணே, சன்மிஷ்டை, உன்முன்னே நிற்பவர் வேந்தர் என்பதும் முறையீட்டைக் கேட்டுக் குறைதீர்க்கும் கொற்றமே அவர் வெற்றித்திறமென்பதும் அறியாயா? உன்னை வருத்தும் அருந்துயரை யான் அறிய உணர்த்துவாயாக.

சன்மி : மகா மன்னரே. யான் ஓர் அரச கன்னிகை. ஆனல், இன்றோ பணிப் பெண். அஃதென் சூழ்வினையால் நேர்ந்தது. அடிமையாகிவிட்டால் அப் பெண்ணின் ஆசாபாசங்களும் அழிந்து விடுமா பிரபு என்னுடன் ஆடிப் பயின்று ஒத்த உள்ளத்துடன் வாழ்ந்த தேவயாணிப் பெருமாட்டியார் அரசியாகி, அரும்புதல்வர்களுக்கன்னையாகிப் பெண்ணுகிப் பிறந்த பெரும் பயனை எய்தி நிற்கிருர்கள். அந்தோ, யானே, குற்றேவல் புரிந்து குமைந்து நிற்கிறேன். அரசர் பெருமானே, அடியாள் இன்னல் தீர வழியேதுமின்றி அவலங்கொண்டு நிற்கும் நிலையை நீங்கள் உணர்ந்திலீரா?

யயா : பெண்ணே, உன் நிலையை நீயே சிந்தித்துப்பார். நீயோ தாதியாக இருக்கின்ருய். அரச குமாரியாகிய உன்னைத் தகுதி குறைந்த மணுளனெருவனுக்கு மணம் செய்து வைப்பதும் தகாதே. மங்கையே, நின் மனம் மகிழும் வகையில் யான் யாது செய்யலாம்? உனது உடைந்த உள்ளத்தின் உண்மை உருவத்தை யான் உணர்கிறேன். என் சித்தத்துள் அது புகுந்து மெழுகாய் உருக்குகின்றது. என்னல் செய்யப்படக்கூடியது யாது சொல்?

சன்மி : அரசே, வேதநெறி போற்றும் வேந்தரே, பெண். இல்லறப் பயன் எய்தாதிருப்பாளேற் பாவியாவாள் என்பதன்றோ வேத வாய்மை புதல்வரைப் பயந்து அவர்களால் எய்தும் தாய்மை இன்பம் அநுபவிக்கத் தமியேனுக்கு அநுக்கிரகம் புரியுங்கள் பிரபு

யயா : பெண்ணே, அன்று சுக்கிராச்சாரியர் நின்சார்பாக எனக்கிட்ட பணியை நீ அறியாயா? மணவாழ்வின்பம் நினக்கில்லை என்பதன்றோ அவர் வாய்மொழி. மங்கையே, பெரியோரைப் பிழைத்தலாகிய பெருந்தவறு எனக்செய்தலாமா?

சன்மி : வேந்தரே . மெல்லியலாராகிய பெண்களின் வேண்டு கோளை மறுத்தொதுக்கும் ஆண்பாலார் பாவிகள் என்பதன்றோ வேதக் கொள்கை. பெருநன்மை யாகிய என் வேண்டுகோளைத் தேவரீர் புறக்க ணிப்பது தர்ம விரோதமன்றோ.

யயா : ஆ, தர்ம நியாயம் காட்டி, என்னை வெற்றி கொண்ட பெண்கொடியே, பெண்ணினத்தாரின் இன்னல் துடைத்துப் பேணுதல் ஆணினத்துக்குரிய தர்மம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆம், யான் துணிந்துவிட்டேன். அரசர்க்குரிய அறவழியில் தவறாது நிற்பதே என் கடமையென்பதைத் துணி வுடன் ஏற்கிறேன்.

நீ இன்று முதல் உன் துன்பம் தீர்ந்து வாழ் வாயாக. மனமிசைந்த வாழ்வு பெற்ற மங்கையாய் என் அரசியருள் ஒருத்தியாய் இருப்பாயாக.

சன்மி : சுவாமி, எனக்கு இன்னருள் புரிந்த வள்ளலே, வணக்கம்.

காட்சி 7

இடம் : யயாதி அரண்மனையின் அந்தப்புரம்.

பாத்திரம் : தேவயாணி, சுரசை, யயாதி, சுக்கிரச்சாரியர்.

நிகழ்ச்சி : சன்மிஷ்டை, அரசர் அநுக்கிரகம் பெற்றதை அறிந்த தேவயாணி கோபிக்கிருள்.

தேவ : (கோபத்துடன் உலாவியவாறு அடிக்கடி வாயிலைப் பார்த்தவாறு) இன்னும் காணேமே. அந்தோ. கொடுமை மிக்கவர்கள், வாக்கு மீறுபவர்கள். கொள்கையற்றவர்களோடு வாழ்வதென்பது முடியுமா? இந்தச் சுரசை மிக்க சோம்பேறி. எந்தையாரை அழைத்து வருமாறு அனுப்பி எத்தனை நாழிகையாயிற்று இன்னும் அவள் வரவில்லையே.

யயா : (தான் வருதலை அறிந்து மறுபுறம் திரும்பி நிற்கும் தேவயாணியை நெருங்கி) தேவயாணி.

தேவ : (மௌனம்)

யயா : பட்டமகிஷி கோபங் கொண்டுவிட்டால் பாராளும் வேந்தனின் கதி யாதாகும்?

தேவ : ஏன்? பட்டமகிஷியாதற்குப் பணிப்பெண் ஒருத்தி வாய்த்திருக்கும்போது பாராளும் மன்னற்குக் கவலை தோன்றுமா?

யயா : பெண்ணே, அரசனுவான் தர்ம நெறிக்கு அடங்கியவன்.

தேவ : ஆமாம். பெரியோர் வாக்கை மீறி நடப்பது தான் பாராளும் வேந்தர் பாராட்டும் தர்மம். பணிப் பெண்ணை, அரியணை ஏற்றும் பாசம் மிகுந்திருக்கும் போது அங்குத் தர்ம நெறிதான் வழிகாட்டி நின்றது போலும்...... யயாதி வேந்தரே, இவ்வளவும் நிகழ்ந்த பின்பும் உங்கள் வாழ்விலே தேவயாணி என்ற ஒருத்தியிருப்பதும் நினைவு வந்ததா?

சுக் : மகளே, தேவயாணி ஏன் என்னை அழைப்பித்தாய்? சுரசையிடம் செய்தியைச் சொல்லிவிடுதலாகாதா?

தேவ : அப்பா, என்வாழ்வழிந்து விட்டதப்பா அன்று என் வாழ்வை அழிக்கத்துணிந்த அவளாலேயே இன்றும் என் வாழ்வு குலைந்ததப்பா. யான் இனி இங்கு வாழ மாட்டேன். எந்தையே, யயாதி வேந்தர் இன்று என் பணிப்பெண் சன்மிஷ்டையின் கணவராகிவிட்டாரப்பா.

சுக் : என்ன? சன்மிஷ்டையின் கணவனு யயாதி?

யயா : குருதேவா, க்ஷமிக்க வேண்டும்.

சுக் : யயாதி, அன்று யான் உனக்குரைத்த வாய்மையை மீறிவிட்டாயா? ஆமாம் — உனக்குரிய இளமைப் பருவம் அல்லவா உன்னை என் வாக்கை மீறும்படி செய்தது. வேந்தனே, நீ நரைத்து முதிர்ந்து தள்ளாடும் முதியோனுகுக.

யயா : குருதேவா, கொடிய சாபத்தினுல் தமியேனை நலிய வைத்தல் தகாது வாழ்வின்பம் வேண்டி நின்ற வனிதை சன்மிஷ்டைக்கு அதனை வழங்காதிருத்தல் தர்ம விரோதமாகும் என்ற கொள்கையினுல் யான் தேவரீரைப் பிழைத்தேன். எம்பெருமானே, எளியேன் மீது கருணை காட்டி இரங்குதல் வேண்டும்.

சுக் : வேந்தனே, என் சாபம் தப்பாது. நீ காட்டும் தர்ம நியாயத்தை உணர்ந்தமையினால் யாம் இரங்குகிறோம். என் உரையின்படி உனக்கெய்தும் முதுமையை, நீ விரும்பும் யார்க்காயினும் கொடுத்து, அவர் இளமையை நீ பெற்றுச் சில காலம் வாழ்ந்து பின் அவர்க்குரிய இளமையை அவர்க்களித்து நின் முதுமையைப் பெறும்படி அநுக்கிரகிக்கிறோம். நாம் வருகிறோம்.

தேவ : அப்பா, என் இன்பவாழ்வும் முடிந்தது. என்னையும் அழைத்துச் செல்லுங்களப்பா.

சுக் : அப்படியா? சரி, வா மகளே.

(யயாதி அவர் வழியைப் பார்த்து நின்று பெருமூச்செறிகிறான்.)

★

குருதட்சிணை

[தெல்லிப்பழையில் இலங்கைக் கலைக்கழக நாடகக் குழுவினர் நடத்திய அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் 1969 முதற்பரிசு பெற்ற நாடகம்.]

பாத்திரங்கள்

பயிலவ முனிவர்

உதங்கன்

மித்திரசக்கிய மன்னன்

அந்தண இளைஞன்

தட்சகன் பாம்பு

தெய்வம்

பயிலவர் மனைவி

பயிலவர் மகள்

மித்திரசக்கியன் மனைவி

காட்சி 1

இடம் : பயிலவ முனிவர் ஆச்சிரமம்

காலம் : முற்பகல்

பாத்திரம் : பயிலவர், மனைவி, மகள், உதங்கன்

நிகழ்ச்சி : உதங்கன் விறகுச் சுமையுடன் வருகிறான்.

உதங்கர் : (கால் தள்ளாட) அன்னையே, அப்பா எனக்கொன்றும் தெரியவில்லையே. தலைசுற்றி மயக்கம் வருகிறதே. (விறகுக் கட்டு அவிழ்ந்து சொரிய உதங்கனும் வீழ்கிறான்.)

மகள் : அம்மா, அப்பா இங்கே விரைந்து வாருங்கள். உதங்கர் அண்ணா மயங்கி வீழ்ந்துவிட்டார். (ஓடிவந்து உற்றுப் பார்த்து) ஆ... தலையெல்லாம் உதிரம் வழிகிறதே. (ஓடிப்போய் ஓர் இலையைக் கசக்கிக்கொண்டே வந்து காயத்தின்மேற் சாறு பிழிந்து விடுகிறாள். அன்னை வருகிறார்)

மனைவி : அம்மா, உதங்கனுக்கென்ன? ஐயோ, என் குழந்தைக்கு என்ன வந்துவிட்டது? உதங்கா, மகனே. (உள்ளே போய்) சுவாமி, உதங்கனை வந்து பாருங்கள்.

பயிலவர் : (விரைந்து வந்து) உதங்கன் ஏன் வீழ்ந்து கிடக்கிருன். இவனுக்கென்ன நேர்ந்தது?

மனைவி : எனக்கு யாதும் தெரியாது. மகளின் அவலக் குரல் கேட்டு ஓடிவந்தேன்.

மகள் : (தண்ணீர் கொணர்ந்தபடியே) ஆச்சிரமத்துள் நாம் இருக்கும் போது இவர் குரல் கேட்டது. வெளியே ஓடிவந்தேன். விறகுகள் அவிழ்ந்து சொரிய இவரும் தடாலென்று வீழ்ந்து விட்டாரப்பா. தலையிலே பாருங்களப்பா, ஒரு காயம் இருக்கிறது.

பயிலவர் : ஆமாம் கூரிய விறகு கட்டை ஒன்று மண்டை ஓட்டைக் குத்திக் கிழித்திருக்கிறது.

மகள் : அந்தக் காயத்துக்கு நான் மூலிகையின் இலைச் சாறு பிழிந்து விட்டேனப்பா.

பயிலவர் : மிக நல்ல கருமம் செய்தாயம்மா. சிறிதளவு நீர் கொண்டு வா.

மகள் : இதோ இங்கே இருக்கிறதப்பா. (முனிவர் கையில் நீரை விடுகிருள். முனிவர் உதங்கன் முகத்தில் தெளிக்கிருர்)

மனைவி : சுவாமி, இதோ நீரில் நனைந்த துணி. இதனுல் முகத்தைத் துடைப்பது நல்லது.

பயிலவர் : ஆமாம் (துடைத்தபடியே) உதங்கா, மகனே.

உதங்கன் : (முனகிக்கொண்டு கண் விழித்து) ஆ. தந்தையே, அன்னையே, உதங்கன் வணங்குகிறேன். குருவே, விறகு சுமந்து வந்தபோது என்னை அறியாமலே மயங்கி விழுந்துவிட்டேன். க்ஷமித்தருள வேண்டும் சுவாமி.

பயிலவர் : உதங்கா, நீ யாதொரு குற்றமும் செய்திலை. கூரிய விறகொன்று உன் தலையைக் கிழித்து விட உதிரம் பெருகிற்று. அதிக உதிரக் கழிவும் வெயிலிற் பசியோடு அலைந்த வருத்தமும் உனக்குச் சோர்வைத் தந்து விட்டன. செல். உடம்பைப் புனிதஞ் செய்துவா. இனி உனக்கெதுவும் நேராது. மகள் பிழிந்த மூலிகை இலைச்சாறு உன் காயத்தை முற்றுங் குணப்படுத்தி வீடும். செல். (உதங்கன், மகள் செல்கிறார்கள்)

மனைவி : சுவாமி, உதங்கன் குருகுலவாசம் செய்ய வந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆகா, எமது மகன் போலவே வாத்சல்யம் பெருகச் செய்து உத்தமனாக இந்நாள் வரையும் எமக்குப் பணி புரிந்துகொண்டு வருகிறான்.

பயிலவர் : ஆமாம். உதங்கன் குணத்தினால் மட்டுமன்று கல்வியிலும் மகா பெரியவனாகி விட்டான். பெண்ணே, கற்றுக் கொடுத்த கலைஞானங்களை யெல்லாம் கணப்பொழுதிலே கிரகித்துணர்ந்து வேதவிற்பன்னனாகிவிட்டான். இனி அவன் குருகுல வாசமும் பிரமசரிய விரதமும் வேண்டியதில்லை.

மனைவி : சுவாமி, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? உதங்கன் - எம்மைந்தன் - எம்மை நீங்கிச் செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டதென்று கூறுகிறீர்கள். எம்பெருமானே, அந்தக் காலம் வாராதேயிருக்கக் கூடாதா?

பயிலவர் : பெண்ணே, எப்பொழுதாயினும் அந்தக் காலம் வரத்தானே வேண்டும். பறக்கும் கலையைக் கற்ற பின் தாய்ப்பறவை அக்குஞ்சைத் தன்னுடன் வைத்துக் கொள்வதில்லை. சுடர் விட்டொளிரும் மணியைத் துணியால் பொதிந்து மனைக்குள் பதுக்கி வைப்பது போலாகும், உதங்கனை நாம் இனியும் எம்மோடு வாழப் பணிப்பது.

மனைவி : தெய்வமே, உதங்கன் நலம்பெற்று வாழ அருள் செய்வாயாக.

பயிலவர் : மாதே, நீ நினைப்பது போல் இன்றே உதங்கனை நான் வெளியேற அநுமதிக்கேன். அவன் இல்லற ஆச்சிரமமும் எம்மோடுதான் நிகழப் போகிறது. ஆமாம் உன் பேரக் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பும் உன்னையே சாரப் போகிறது.

மனைவி : பெருமான் உரையிலே புதைந்திருக்கும் மறை பொருள் அடியாளுக்குப் புரிந்திலது.

பயிலவர் : ஆம் புரியும் வண்ணஞ் செய்கிறேன். மாதே மயங்கி வீழ்ந்த உதங்கனுக்குச் சைத்தியோபசாரம் செய்தவர் யார் தெரியுமா? எமது புதல்வி. உதங்கன் என் சிஷ்யனே ஆனாலும் எம் புதல்வியே அவனுடைய இல்லத் துணைவி. விதி அவ்வாறு தான் அமைந்துள்ளது. உதங்கனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கண்டு எமது மகள் பட்ட துன்பமும் பதற்றமுமே அந்த விதியின் அமைப்புக்குச் சான்றுகள்.

மனைவி : பெருமான் திரிகாலமும் உணர்ந்தவர்கள். உங்கள் தீர்க்க திருஷ்டியை யான் எவ்வாறு மறுத்துரைப்பேன்? இதற்கு உதங்கன் உடன்பட வேண்டுமே. வேத ஒழுக்கமும் பிரமசரியமும் சிறிதும் தவறாத வாழ்வினன் ஆயிற்றே.

பயிலவர் : ஆமாம். அதோ அவன் வருகிறான் நிகழ்வதைப் பார்.

உதங் : தந்தையே, அன்னையே, உதங்கன் வணங்குகிறேன்.

மனைவி : நீ நீடுவாழ்க.

பயிலவர் : என் உத்தம மாணவனே, உனக்குச் சர்வ மங்களமும் உண்டாகுக. அப்பா, உதங்கா. உன் குரு குலவாசம் ஒழிந்து விட்டது. முறைப்படி பிரம சரியம் காத்து ஓதவேண்டியன வெல்லாம் ஓதித் தெளிந்துவிட்டாய். ஆதலால் இனி உன் பிரம சரிய நோன்பையுங் கைவிடுக.

உதங் : யாவும் குருதேவரின் அருள்வண்ணத்தால் நிகழ்ந்தவை.

பயிலவர் : மகனே, இனி நீ இல்லற ஆச்சிரமத்தைப் பேணல் வேண்டும்.

உதங் : குருதேவர் ஆணைப்படியே.

பயிலவர் : மாணவனே, இனி நீ எமக்குத் தொண்டு புரிதல் வேண்டாம். நீ மயங்கி வீழ்ந்தபோது பதறி வந்து உபசாரம் புரிந்த எமது புதல்வியே உனக்குரிய இல்லத் துணைவி.

உதங் : சுவாமி, உங்கள் புதல்வியா? ஆ, குருதேவரின் புதல்வி சிஷ்யனுக்குத் தங்கை யென்றல்லவா சாஸ்திரங்கள் கூறுகின்றன. தேவரீரே எமக்குப் போதித்தீர்களே.

பயிலவர் : ஆம். போதித்தோம். உதங்கா விதியின் நியதியை யார்தாம் கடக்க முடியும்? எமது புதல்வியே நின் வாழ்க்கைத் துணையென என்றோ விதிக்கப் பட்டு விட்டதப்பா. அதனை நாம் உணர்கிறோம். ஆதலால் மகனே தயங்காதே.

உதங் : பெருமான் திருவாணைக்கு அடியேன் பணிகிறேன்.

பயிலவர் : மாணவனே மகிழ்ந்தோம் மகளே, இங்கு வா. (மகள் வருகிறாள்) அம்மா, உதங்கன் இனி என் மாணவனல்லன். உன் கணவன். நீவிரிருவரும் வேத ஒழுங்கு வழுவாது இல்லறம் புரிவீர்களாக. அன்னையே நின் மக்களை வாழ்த்துங்கள்.

மனைவி : எனது அரிய செல்வங்களே, நீவிர் நினைத்த பேறுகளை எய்தி நெடுநிலத்து நீடு வாழ்க.

இருவரும் : தந்தையே, அன்னையே, எமக்கு நெறியருளி வாழ்வு தந்த பெருந்தகையீர், சிறியேம் வணங்குகிறோம்.

பயிலவர் : உதங்கா, நீ சிலகாலத்திற்கு எமது ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்து இல்லறம் புரிக.

உதங் : பெருமான் திருவுளப்படியே.

காட்சி 2

இடம் : மித்திரசக்கிய வேந்தன் அரண்மனை.

காலம் : முற்பகல்

பாத்திரம் : அரசன், மனைவி, ஓர் அந்தணன்.

நிகழ்ச்சி : அரசி ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றாள். அரசன் வருகிறான்.

அரசன் : தேவி.

தேவி : பிரபு, அடியாள் வணங்குகிறேன்.

அரசன் : இன்று தேவிக்குப் பிரீதியான ஒரு பொருள் என் கரத்தில் இருக்கிறது.

தேவி : தேவரீருக்குத்தான் தேவர்க்குங் கிட்டாத பொருளெல்லாம் கிட்டுமே. யான் என்ன பொருளை எண்ணிக் கூறுவேன். தேவலோகப் பாரிஜாத மலரா?

அரசன் : (நகைத்து) பாரிஜாதமா? பல காவத தூரத்தில் இருக்கும்போதே தன் பரிமளத்தை எங்கும் வீசி ஒளிரும் மலராயிற்றே அது. அதனை யான் மறைத்து வைத்திருத்தல் இயலுமா?

தேவி : அப்படியானால் ஏதோ அணியாகத்தான் இருத்தல் வேண்டும். கொற்கைத் துறையிற் பெறப்படும் குளிர் முத்தாக இருக்கலாம்.

அரசன் : ஊஹூம். இல்லவே இல்லை

தேவி : அங்ஙனமாஞல் வேறு எதுவாக இருக்கும் ?

அரசன் : என்ன, நீ இதற்குள்ளாகவா மறந்து விட்டாய்? இதோ (இரண்டு தோடுகளை எடுத்துக் காண்பிக்கின்றான். அவை ஒளி வீசுகின்றன.)

தேவி : ஹா, பிரபு மறந்தே போய் விட்டேன். அன்று எமது அதிதியாகத் தங்கிய பெரியவர் எனக்கு வெகுமதியாக அளித்த, நாகலோகத்துச் சீவ ரத்தினங்கள். ஆம் அவற்றை மாற்றுயர்ந்த பொன்னிற் குழையாக்கிப் பதித்து நல்கும்படி வேந்தர் பொற்றொழிலாளரிடம் பணித்ததை நான் மறந்தே போய்விட்டேன். அதை அடியாள் கரத்திலே தாருங்கள் சுவாமி (அரசன் கொடுக்க வாங்கிப் பார்க்கிறாள்) ஆஹா, எவ்வளவு அற்புதமான அணியாக இது செய்யப் பட்டிருக்கிறது.

அரசன் : ஆம் தேவி, மித்திர சக்கிய வேந்தனின் அரண்மனைப் பொற்றொழிலாளர்க்கு நிகரானவர் அகில லோகத்திலுமே இல்லை. அந்தச் சீவரத்தினங்கள் இந்தப் பொன்னிற் பதிந்து எவ்வளவு பிரகாசந் தருகின்றன பார்த்தாயா?

தேவி : ஆம் பிரபு. இதை இப்பொழுதே அணிந்து கொள்ளப் போகிறேன்.

அரசன் : ஆமாம், இந்தத் திவ்விய காதணியைப் பூண்டு வரும் தேவியாரின் அதிரூப சௌந்தர்யத்தில் யான் அமிழ்ந்துதல் வேண்டாமா?

தேவி : அரசே, குலமகளிர் அழகும் அலங்காரமும் அவர் கொழுநர் பொருட்டுத்தானே பிரபு. இதோ நிலையாடியின் முன்னின்று இவற்றை அணிந்து கொண்டு நொடிப்பொழுதில் வருவேன்.

(மீண்டு வருகிறாள்)

அரசன் : ஆஹா, அற்புதமான தெய்வீக அழகு சுடர் கின்றது. தேவி, அஃதிருக்க உணவைச் சித்தஞ் செய். யாராவது அதிதிகள் வந்துளரா என யான் வெளியே சென்று பார்த்து அழைத்து வருகிறேன்.

தேவி : அப்படியே செய்யுங்கள். யான் இதோ யாவுஞ் சித்தஞ் செய்கிறேன்.

அரசன் : அந்தண இளவலே இவ்வழியே வருக. (அரசன் அதிதியை அழைத்து வரக்கண்ட அரசி ஓடிச் சென்று)

தேவி : அதிதியாக வந்த அந்தண அடிகளே வணக்கம்.

அந்தண : அரச தம்பதிகளுக்குப் பீடும் புகழும் பெருகுக. (உபசரித்து அமுது படைக்கிறுர்கள். உண்ணும் பொழுது பாதியில் நிறுத்தி விட்டுத் திடீரென் றெழுந்து) அரசனே, இஃதென்ன? நீ படைத்த அன்னத்திலே தலைமயிர். அதமனே, அசுசியாகிய அன்னம் படைத்து என்னைப் புசிக்கச் செய்தாயே. தினமும் ஒருவேளையே புசிக்கின்ற விரதமுடைய நான் இன்று பசித்திருக்கவேண்டி நேர்ந்ததே. சண்டாளனே, பசிக்கொடுமையால் யான் வருந்தும்படி செய்த நீ நரமாமிசம் புசிக்கும் அரக்கனுகிக் கானகத்தே அலைந்து திரிவாயாக.

அரசன் : என்ன? யாதொரு குற்றமுமறியாத என்னை அரக்கனுகச் சபித்த அந்தணரே, நீரும் விவாகமே இல்லாது வாழ்வின்பமின்றி எங்கும் அலைந்து திரிக.

தேவி : அந்தோ, அரசே யாது கூறி விட்டீர்கள், அதிதியாக வந்தவருக்கு அநீதியான சாபங் கொடுக்கலாமா?

செந்தண்மையே அணியாகவுடைய அந்தணப் பெருமானே யாம் அறியா வகையில் நேர்ந்த, இந்த அபசாரத்தைப் பொறுத்தருளல் வேண்டும். சுவாமி, அடியாள் பொருட்டு மனமிரங்கி என் பதியின் சாபத்தை மாற்றியருளல் வேண்டும்.

அந்தண : அம்மணி என் சாப மொழி தப்பாது அரசன் அநுபவிக்கும் இந்தச் சாபம், உங்கள் உண்மை ஒழுக்கத்தாலும் உதார குணத்தினாலும் நீங்கும்.

அரசன் : சுவாமி சாபவிமோசனம் நல்கிய அருளுருவே, அடியேன் மிஞ்சிப் புகன்ற சாபத்துக்கு விமோசனம் நல்கும் ஆற்றல் இல்லாதவனென்பதை நீங்கள் அறிவீர்களன்றோ. தமியேனைப் பொறுத் தருள்க.

அந்தண : ஆம். யாவும் பொறுத்தோம். நாம் வருகிறோம்.

அரசன் : ஹஹ ஹா ... நான் அரக்கன். நான் அரக்கன்...

காட்சி 3

இடம் : பயிலவர் ஆச்சிரமம்.

காலம் : முற்பகல்.

பாத்திரம் : உதங்கன், பயிலவர், குருபத்தினி.

நிகழ்ச்சி : பயிலவர் மோனங் கலைந்திருக்கின்றார். உதங்கன் செல்கின்றான்.

உதங் : குருதேவரே, உதங்கன் வணங்குகிறேன்.

பயிலவர் : ஆ சிஷ்யா, நீ சர்வ மங்களமும் பெற்று வாழ்க. ஆமாம் உன் பணிவும் வணக்கமும் நீ எம்மிடம் ஏதோ பெறவேண்டி வந்து நிற்கின்றாய் என்பதை உணர்த்துகின்றன. தயங்காமல் கூறுவாயாக.

உதங் : சுவாமி, அடியேன் உள்ளத்தில் நீண்ட நாளாக வளர்த்து வருகின்ற ஓர் விருப்பத்தைத் தேவரீர் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன்.

பயிலவர் : ஆமாம். அதனைக் கேட்க நாம் சித்தமாயிருக்கிறோம்.

உதங் : எம்பெருமானே, ஏழையேனது இந்த உடம்பு உங்கள் போஷணையில் வளர்ந்தது. தமியேன் கற்ற கல்வி தேவரீர் தந்ததே என் வாழ்வு எல்லாமே எம்பெருமானது அருட்கனிவால் மலர்ந்தவை.

பயிலவர் : அதனால் இப்பொழுது என்னப்பா வந்துவிட்டது. உன் நீண்ட நாளைய அபிலாஷை யாது? விரைவாகச் சொல் மகனே.

உதங் : பெருமானே, இவ்வாறெல்லாம் நலம் பெருக்கிய தேவரீருக்குத் தட்சிணையாக அடியேன் யாதுந் தந்திலேனே. சுவாமி, தேவரீருக்கு விருப்பமான தட்சிணை யாதென்பதைக் கருணை கூர்ந்து திருவாய் மலர்ந்தருள வேண்டும்.

பயிலவர் : (நகைத்து) மகனே, நீ எனக்குச் செய்த பணிவிடைகள் போதாவா. அவற்றின் மேலும் ஒரு தட்சணையா? வேண்டாம் மகனே, அந்த விருப்பத்தை நின் மனத்தினின்றும் அகற்றிடு.

உதங் : சுவாமி, கல்வி கற்பித்த ஆசாரியனுக்குத் தட்சிணை கொடுத்து அவனருள் பெற்றுச் செல்ல வேண்டியது மாணவன் கடமை என்பதைத் தேவரீருக்கு அடியேன் எடுத்துக் கூறுவதா? பெருமானே, அந்த மரபு தவறுதிருக்கும் வகையில் தமியேனைக் காத்தருளுங்கள். பெருமான் விரும்பும் பொருள் யாதெனத் திருவாய் மலர்ந்தருளுங்கள்.

பயிலவர் : உதங்கா, யாவுந் தரவல்ல பரிபூரணப் பொருள் எமது இதயம் நிறைந்து வீற்றிருக்கும் போது விருப்பமான பொருள் என எமக்கு எதுவும் உண்டா? பற்றற்ற எமது நிலையை நீ உணரவில்லையா? எமக்கு யாதுமே வேண்டாம். இதனால் உன் மனம் திருப்தியடையாவிட்டால், அன்னையாரிடம் செல். அன்னையாகிய எமது பத்தினி. யாதும் விரும்பினால் அதனைக் கொணர்ந்து கொடு. அதுவே நீ எமக்கு நல்கும் தட்சணையென யாம் ஏற்றுக் கொள்வோம். அதோ அன்னையும் வருகிறார். அவரிடம் கேள். யாம் தவநிலைக்குச் செல்கிறோம்.

உதங் : சுவாமி குருதேவரே, தேவரீர் பணித்தவாறே செய்கிறேன்.

அன்னையே, உதங்கன் நமஸ்கரிக்கிறேன்.

குருபத் : குழந்தாய் நீ மகானாகி வாழ்க.

உதங் : அன்னையே, என்னை உருவாக்கி, வாழ்வு நெறியும் அமைத்துதவி வாழ்த்தி நிற்கின்ற உங்கள் நன்றிச் சுமை என்னை மிக நலிய வைக்கிறது. இதற்கான எவ்வகைக் கைம்மாற்றினை யான் செய்வேன். தட்சணையாக எதனையும் பெற்றளிக்க அவாவிய என் விருப்பினை எந்தையார் தகைந்து விட்டார்கள். உங்கள் விருப்பின்படி செய்கவெனப் பணித்தார்கள் அம்மா உங்களுக்கு உகந்த பொருள் எது கூறுங்கள்? அதனை யான் பெற்றுவந்து உங்கள் பாதகாணிக்கை யாக்கி என் மனோபீஷ்டத்தை நிவர்த்தி செய்து கொள் கிறேன்.

குருபத் : தெய்வமே, உதங்கா, நீ என்ன சொல்கிறாய்? உன் காணிக்கையைப் பெறவேண்டுமென்றா உன்னை வளர்த்தெடுத்தோம். நீ மைந்தனாக இருந்து பன்னீராண்டுகள் புரிந்த பணிவிடை போதாதா? அதன் மேலும் ஒரு காணிக்கையா?

உதங் : அம்மா, மறுத்துரையாதீர்கள். மைந்தர் நலிவுகளை அன்னையார் அறிவர் எனக் கூறுவார்கள். குரு தட்சிணை கொடுக்கவில்லையேயென என் நெஞ்சு படும் இன்னலை யான் பொறுத்தலியலாதம்மா. சொல்லுங்கள். நீங்கள் விரும்பிய உத்தமமான பொருளொன்றைக் குறிப்பிடுங்கள். கருணை புரியுங்கள் அன்னையே.

குருபத் : அப்பா மகனே, யான் எது சொன்னாலும் நீ மனத் திருப்தி யடையமாட்டாய் போலும். ஆதலால் சொல்கிறேன். மித்திரசக்கியன் என்ற அரசன் மனைவியின் காதிலே நாகலோகத்துச் சீவரத்தினக்குழைகள் இருக்கின்றனவாம். அந்தக் காதணிகளை நான் பெற்றுக்கொள்ள விரும்பினேன். மிகப் பெருமையும் மகிமையும் வாய்ந்தவை அவை. உன்னால் அவற்றைப் பெற்றுத் தர முடியுமானால் முயன்றுபார். இதுவே என் விருப்பம்.

உதங் : ஆஹா, அன்னையார் தம் விருப்பத்தை உரைத்து விட்டார். நான் தன்யனானேன். அம்மா இப்பொழுதே நான் பிரயாணமாகிறேன். ஒரு திங்களில் அக்காதணிகளைப் பெற்றுவந்து தாயாரின் பாதங்களில் காணிக்கையாக வைத்துப் பணிகிறேன். அநுமதி தாருங்களம்மா.

குருபத் : மைந்தா, நீ நலமே சென்றுவா உன் முயற்சிக்கெதிராகத் தோன்றும் இன்னல்கள் எல்லாம் குருதேவரின் திருவருளால் நீங்கக் கடவன. ஜெயம் பெற்று வருவாயாக.

(உதங்கன் பணிந்து செல்கிறான்)

காட்சி 4

இடம் : வனப்பிரதேசம்.

காலம் : காலை.

பாத்திரம் : மித்திரசக்கியன், மனைவி, உதங்கன், ஒருமனிதன்

நிகழ்ச்சி : அரசன் ஓர் அரக்கனாகி ஒரு குன்றின் மீதில் இருக்கிறான். மனைவி துக்கமே உருவாய் நிற்கிறாள்.

அரசன் : ஹஹ்ஹஹ்ஹா...... இன்று என் பசி வேளை தப்பிவிட்டது. ஒரு மனிதப் பயல் கூட இவ் வழியில் வரவில்லையே.

தேவி : பிரபு, உலகம் புகழும் பேரரசனாக் விளங்கிய நீங்கள் இவ்வாறு சிந்தை கலங்கிப் பேசலாமா? இதோ உங்கள் பசி தீர்க்க உகந்த அன்னம் கறிகளோடு சுவையான தித்திப்புப் பண்டங்களும் அரண்மனையிலிருந்து எடுப்பித்திருக்கிறேன். இவற்றை அருந்திப் பசியைத் தணியுங்கள் சுவாமி.

அரசன் : (நகைத்து) அசட்டுப்பெண்ணே, நீ என்ன உலகம் அறியாதவளா? இன்னும் நீ என்னை அரசன் என்று கருதுகிறுயே. நான் அரக்கன். நீ தரும் அன்னத்தைப் புசிப்பதற்காகவ இந்தக் கோரப் பற்களும் கொடிய நகங்களும் நான் கொண்டிருக்கிறேன். நான் மனிதனைத்தான் உண்பேன் ஆ...... அதோ ஒரு மனிதன். ஹஹ்ஹா...... அடேய் நில்.

மனிதன் : ஐயோ, அரக்கன். இறங்கி ஓடி வருகிறுன். கடவுளே, தெய்வமே. (ஓடுகிறுன்)

அரசன் : (அரக்கனுகிய அரசன் அவனைத் தொடர்ந்தோட மனைவி தடுக்கிறுள்) பெண்ணே, என்னைத் தடுக்காதே. உணவைத் தேடிப் பின்தொடரும் என்னைத் தடுத்துத் தரும விரோதம் செய்யாதே.

தேவி : அங்கே செல்பவன் மனிதன் சுவாமி அவன் உங்கள் உணவல்லன். அவனை வீணே கொன்று கொடும் கொலைப் பழிக்காளாகாதீர்கள்.

அரசன் : எட்ட நில். என் பசியை நீ அறிவாயா? (மனிதனைத் தொடர்ந்து ஓடுகிறுன். மனைவியும் ஓடுகிறுள். மனிதனை அடித்து வீழ்த்தி இழுத்துச் சென்று புசித்து விட்டு அந்த நிணங்குருதி மயமாக மீண்டு வருகிறுன். மனைவி பதறி, அஞ்சித் துடித்து நிற்கிறுள்) ஆஹா அற்புதமான உணவு. மனிதனின் கொழுந் தசையும் குருதியும் போற் சுவையான உணவு வேறெங்கே கிடைக்கும்? தேவி. நீ இன்னும் இங்கே நின்று கொண்டிருக்கிறுயா?

தேவி : ஹா என் தெய்வமே, எனக்கும் இந்த வாழ்வு நேர வேண்டுமா? பிரபு, தீவினை விளைவால் அரக்கனுகிய நீங்கள் அக்கிரமம் புரியாமலாவது இருக்கக்கூடாதா? இந்தக் கொடுமைகளையும்

குரூரங்களையும் கண்ணுற் பார்க்கச் சகிக்க வில்லையே. அந்தோ. யான் என்ன செய்வேன். யான் இனி உங்களோடு தங்கியிருக்க முடியாது. யான் அரண்மனைக்குப் போகிறேன்.

அரசன் : என்ன? என்னை இங்கே விட்டு விட்டா? முடியாது. நீ போதலாகாது. வாழ்வு தாழ்விரண்டிலும் மாறுதிணைந்து நிற்பவள் தான் பதிவிரதை.

தேவி : வேந்தே, அநீதி நிகழ்வதைப் பார்ப்பதும் பார்த்துத் தடைசெய்யாமல் இருப்பதும் தரும விரோதமன்றோ? நீங்கள் புரியும் கொடுமைகளைத் தடுக்க என்னால் இயலாதபோது, நான் இங்கிருந்து பழி சுமப்பதா? முடியாது. யான் வருகிறேன். தெய்வம் உங்களை நல்லவராக்கி மீட்டும் எனக்கு நல்கும். (போகிறாள்)

அரசன் : ஆ, நீ போகிறாயா? போ, போ, ஆனால் இதை நினைவில் வைத்துக்கொள். பதியில்லாமற் கதியில்லை.

(நடுத்திரை விடப்படுகிறது)

உதங்கன் பாடிக்கொண்டு வருகிறான்.

அரசன் : (பாடிக் கொண்டு வரும் உதங்கனைக் கண்டவுடனே) ஆ, இன்று மூன்று சாமமாகியும் ஒரு மனிதனையுங் காணாது இருந்த எனக்குத் தெய்வந்தான் அநுக்கிரகம் புரிந்தது. அதோ ஒருவன். டேய் நில். அழகான ஒரு முனிப்பயல். நில்லடா வென்றால் நழுவப் பார்க்கிறாயா? (ஓடிவருகிறான்)

உதங் : அரக்கனே, என்னையா நிற்கச் சொன்னாய்? குருவின் புனித கருமமொன்றை நிறைவேற்றப் போய்க்கொண்டிருக்கும் என்னைத் தடை செய்யாதே.

அரசன் : ஆகா அந்தணப் பயலே, நீ எக்கருமத்துக்குப் போனாலும் எனக்கென்ன? நீ என் உணவு. நீண்ட நேரமாகப் பசியால் வாடியிருந்த என் பசி நீக்குவதற்கென வலிய வந்த உன்னை எப்படி நான் விடமுடியும்? உன்னைத் தின்னப் போகிறேன். (கிட்ட நெருங்குகிறான்)

உதங் : அரக்கனே, விலகிச் செல். நான் நாடிச் செல்லும் கருமம் புனிதமானது. அது விரைவில் முடிதல் வேண்டும்.

அரசன் : என்ன சொன்னாய் முனிப்பயலே? என்னையா விலகி நில் என்றாய்? நான் யார் தெரியுமா? மித்திர சக்கிய அரசன். என்பெயர் கேட்டாலே தேவரும் நடுங்குவார்களே.

உதங் : என்ன சொல்கிறாய்? நீ...... நீ மித்திரசக்கியனா? (நெருங்கி உற்றுப் பார்த்து) ஆம் நீ அரசனே. உலகு புகழ உயிர்காத்த உத்தம வேந்தனே, மித்திரசக்கியனே, நீ நீடுவாழ்க. நான் உன்னையே தேடிவந்தேன். என் குருவின் திருவருள் உன்னை என்னிடம் வலிந்து கொணர்ந்து விட்டது.

அரக்கன் : முனியே, சாதுரியப் பேச்சினால் என்னை மயக்கப் பார்க்கிறாய். எனக்கு வடவைத் தீ போல மூண்டெரியும் வயிற்றுப் பசியைத் தீர்க்க நீ வந்தாய். தப்பிச் செல்ல விடமாட்டேன்.

உதங் : வேந்தனே, சர்வகலை ஞானங்களும் உணர்ந்தவனென நின்னைப்பற்றி யான் கேள்வியுற்றேன். அதிதிகட்கு விருந்தருத்தியபின் புசிக்கும் அரிய நோன்பின் நீங்காத அறச்செல்வனல்லவா? நீயா தேவகாரியமாகச் சிறந்த குருபணியைச் செய்யவொட்டாமல் தடுக்கிறாய். அரசனே நான் நாடி வந்தது நின்னையேதான். தயை கூர்ந்து நான் கூறுவதைக் கேள்.

அரக்கன் : முனிவரே, அதிதி பூசையினால் நான் பட்ட அவலந்தான் இந்தக்கோலம் உண்ணப் படைத்த அன்னத்தில் மின்னித் துவண்ட ஒரு தலைமயிர் காரணமாக அன்னம் புசித்த அந்தணன் சபிக்க நான் இக்கதியடைந்தேன். எனக்கோ பசி தாங்க முடியவில்லை. உம்மைக் கொல்லவே போகிறேன்.

உதங் : வேந்தனே, என்மேனி உன் பசியைத் தீர்க்குமானால் இதோ இதைப் பிளந்து தின். ஆனால்,

அரக்கன் : என்ன ஆனால் அந்த அந்தணன்போல நீயும் சாபமிடுவாயோ?

உதங் : இல்லையில்லை. என் உடம்பு குருபணியைச் செய்வதற்கென ஒப்புக் கொடுக்கப்பட்டது. அப்பணி உன்னாலேதான் நிறைவுற வேண்டும். அது நிறைவுபெற்ற பின் நான் உனக்கு உணவாகிறேன். இது சத்தியம்.

அரக்கன் : ஹ ஹ ஹா... இப்படிக் கூறிவிட்டு நீ போகப் பார்க்கிறாயா? யாராவது தனக்ககப்பட்ட உணவைக் கை விடுவார்களா? அது மட்டுமா? என்னை நீங்கிச் சென்றபின் நீதான் மீண்டும் வருவாயா? ஏமாற்றப் பார்க்கிறாயா முனியே?

உதங் : வேந்தனே, மகான் பயிலவருடைய மாணவன் யான். வேத ஒழுக்கம் தவறாத சத்திய விரதன் யான். சத்தியந் தவறேன். தவறினால் எரிவாய் நரகம் என்னை விழுங்குவதாக. அரசனே, என்னை நல்வாழ்வில் நிலை நிறுத்திய குருநாதருக்குத் தட்சிணை செலுத்த விரும்பினேன். தட்சிணைப் பொருளாக யான் தரக்கூடியது யாதெனக் கேட்டேன். அவர் தமக்கு யாதும் வேண்டியதில்லையென்றும் தம் பத்தினி விரும்பும் பொருளைக் கொடுக்குமாறும் பணித்தார். அந்த அன்னையார் விரும்பிய பொருள் நின்னிடம் இருக்கிறது.

அரக்கன் : என்னிடமா? நான் தின்று குவித்த மனிதர்களின் எலும்புக் குவியல்கள்தான் என்னிடம் இருக்கின்றன.

உதங் : அரசனே, என் குருமாதா விரும்பிய பொருள் நின் மனைவியிடம் இருக்கிறது. அதுதான் உன் மனைவி காதிலே விளங்கும் சீவரத்தினப் பொற்குழை. அதனை நீ பெற்று எனக்கு நல்க வேண்டும். நீ செய்யும் இந்தத் தானம் சற்காரியத்திற்குப் பயன்படுமென்பதைத் தெளிவாயாக.

அரசன் : முனிவரே, வந்தடைந்தோர்க்கெல்லாம் குறிப்பறிந்து அவர் வேண்டும் பொருள் வழங்கிய வாழ்வுடையேன் யான். இன்று நீர் இரந்து கேட்கும் நிலையில் யான் இருக்கிறேன். சுவாமி, அரண்மனையில் என் மனைவி இருக்கிருள். அவளிடம் சென்று நான் உரைத்ததாகக் கூறிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உதங் : உதார குணமுள்ள உத்தமவேந்தனே, இதோ சென்று பெற்று வருகிறேன்.

(போகிருன்)

காட்சி 5

இடம் : அரண்மனை

காலம் : முற்பகல்

பாத்திரம் : அரசி, உதங்கன், தட்சகன்.

நிகழ்ச்சி : அரசி இறை வணக்கத்திலிருக்கிறாள்.

உதங் : தீர்க்க சுமங்கலியாய் வாழ்க.

தேவி : ஆ. முனிபுங்கவரே, வரவேண்டும். இப்பீடத்தில் அமர்ந்து அடியாள் நலிவுதீர நன்மார்க்கங்களை உபதேசிக்க வேண்டும்.

உதங் : அரசமாதேவிக்கு அனைத்து நலங்களும் பெருகுக. அம்மணீ யான் பயிலவமுனிவரின் மாணவன். அவருக்குக் குருதட்சிணையாகக் கொடுப்பதகுரிய பொருள் ஒன்றை நாடி உன்னிடம் வந்தேன். கானகத்தே உருமாறி நிற்கும் உன் பதியின் அநுமதி பெற்றே வந்தேன்.

தேவி : சுவாமி, இந்த அரண்மனைப் பொருளெல்லாம் உங்கள் போன்ற பெரியார்களுக் குரியவையே. அடிகளார் விரும்பும் பொருள் யாதென அடியேன் அறியலாகுமா?

உதங் : அரசமாதேவியே, என் குருமாதாவுக்கு நீ அணிந்திருக்கும் சீவரத்தினப் பொற்குழையைக் குருகாணிக்கையாகப் பெற்றுப் போகவே இவ்விடம் வந்தேன்.

தேவி : ஆ, என்னிடம் உள்ள பொருளையே கேட்டீர்கள். இதோ தருகிறேன். என் பொருள்கள் தேவ காரியத்துக்குப் பயன்படும் தகுதியுடையன என்பதை அறியும் போது என் அகம் குளிர்கிறது. (கழற்றிக் கொண்டு) இதோ அந்தப் பொற்குழைகள். (நீட்டித் தயங்கியவாறு) சுவாமி பொறுத்தருள வேண்டும். என்பதியின் அநுமதியை நீங்கள் பெற்றீர்கள் என்பதைத் தமியேன் எவ்வாறு அறிவேன்? குணமாற்றம் பெற்றிருக்கும் என் கொற்றவர் அநுமதி தந்திருப்பார் என்று நான் நம்புவதெங்ஙனம் சுவாமி? ஏதாவது ஓர் அடையாளம் தருவீர்களானல்...

உதங் : ஆம் அம்மணி, உங்கள் ஐயம் நியாயமானதே. இதோ உன் பதியிடம் சென்று அடையாளம் பெற்று வருகிறேன். (போகிறன்)

அரசி : (தனிமையில்) ஆ என் நாயகர் இத் தபசிக்கு அநுமதி வழங்கியிருப்பாரா ? நற்குணமுள்ளவராக மாறினலன்றி அங்ஙனம் செய்திருக்க மாட்டாரே. தெய்வமே, என் மனத்தின் ஆவல் நிறைவேற என் கணவர் தம் சுயநிலைக்கு மீள வழி செய்ய மாட்டாயா?

உதங் : (மீண்டுவந்து) அம்மணி. இதோ நின் கணவர் கூறிய குறிப்புமொழி. பதியில்லாமற் கதியில்லை.

தேவி : பதியில்லாமற் கதியில்லை, ஆம் சுவாமி உணர்ந்தேன். என் நாயகரின் அமுத வாக்கியம் என்னை நம்பச் செய்துவிட்டது. இதோ என் காதணிகள். சுவாமி.

உதங் : அரசியார் கூறவேண்டிய யாவையுங் கூறுங்கள்.

தேவி : மாதவப் பெரியோய் இந்தக் குழையிலுள்ள மணிகள் நாகலோகத்திலுள்ளவை. எம்மீது அன்பு நிறைந்த ஒரு பெரியார் எமக்கு வெகுமதியாக இவற்றை நல்கினார். இவை பூலோகத்தில் இருத்தலாகாதென நாகலோகத்தார் எண்ணங் கொண்டு இவற்றை எதுவிதத்திலும் கவர்ந்து செல்ல எண்ணியுள்ளார்கள்.

உதங் : ஆ. அப்படியா?

தேவி : ஆமாம், ஆகவே இவற்றை மறந்தாயினும் தரையிலோ, வேறிடங்களிலோ வைத்தலாகாது. பரிசுத்தமான செயலும் நினைவும் வாழ்வுமுடையவரன்றிப் பிறர் எவரும் இவற்றை அணிதலாகாது. உங்கள் குருமாதா சிரேஷ்டம் மிக்கவர்கள். அவர் இவற்றை அணியத் தகுதியுள்ளவர்கள் ஆயினும் இம்மணிகள் பற்றிய பாதுகாப்பில் அவர் கருத்தூன்றியிருத்தல் வேண்டுமென அவரிடம் சொல்லி வைத்தல் வேண்டும்.

உதங் : அப்படியே சொல்கிறேன் அம்மணி. உங்கள் வாழ்வு சுபீக்ஷமடைய என் குருநாதரின் பேரருள் உமக்குக் கிடைப்பதாக. யான் சென்று வருகிறேன்.

(நடுத்திரை மூடப்படுகிறது,

அரக்கன் தோன்றுகிறான்)

உதங் : (வந்துகொண்டே) மன்னவனே, உன் மதித்தற்கரிய உதார குணத்தால் எனக்குக் குருகாணிக்கை கிடைத்தது. ஆம் பெறுதற்கரிய மகிமை வாய்ந்த இந்தச் சீவரத்தினப் பொற்குழை என் குருமாதாவின் பெருவிருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு எனக்கு மனநிறைவும் தரப்போகின்றது.

அரசன் : முனிவரே, நீர் புண்ணியசீலர், மகாத்துமா. ஆதலால் இப் பொற் குழைகள் உமக்குக் கிடைத்தன. நலமே சென்று வாருங்கள்.

உதங் : அரசனே, நான் வாக்கு மீறமாட்டேன். என் குருமாதாவிடம் இவற்றை அர்ப்பணித்த பின் ஓடோடியும் வருவேன்; என்னை நம்பு. அதன் பின் என்னைக் கொன்று பசியைத் தணித்துக் கொள்.

அரசன் : ஆ, புண்ணியாத்துமாவே, சத்திய விரதரே நீங்கள் வரவேண்டாம். உங்கள் தரிசன விசேடமே என் இராக்கத வெறியைப் போக்கி விட்டது. நான் புனிதனாகிவிட்டேன். நீங்கள் நலமே சென்று குருதட்சிணையளித்து மகிழுங்கள்.

உதங் : நன்னெறி கடவாத வேந்தனே, உனக்கு நாசம் தந்த தீவினை இன்றோடு ஒழிக. மகாமுனிவராகிய பயிலவரும் பத்தினியும் என் தெய்வமாகவும் பெற்றோராகவும் ஆசாரியராகவும் அமைந்திருப்பது உண்மையானால், மனம் நிறைந்த வந்தனைக்குரிய வராய் நானும் அவரை மதித்து வாழ்கிறேன் என்றால் மித்திர சக்கிய வேந்தனே உன் அரக்க வாழ்வும் கோலமும் நீங்கக்கடவன. நீ முன்போல அதிதி பூசைசெய்யும் அறந்தவறாப் பெருவேந்த னாய் மாறக்கடவாய்.

(அரசன் உருமாறித்தன் சுய கோலங்கொண்டு)

அரசன் : மகாத்துமா உங்களால் என் வாழ்வு பெற்றேன். அடியேன் அரக்கனாகி நின்றுரைத்த அபசார மொழிகளையும் பொறுத்தருள்க. அன்புடனே சென்று வருக.

உதங் : நீயும் மனைவியும் நீடுவாழ்க. நாம் வருகிறோம்.

காட்சி 6

இடம் : வனப்பிரதேசம்.

காலம் : மாலை.

பாத்திரம் : உதங்கர், தட்சகன் (பாம்புரு), தேவன்

நிகழ்ச்சி : உதங்கர் மகிழ்ச்சியோடு போகிறார்.

உதங் : ஆ, அறநெறிப் பயில்வுடைய இந்த மித்திர சக்கியனுக்கு இந்தத் துன்பம் ஏன் நேர்ந்தது? மகா மகிமை வாய்ந்த இந்தச் சீவரத்தினங்கள் அவன் மனைவியின் அணியாக இருந்தபோதும், அவள் பதியாகிய மன்னன் அரக்கனுகும் நிலைமை நேர்ந்ததே. இஃதேன் ஏற்பட்டது? இதுவும் விதியின் அமைப்பா......? இல்லை, இல்லை. இந்த அணிகள் பூவுலகத்தில் இருத்தலை விரும்பாத நாகர்கள் செய்த வஞ்சனையே இது. ஆம், அவர்கள் தான் அதிதி உணவில் தலை மயிர் வீழச் செய்து அரசனை சாபத்துக்குள்ளாக்கினார்கள் போலும். அவர்கள் பிரிந்துவிட்டால் இம்மணிகளைக் கவர்ந்து செல்லுவதிலகுவென எண்ணியிருத்தல் வேண்டும் ஆம், இதுவே உண்மை. ஆதலால் நான் இக்காதணிகளை மிகக் கருத்தோடு பாதுகாக்க வேண்டும்.

(இந்தச் சிந்தனையுடன் உதங்கன் செல்லப் பாம்பு உருவமொன்று பின் தொடர்கிறது.)

ஆஹா அற்புதமான நதிதீரம். இந்த நதிதீரத்திலேயே எனது சந்தியாவந்தனத்தை முடித்துக் கொள்வது நல்லது.

(யாவற்றையும் ஒரு மரத்தடியில் வைத்துவிட்டுச் சந்தியாவந்தனஞ் செய்கிறார். பாம்புருவம் காதணிகளை எடுத்துக்கொண்டு செல்கின்றது.)

உதங் : (எழுந்துவந்து பார்த்து) அந்தோ, குருதேவரே, அடியேன் ஏமாந்து போனேன். ஐயகோ, அரிதிற் பெற்றுவந்த என் குரு தட்சிணைப் பொருள்களை நான் இழந்துவிட்டேனே. குருதேவரே இஃதென் தவக்குறைவினால் நேர்ந்ததா. இனி யான் என்ன செய்யப் போகிறேன்.

ஒரு குரல் : உதங்கமுனிவரே ஏன் பிரலாபிக்கின்றீர். நீர் குருதட்சிணையாகக் கொண்டு வந்த சீவரத்தினப் பொற்குழைகள் பூவுலகத்தில் இருக்கத்தகாதவை. அவை நாகலோகத்திற்கே உரியவை. உரிய இடத்துக்கு அவை கொண்டு செல்லப்படுகின்றன. இனி அவற்றைத் தேடுவது வீண்முயற்சி என எண்ணிக் கொண்டு நும் இருப்பிடத்துக்கு மீள்வீராக.

உதங் : என்ன? என்ன? என் காணிக்கைப் பொருள்களைத் திருடிச் செல்கிறாயா? என்னை வெறுங்கையுடன் மீண்டுபோகச் சொல்கிறாயா? உதங்கன் அவ்வாறு வறிதே மீள்வன் என்பதுதான் உன் எண்ணமா? என் தெய்வமாகிய குருவின் அருள் எங்கே போய்விட்டது. குருதேவா, குருதேவா. (ஓடித் தேடுகிறார். பாம்புருவம் கண்ணிற் படுகிறது) குருட்டுப் பாம்பே, நில் என் குருதட்சிணைப் பொருளைத் தந்து செல். உன்னை விடமாட்டேன். தொடர்ந்து வருவேன். அந்தோ, என் குரு தட்சிணை. என் தெய்வத்தின் காணிக்கை. தேவ காரியத்தில் தீமை செய்யாதே. தந்து செல்.

பாம்புரு : உதங்கமுனியே என்னைத் தொடராதே. தொடர்ந்தாலும் நீ எங்கள் உலகுக்கு வரமுடியாது. மீண்டு செல். (ஒரு பெரும்பிலத்துள் நுழைந்து மறைகிறான்.)

உதங் : ஆ, அந்தகத் திருட்டரவம் சென்றவழி இதோ. நானும் தொடர்வேன். குருதேவர் பேரருளின் முன் இஃதென்னை என்ன செய்யும்? குருபாதமே கதி. (நுழைகிறார். நாகலோகத்திற்கு வருகிறார்.)

பாம்புரு : (எதையோ வாயில் வைத்து ஊதி) என்னைத் தொடர்ந்து வரும் இந்த உதங்கனுக்கு இங்குள்ள பொருளெல்லாம் மறையக்கடவன. இப்பிரதேசம் சூன்யப் பிரதேசமாக அவன் கண்ணுக்கு மாறக் கடவது.

உதங் : அந்தோ, யாதொன்றும் தெரியவில்லையே, என் கண்ணொளி மழுங்கி விட்டதா? எங்கும் பொருளேதுமற்ற சூன்யப்பிரதேசமாகக் காணப்படுகின்றதே. ஆ. இனி நான் என்செய்வேன், குருதேவா, சுவாமி உமது தெய்வப்பணிக்கு இந்த இன்னல் வரலாமா? (பாடுகிறான்.)

தெய்வம் : (தெய்வ உருவமொன்று தோன்றி) மகனே, அஞ்சாதே, தர்மம் அழியாது. குருபணிக்கென உன்னை ஆளாக்கிக்கொண்ட அப்பொழுதே நீ தெய்வத்தின் கடாட்சத்திற்காளாகிவிட்டாய். மகான் பயிலவரிடத்திலே கற்று வேதத் தெளிவு பெற்ற நீ கலக்கமடையலாமா? தர்மவழி தவறாது கடைப்பிடித்த மைந்தனே உன் இன்னல் யாவும் தீரும். இதோ இந்தக் குழலை வாயில் வைத்து ஊது.

உதங் : ஆ, என் ஆபத்து வேளையில் தண்ணளி புரிய வந்த வெண்ணிற மேனியுடையோய், நின் ஆணைப்படியே செய்கிறேன். (ஊதுகிறான்)

(தெய்வம் மறைகிறது. பாம்புருவம் நடுக்கத்துடன் ஓடி வருகிறது.)

பாம்புரு : மகாத்துமாவே, உதங்கமுனிவரே, தமியேனைப் பொறுத்தருள வேண்டும். இதோ தேவரீரது குரு காணிக்கைக்காக அமைந்த சீவரத்தினக்குழைகள்; எடுத்துச் செல்க. பெருமானே, மேலும் அந்தக் குழலை ஊதுதல் வேண்டாம். என் உலகத்தில் இடியும் மின்னலும் பிரளயம் போலத் தோன்றி அழிவு செய்கின்றன. என் ஜாதியாராய நாகரெல்லாம் துடித்துத் துடித்து மாள்கிறார்கள். முனிவர் பெருந்தகையே உங்கள் செயலை நிறுத்துங்கள்.

உதங் : நிறுத்திவிட்டேன். இனி உங்களுக்கு இந்தத் துன்பம் நேராது. நீ செல்லலாம்.

பாம்புரு : பெருமானே, உங்கள் குரு பக்தியை மெச்சினேன். யான் வருகிறேன்.

உதங் : ஹா, என் காணிக்கைப் பொருள் கிடைத்து விட்டது. ஆனால் யான் வெளியேறும் மார்க்கந் தெரிந்திலனே குருநாதா, இதற்கென் செய்வேன்.

தெய்வம் : (மீண்டும் வந்து) உதங்கரே, குருபத்தியிற் சிறந்த கோமானே அஞ்சற்க. எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டும், குருவின் பாதமே கதியாகக் கொண்ட குலையாத திடசித்தமுடையோய், உனக்குத் தெய்வ சகாயமுண்டு. நீ எதிரே தோன்றும் வழியிற் செல்க. உம் குருவின் ஆச்சிரமத்தை அடைவாய்.

உதங் : குருவே, தேவரீரது திருப்பாதமே துணை.

காட்சி 7

இடம் : பயிலவர் ஆச்சிரமம்.

காலம் : பிற்பகல்.

பாத்திரம் : உதங்கன், குரு, குருபத்தினி. மகள்.

நிகழ்ச்சி : குருமாதா அமர்ந்திருக்கிறார். மகள் வருகிறாள்.

மகள் : அம்மா. (அழுகிறாள்)

குருமா : என்னம்மா இது, உன் கணவர் விரைவில் வந்து விடுவாரம்மா, கலங்காதே.

மகள் : ஒரு திங்களில் வருவதாகத்தானே அம்மா உங்களிடம் கூறிச் சென்றார். இன்னும் காணேமே அம்மா. சென்ற இடங்களிலே எத் தகைய ஆபத்துக்கள் அவருக்கு நேர்ந்தனவோ?

குருமா : ஆமாம் ஒரு திங்கள் எனத்தான் கூறிச் சென்றான். மகளே, நான் தான் அவனை அனுப்பிய குற்றவாளி. ஏதோ. உன் கணவருக்கு அவ்வளவு திருப்தி யின்மை இருக்கக்கூடாது. நான் என் செய்வேன். தர்மத்தின் வழி நடக்கும் நின் கணவரின் வேண்டுகோளை நிராகரிக்க என்னால் முடியவில்லை. அநுமதி கொடுத்துவிட்டேன். நீ அஞ்சாதே. அம்மா. அதோ அப்பா வருகிறார். யாவும் அவருக்குரைப்போம்.

பயில : என்ன அன்னையும் மகளுமாக அந்தரங்க ஆலோசனையில் மூழ்கியிருக்கிறீர்கள். ஆமாம் இருவர் முகத்திலும் சோக ரேகைகள் படர்ந் திருக்கின்றன. என்ன காரணம்?

குருமா : சுவாமி, எல்லாம் தெரிந்த தேவரீர் எம்மைச் சோதிப்பது தகுமா? எமது மைந்தன் உதங்கன் குருதட்சிணைக்குரிய பொருள் கொணரச் சென்று

இன்று ஒரு திங்கள் ஆகின்றது. சென்றவிடத்தில் என்ன நேர்ந்ததோ? என்ன செய்கிறானோ?

பயில : ஆஹா. யாவும் புரிந்தேன். அன்னைக்கு ஜீவ ரத்தினக் குழை வரவில்லையேயென்று ஏக்கம். மகளுக்குக் கணவனைக் காணவில்லையே என்ற கலக்கம். மாதே, மகளே, உதங்கனுக்கு யாதும் நேராது. அஞ்சாதீர். அவன் விரைவில் வருவான்.

உதங் : சுவாமி, அன்னையே, உதங்கன் பணிகிறேன். அன்னையே பெருமாட்டியின் கருணையினாலே, குருதேவர் காணிக்கைப் பொருளைப் பெற்று வந்து விட்டேன். எம்பெருமானே, அன்னையே, என்னை ஆளாக்கி உய்நெறி காட்டிய பெருந்தகையீர், இதோ தேவரீரது திருவடிகளில் உதங்கன் சமர்ப்பிக்கும் குருதட்சிணை. இதனை உவந்தேற்றுத் தமியேனை ஆசீர்வதித்தல் வேண்டும்.

பயில : எமது ஒப்பற்ற மாணவனே, எழுந்திரு. நின் காணிக்கையை நாம் ஏற்றுக் கொண்டோம். உதங்கா மகனாக இங்கிருந்து சென்ற நீ மகானாக மீண்டுவந்திருக்கிறாய். நின் தர்மநெறி வாழ்வு கண்டு பெரிதும் மகிழ்ந்தோம். வேண்டும் வரம் எதுவாயினும் கேள் தருகிறோம்,

உதங் : சுவாமி, தேவரீரது பேரருளொன்றே தமியேனுக்குக் கிடைத்தற்கரிய பெருநிதியாகும். அது மாறாதிருக்கும் வரந்தருக. சுவாமி ஒரு சந்தேகம். நான் கொணர்ந்த ஜீவரத்தினக் குழைகளை நாகமொன்று கவர்ந்து சென்றது. அதைத் தொடர்ந்து நானும் சென்றேன். பாதாள உலகில் யாதும் தெரியாது மயங்கி நின்று கதறினேன். அவ்வேளை ஒரு வெண்ணிற வடிவம் தோன்றி எனக்கு உதவி புரிந்தது. அந்த உருவத்துக்குரியவர் யாரென்பதைத் தேவரீர் உரைத்தருள வேண்டும்.

பயில : மைந்தனே, குருகாணிக்கை பெறுதலாகிய தெய்வப்பணியில் திடமனத்தோடு முயன்ற உனக்குத் தேவர்களே உதவி செய்தார்கள். வெண்ணிற உருவுடன் தோன்றியவன் இந்திரன்.

உதங் : சுவாமி, என் ஐயந்தீர்ந்தது. இந்த அருளிப் பாடொன்றே எனக்குப் பெறற்கரும் பேறு.

பயில : அன்னையே, உன் மைந்தன் உன் விருப்பப்படி கொணர்ந்த காணிக்கைப் பொருளை ஏற்று அவனை ஆசீர்வதிப்பாயாக.

குருமா : என் பெறலரும் புதல்வனே, நின் காணிக்கையை உவந்து கொண்டோம். நீ நீடுவாழ்க.

மகள் : சுவாமி, அடியாள் வணங்குகிறேன்.

குருமா : மகளே, நிலவுலகுள்ளவரையும் நீங்காத புகழோடு நின்பதி மீண்டு வந்துவிட்டான். உன் கலக்கம் தீர்வாயாக. அவன் புகழ் பெறக் காரணமாய் அமைந்த ஜீவரத்தினப் பொற்குழைகள் இவை தாம் அம்மா. இவை உனக்கேதான் அணிந்து கொள்.

உதங் : தாயே, இது தங்களுக்குரியதல்லவா?

குருமா : (சிரித்து) மகனே, இதனை நான் அணியுந் தகுதி யுடையேனு பார். பற்றில்லாத இயல்பும், முதுமையும் தாங்கியிருக்கும் யான் இவற்றை அணிவதற்காகவா உன்னைப் பெற்று வரச் செய்தேன். இல்லை, மகனே இல்லை. எமது மகனுகிய நீ, உன் மனைவிக்கு நின் முயற்சியாற் கொணர்ந்தளித்த பொருளாக இது அமைய வேண்டும் என்பதே என் விருப்பம். அதை மனத்துட் கொண்டுதான் நின்னை அனுப்பினேன்.

பயில : அன்னையே, மிக நல்ல முடிவு. பாம்பறியும் பாம்பின் கால். பெண் உள்ளத்தைப் பெண்களே அறிவர். துறவிகளாகிய நாம் யாதறிவோம்? உதங்கா, அன்னையின் மனம் விரும்பியவாறு செய்.

உதங் : (காதணிகளை பெற்று மனைவியிடம் கொடுக்கிருன்)

இருவரும் : பெரியோர்களே, தமியேங்களை ஆசீர்வதியுங்கள்.

குருமா : மகனே, மாநிலமெல்லாம் மகாத்மா உதங்கர் என வணங்கி ஏத்த நீ நீடுழி வாழ்க. மகளே, நீ நின் பதிக்கேற்ற வாழ்க்கைத் துணையாய் வாழ்ந்து சிறப்பாயாக.

பயில : எனதரிய மாணவனே, குருவுக்குச் செயற்பால கடன்களிலே தவருது, கொடுஞ் சோதனைக் குள்ளாக நேர்ந்த போதும், கொள்கை தவருது குரு பத்தியின் சிறப்பை உலகறிய உணர்த்தி நின்ற உத்தமனே நீ நீடுழி வாழ்க. உலகம் உள்ள அளவும் குருபத்திக்கு உதங்கன் என நின் பெயர் நின்று நிலைபெறுக.

★

பரிசு

ப்படி
ற்று

கயை

ழோடு
லக்கம்
மாய்
இவை
ணிந்து

தகுதி
ட்டும்,
ற்றை
வரச்
எமது
யாற்
மைய
அதை
னன்.
றியும்
களே
ம்?
செய்.
ருண்)
கள்.
என
நின்
ழ்ந்து

பால
கனைக்
ருது
ர்த்தி
லகம்
நின்
★

சிவநெறிக் கழகம்
நகுலேஸ்வர தேவஸ்தானம்
கீரிமலை
காங்கேசன்துறை

243

கவிஞர். செ. கதிரேசர்பிள்ளை

தமிழெனும் மாதின் தவநிறை புதல்வன்
அமிழ்தினும் இனிய அன்பு சேர் குணத்தன்
நன்னூல் முதலாம் பன்னூ லாரும்
ஆசாற் கென்றே அமைந்ததாம் நெறியிற்
சற்றும் விலகாச் சால்பு சேர் பெரியன்
விண்ணக அமுதம் ஈதென விளக்கும்
விதத்தினில் அமைந்த கவிதைகள் படைக்கும்
கற்பனை மலிந்த பொற்பமை கவிஞன்
மேடைகள் தோறும் தமிழ் மழை பொழிந்தே
செவிப்பயன் விளைக்குஞ் சொல்லின் செல்வன்
மா ஜனத் தாயின் புகழையே விரும்பி
அல்லும் பகலும் அயராது ழைத்த
தூய உள்ளத்துத் தோன்றல், சிறந்த
பாரதம் என்ற ஓர் கடல் மூழ்கிச்
சீரிய கருத் தெனும் நித்திலம் எடுத்தே
காலமாம் பாவையின் தேவையை அறிந்தே
கோல மார் இந்நூல் படைத்தனன் இவன்றான்
குரு கவி என்ற ஒரு கவி புகழ்ந்த
வரு கவிச் செல்வன் வண்டமிழ் வல்லோன்
சீர்க் கதிரேசர்பிள்ளை நல்லோனே.

— புலவர் ம. பார்வதிநாதசிவம்.